விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 பங்குனி 10 திங்கட்கிழமை (24.03.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 095

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

**✹சித்திரவதைகள் ✹பாலியல் துஷ்பிரயோகம் ✹மத தாக்குதல்கள்**

# மோசமான நடவடிக்கைகள் இலங்கையில் நீடிக்கின்றன

## பிரிட்டன் மனிதவுரிமை அமைப்பு குற்றச்சாட்டு

(லண்டன்) இலங்கையில் உள்நாட்டு யுத்தம் முடிவுக்கு வந்து ஐந்து ஆண்டுகள் ஆகப்போகும் சூழ்நிலையிலும், அங்கே மோசமான மனித உரிமை மீறல்களும், சித்திரவதைகளும், பாலியல் துஷ்பிரயோகங்களும், மதங்கள் மீதான தாக்குதல்களும் தொடர்ந்து நடப்பதாக பிரிட்டனில் இருந்து இயங்கும் மனித உரிமை அமைப்பொன்று குற்றம் சாட்டியுள்ளது. (19ஆம் பக்கம் பார்க்க)

## மகிந்த அரசாங்கம் ஒரு இறந்த மரம் -ரணில்



(கொழும்பு)
மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை வெளியேற்றும் நோக்கில் மே மாதம் முதல் பாரிய ஆர்ப்பாட்டங்களை தொடங்க உள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கத்திற்கு எதிரான இந்த ஆர்ப்பாட்டங்களை தமது கட்சிமூன்றுமூலோபாய கட்டங்களாக 20 ஆம் பக்கம் பார்க்க..

## வடக்கில் மீண்டும் விடுதலைப்புலிகள்

### அடியோடு ஒழிப்பேன் என்கிறார் ருவான்

(யாழ்ப்பாணம்)
ஐ.நா அமர்வில் இலங்கைக்கு எதிராக எதிர்வரும் 27ஆம் திகதி அமெரிக்காவினால் வலுவானதொரு பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக கூறப்பட்டு வரும் நிலையில் வடக்கில் வாழும் தமிழ் பேசும் மக்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினரின் திடீர் சுற்றி வளைப்பு நடவடிக்கைகளும் பயங்கரவாத குற்றத்தடுப்புப்பிரிவினரின் கைது நடவடிக்கைகளும், பொலிஸாரின் தீவிர விசாரணைகளும் நாளுக்கு நாள் அதிகரித்துவருகின்றன.

இந் நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாகும நிலையொன்று தோன்றியுள்ளது எனவும் தேசிய பாதுகாப்பை கருத்திற்கொண்டு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை இராணுவத்தினர் மேற்கொண்டு வருவதாக இராணுவப் பேச்சாளர் ருவான் வர்ணகுல



சூரிய தெரிவித்துள்ளார். ஒரு புறம் இராணுவத்தில் தமிழ் பெண்களையும் தமிழ் இளைஞர்களையும் இணைப்பதில் அதிக ஆர்வம் காட்டிவரும் இராணுவத்தினர் திடீர் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு மனித உரிமை செயற் 20 ஆம் பக்கம் பார்க்க..

## இரும்பு வியாபாரி ரி.ஐ.டியினரால் கைது

(யாழ்ப்பாணம்)
பயங்கரவாத குற்றத்தடுப்புப் பிரிவினரால் (ரி.ஐ.டி.) வட்டுக் கோட்டையில் நேற்று முன்தினம் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இரும்பு வியாபாரியான மன்னாரைச் சேர்ந்த காந்தலயன் (வயது 22) என்பவரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவார்.

இதேவேளை யாழ்ப்பாணத்திலுள்ள ரி.ஐ.டி. அலுவலகத்தில் வைத்து குறித்த நபர் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாக தெரி 20 ஆம் பக்கம் பார்க்க..

## விரிவடைகிறது இராணுவ சோதனை

(தென்மராட்சி)
வன்னிப்பகுதியில் இதுவரை இடம்பெற்றுவந்த தேடுதல் வேட்டைகள் மற்றும் பதிவுகள் யாவும் யாழ். குடாநாட்டுக்கு விரிவடைந்துள்ளன.

இதன் ஒரு பகுதியாக தென்மராட்சி கொடிகாமம் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள் தொடர்பான தகவல்களை விசேட அதிரடிப் படையினர் திரட்டிவருவதாக 19 ஆம் பக்கம் பார்க்க..

### இரா.சம்பந்தன் தவிர

## முக்கிய தமிழ்த் தலைவர்கள் ஜெனிவாவிற்கு படையெடுப்பு

(கொழும்பு)
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்களில் இரா.சம்பந்தன் தவிர ஏனையோர், ஜெனிவாவுக்குப் படையெடுத்துள்ளனர்.

ஐ.நா மனித உரிமைகள்பேரவையில், இலங்கைக்கு எதிரான தீர்மானம், நாளை மறுதினம் 26-ம் திகதி புதன்கிழமை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளால் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

அன்றைய தினம் இலங்கை தொடர்பான விவாதமும் நடக்க ஏற்பாடாகியுள்ளது.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் மீதான வாக்கெடுப்பு பெரும்பாலும், 28-ம் திகதி நடக்கலாம் என்று எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே, 20 ஆம் பக்கம் பார்க்க..

## ஜெனிவாவில் ஏற்பட்டுள்ள பிளவு இலங்கைக்கு கிடைத்த வெற்றி



### பெருமிதப்படுகிறார் மகிந்த சமரசிங்க

(கொழும்பு)
ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான பிரேரணை மீதான வாக்கெடுப்பில் உள்ளக ரீதியில் ஏற்பட்டுள்ள பிளவானது இலங்கைக்கு கிடைத்த ஒரு வெற்றியின்வடிவம்என அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் விசேட மனித உரிமை பிரதிநிதியும் அமைச்சருமான மகிந்த சமரசிங்க ஜெனிவாவில் இருந்து நாடு திரும்பியுள்ளார். நாடு திரும்பிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த பிளவானது போருக்கு பின்னரான இலங்கையின் சாதனைகள் சர்வதேச சமூகத்திற்கு வெற்றிகரமாக கொண்டு செல்லப்பட்டுள்ளது என்பதை காட்டுகிறது.

இலங்கை பிரச்சினைதொடர் 20 ஆம் பக்கம் பார்க்க..

## 'எனது அம்மாவை மீட்டுத்தாங்கோ'

### சிறுமி விபூஷிகா உருக்கம்!

(கிளிநொச்சி)
எப்படியாவது எனது அம்மாவை மீட்டுத்தாங்கோ என்ற சாரப்பட அண்மையில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைதுசெய்யப்பட்டு, தற்போது மகாதேவா ஆச்சிரமத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள சிறுமி விபூஷிகா எழுதியதாக ஒரு கடிதம் முகப்புத்தகங்களில் உலா வருகின்றது.

தனது சகோதரர்களையும் இழந்து தற்போது தாயையும் பிரிந்து தவிக்கும் சிறுமி விபூஷிகாவின் அந்தக் கடிதம் வாசிப்போரின் நெஞ்சை உருக்குகிறது.



எனினும் குறித்த கடிதம் விபூஷிகாவால்தான் எழுதப்பட்டதா என்பதை 20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்**

# சந்திரிகாவின் அரசியல் யுகம் எப்போதோ முடிந்து விட்டது - எஸ்.பி

(கொழும்பு)

2000 ஆம் ஆண்டுடன் சந்திரிகாவின் அரசியல் யுகம் முடிந்து விட்டது. இதற்குமேல் அவர் அரசியலில் மோகம் கொண்டு பிரவேசிப்பாரானால் அத்தனகல பிரதேச சபைக்கே பிரவேசிக்க வேண்டும் என உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை உடுநுவரயில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு பேசுகையிலேயே எஸ்.பி. திஸாநாய்க்க இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சந்திரிகா அம்மையாரின் அரசியல் 2000 ஆம் ஆண்டுடன் நிறைவடைந்துவிட்டது. அவரின் 11 வருட ஆட்சிக் காலத்தில் ஆட்சி இருள் சூழ்ந்ததாகவே காணப்பட்டது. அதனுடன் முடிவடைந்த ஆட்சியை மீண்டும் அவரால் மீட்க முடியாது. அந்த இருள் சூழ்ந்த யுகம் மக்களுக்கு நன்கு தெரிந்ததாகும்.

இன்று நாடு பல்துறைகளிலும் அபிவிருத்தி கண்டு வருகிறது. மக்கள் சுதந்திரமாக எந்த திசைக்கும் சுதந்திர மூச்சுடன் சென்று வரமுடியும்.

இவ்வாறான நிலையில் சந்திரிகா மீண்டும் அரசியலில் பிரவேசிக்க ஆர்வம் கொள்வாரானால் அது கம்பஹா மாவட்டத்தில் சாதாரண பிரதேச சபைக்கு வருவதற்கான முயற்சியாகவே இருக்கும் என்றும் குறிப்பிட்டார். (செ-6)

# ஜெனிவா எதிர்ப்பை சமாளிக்க ஆர்ப்பாட்டங்களை நடத்துவது தீர்வாகாது

## ஆணைக்குழு பரிந்துரைகளை அமுல்படுத்துவதே வழி - யோகராஜன்

(கொழும்பு)

அமெரிக்காவுக்கும் இங்கிலாந்துக்கும் எதிராக ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடத்துவதால் ஜெனிவா பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது. நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை அமுல்படுத்தி இனப்பிரச்சினைக்கு இதயச்சுத்தியுடன் தீர்வை ஏற்படுத்துவதன் மூலமே நிலையான சமாதானத்தையும் இன ஐக்கியத்தையும் உருவாக்க முடியும்.

இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சியின் நுவரெலியா மாவட்ட அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முற்போக்கு சங்கத்தின் நுவரெலியா மாவட்ட பணியத்தில் நடைபெற்ற தோட்டக் கமிட்டி நிர்வாகிகள் தெரிவு கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றிய பொழுதே யோகராஜன் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு யோகராஜன் தொடர்ந்து உரையாற்றுகையில் தமிழ் சமூகத்திற்கு எதிராகவும் சமயங்களுக்கு அச்சுறுத்தலாகவும் பேரினவாத சக்திகள் தாக்குதல்களிலும் அச்சுறுத்தல்களிலும் ஈடுபட்டு வருவது சமூக மோதல்களுக்கே வழிவகுக்கும்.

கோவில்கள், பள்ளிவாசல்களை தாக்கி அழிப்பதற்கு நினைக்கும் இனவாத துறவிகளால் புனித சமய ஒழுக்கங்கள் கேலிக்குள்ளாக்கப்பட்டு வருகின்றது.

தோட்டத் தொழிலாளிகள் உழைப்புக்கு ஏற்ற ஊதியமின்றி பொருளாதாரச் சுமையினாலும் நிர்வாக கெடுபிடிகளாலும் அல்லல் படுவதைப் பற்றி அரசாங்கமோ தமிழ் அரசியல்வாதிகளோ கவலைபடாமல் யாகம் நடத்திக் கொண்டிருப்பதும் இனவாத அரசாங்கத்தை ஜெனிவா பிரச்சினையிலிருந்து காப்பாற்றுவதற்கு ஊடக மகாநாடு நடத்துவது இனத்திற்கு எதிரான சுயநல நடவடிக்கைகளாகும்.

வன்னி யுத்தத்தில் உயிரிழந்த தோட்டப்புற இளைஞர்களை பற்றியோ கைது செய்யப்பட்டு நீண்டகாலமாக சிறைவைக்கப்பட்டுள்ள இந்திய வம்சாவளி இளைஞர்களைப் பற்றியோ அக்கறையோ ஆதங்கமோ படாதவர்களைப் பற்றி தமிழர் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும்.

சிறையில் இருப்பவர்களை விடுவிப்பதற்கு எவருக்குமே அக்கறையில்லை. ஆனால் வேகமாக தமிழரகளுக்காக அறிக்கை விடுப்பவர்களும் அமைச்சுப் பதவியில் சுகம் காண்பவர்களும் தமிழ் மக்கள் இருபபதையே மறந்து போனவர்களாக மௌனம் சாதிக்கின்றார்கள்.

இந்திய வம்சாவளி தமிழ் இளைஞர்களின் சிறைவாசம் மனித உரிமை மீறல் என்ற அடிப்படையில ஜெனிவாவிற்கு கொண்டு செல்லப்படுதல் வேண்டும் என்றார் யோகராஜன். (செ-6)



2ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 . 03 . 1927

மறைவு 15 . 03 . 2012

அமரர்

கந்தையா கமலம்

ஈராண்டுகள் சென்றாலும்
உங்கள் இனிய நினைவுகள்
எம் மனதை விட்டு அகலவில்லை
இனி எப்போது கண்போம் உம்மை!

இல-14, கற்குள லேன்,
கொட்டடி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள்
நினைவுடன்
குடும்பத்தினர்

(C-6826)


# இராணுவ பயிற்சியில் துன்புறுத்தல் வீடியோ ஆதாரம் உண்மையானதே!

## ஒப்புக்கொண்டார் இராணுவப் பேச்சாளர்

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் பெண் இராணுவ பயிலுநர்களுக்கு பயிற்சி கொடுக்கும்போது, பயிற்சியாளர்கள் அவர்களை கேலி செய்து திட்டி, தாக்கி துன்புறுத்துவதாக இணையதளங்களில் பரவியுள்ள வீடியோ காட்சிகள் உண்மைதான என்று இலங்கை இராணுவம் கூறியுள்ளது.

குறித்த பயிற்சி பெறும் இராணுவ வீராங்கனைகள் நடத்தப்பட்ட விதம தொடர்பில் இராணுவ சட்டவிதிகளுக்கு முரணாக நடந்துகொண்ட இராணுவ வீரர்களுக்கு இராணுவ சட்டத்தின் கீழ் தண்டனை அளிக்கப்படும் என்றும் இலங்கை இராணுவம் கூறியுள்ளது.

கடந்த 2012-ம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் அனுராதபுரத்தில பெண் இராணுவ அணியொன்றுக்கு பயிற்சி அளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட வீடியோ காட்சி இதுவென்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார்.

இராணுவ வீரர்கள் தங்களின் இராணுவ பயிற்சி விதிமுறைகளை மீறி பயிலுநர்களுக்கு தண்டனை கொடுத்துள்ளனர். தவறிழைத்தவர்களுக்கு இராணுவ சட்டத்தின்படி தண்டனை கொடுக்கவும் என்றும் இனிமேல் இப்படியான சம்பவமொன்று நடக்காதிருக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் இராணுவப் பேச்சாளர்.

வீடியோவை எடுத்தவரும் இருக்கிறார். அதில் வருகின்ற இராணுவ வீரர்களும் தாங்கள்தான் என்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதன் மூலம் வீடியோ உண்மையானது தான் என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

**இராணுவத்தில் தமிழ்ப் பெண்கள்**

இலங்கை இராணுவம் மனித உரிமைகளை மீறியுள்ளதாக சர்வதேச மட்டத்தில் குற்றச்சாட்டுக்கள் இருந்து வருகின்றன.

இலங்கை இராணுவத்தின் மீது மேலும் மேலும் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவதை தடுப்பதற்கு இலங்கை இராணுவம் நடவடிக்கை எடுக்கவில்லையே என்று இராணுவப் பேச்சாளரிடம் கேட்டபோது,

இலங்கை இராணுவம் மனித உரிமை மீறல்களை அனுமதிக்கும இராணுவம் அல்லவென்பது இந்த வீடியோ தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதன் மூலமே உறுதியாகிவிட்டது என்றார் ருவான்வணிகசூரிய.

இலங்கையில் முன்னெப்போதும் இல்லாதவாறு தமிழ்ப் பெண்களும் இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இப்போது வெளியாகியிருக்கின்ற காட்சிகளைப் பார்க்கும்போது, தமிழ்ப் பெண்கள் இராணுவத்தில் இணைவதற்கு அச்சப்படுவார்களே என வினவிய போது,

அது உண்மையில் தவறான கருத்து. இப்போது இலங்கை இராணுவத்தில் நூற்றுக்கும் அதிகமான தமிழ்ப் பெண்கள் பணியாற்றுகிறார்கள். தங்களுக்கு எப்படி இராணுவத்தில் பயிற்சி அளிக்கப்பட்டது என்று அவர்களுக்குத் தெரியும் என்றார் பிரிகேடியர் வணிகசூரிய.

தற்போது வெளியாகியுள்ள வீடியோ காட்சியில் இருப்பது தமிழ்ப் பெண்கள் அல்ல என்றும், தமிழ்ப் பெண்களை சேர்த்துக் கொள்ள முன்னமே இந்த சம்பவம் நடந்துள்ளது என்றும் அவர் கூறினார். (செ-6)


# வட இலங்கை சுதேச வைத்திய சபை

## பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம் :- 19.04.2014 சனிக்கிழமை
பிற்பகல் 2.30 மணி

இடம் :- 188 B மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

விடயம் :- லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியில் கற்கைநெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு வழங்கப்படும் சித்த ஆயுள்வேத டிப்ளோமா தொடர்பான இறுதி முடிவுகள்.

- 86 வருடங்களாக யாழ்ப்பாணத்தில் இயங்கும் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவக் கல்லூரியை கிளிநொச்சிக்கு மாற்றுவது சம்பந்தமானது.
- இந் நிகழ்வில் அரசியல் பிரமுகர்கள், வைத்தியர்கள், கல்விமான்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்குமாறு வேண்டுகின்றோம்.
- ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆராய்வதற்காக தொடர்ந்து நடைபெறவுள்ள பொதுச் சபைக் கூட்டத்தில் 05.04.2014ஆம் திகதிக்கு முன் இவ்வருட சந்தாப்பணம் செலுத்திய உறுப்பினர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம் என்பதையும் அறியத்தருகின்றோம்.

செயலாளர்
வட இலங்கை சுதேச வைத்திய சபை

(C-6825)


# மாயமான மலேசிய விமானம் விமானி மீது சந்தேகம் - எப்.பீ.ஐ

239 பயணிகளுடன் மலேசியாவில் இருந்து சீனா சென்ற விமானம் என்ன ஆனது என்பது 2 வார காலத்துக்கும் மேலாக மர்மமாக நீடித்து வருகிறது. ஒவ்வொரு நாளும் மலேசிய விமானம் பற்றி பல தகவல்கள் வெளியாகி வருகினறன.

இந்த நிலையில் மலேசியா பொலிசாருக்கு புறம்பாக புலனாய்வில் இறங்கியுள்ள எப்.பீ.ஐ விசாரணைகளை முழுவீச்சில் தொடங்கியுள்ளது. விமானி ஷாவுக்கு விமானம் புறப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் இரண்டு நிமிட தொலைபேசி அழைப்பொன்று வந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது .

இந்த அழைப்பை மேற்கொண்ட சிம் போலியாக ஒரு பெண்ணின் அடையாளத்தை பயன்படுத்தி சம்பவம் இடம்பெற்ற சில தினங்களுக்கு முன்னர் பெறப்பட்டுள்ளது. போலியாக பெறப்பட்ட சிம்மில் இருந்து விமானம் புறப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் இரண்டு நிமிட அழைப்பு விமானிக்கு ஏன் வந்தது என்பதனை எப்.பீ.ஐ விசாரித்து வருகிறது.



அதேநேரம் ஒரே வீட்டில் மூன்று குழந்தைகளுடன் பிரிந்து வாழ்ந்து வந்த விமானி ஷாஹ்வின் மனைவியிடத்திலும் எப்.பீ.ஐ விசாரணைகளை தொடங்கியுள்ளது .விமானி ஷாஹ் மனநிலை பாதிக்கப்பட்ட ஒருவரா என்ற கோணத்திலும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தெரிகிறது.

அதேநேரம் மலேசிய எதிர்க்கட்சி தலைவர் அன்வர் இப்ராஹிம் இன் தீவிர ஆதரவாளரான விமானி ஷாஹ், அன்வர் இபராஹிக்கு ஐந்து வருடம் சிறையில் அடைக்க தீர்ப்பு வழங்கப்பட்ட வேளை குறித்த நீதிமன்றத்தில் இருந்தும் சில மணித்தியாலங்களின் பின்னரே அவர் விமானத்தை செலுத்த சென்றதும் பின்னர் குறித்த விமானம் மாயமாகியதும் குறிப்பிடத்தக்கது. (செ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மனமும் குரங்கும்

ஒரு தடவை பெர்னாட்ஷாவைப் பார்த்து, "உலகம் ஏன் உங்களை சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது?'' என்று கேட்டார்களாம்.

அதற்கு அவர் சொன்னாராம்;

''ஒரு வருடத்தில் 2 அல்லது 3 தடவைக்கு மேல் யாருமே சிந்திப்பதில்லை.நான் வாரத்திற்கு ஒன்றிரண்டு தடவை சிந்திக்கிறேன். அதுதான் உலகம் என்னை சிந்தனையாளர் என்று பாராட்டுகிறது'' என்று சொன்னாராம்.

இதிலிருந்து என்ன தெரிகிறது?

மனிதர்கள் யாருமே அதிகமாக சிந்திப்பதில்லை என்பது தெரிகிறது. மனம் சுத்தமாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் சிந்தனை தெளிவாக இருக்கும்.

மனம் எந்தளவுக்கு சுத்தமாக இருக்க வேண்டும் தெரியுமா?

மார்க்ஸ் அரேலியஸ் என்ற அறிஞர் அதற்கு ஓர் அளவு கோல் கொடுத்திருக்கிறார். திடீரென்று உங்கள் முன் ஒருத்தர் வந்து நின்று, இப்ப நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? அப்படியே சொல்லுங்கள் என்று கேட்டால், உடனே தயங்காமல் உள்ளது உள்ளபடியே...

"இதைத்தான் இப்பொழுது நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன்'' என்று சுலபமாக சொல்லக்கூடிய அளவுக்கு மனம் இருக்க வேண்டுமா? அதுதான் சுத்தமான மனம் என்கிறார் அவர்.

அப்படி சொல்லக்கூடிய நிலைமையிலேயா நாமெல்லாம் இப்பொழுது இருக்கிறோம்.

வெளிப்படையாகப் பேசுங்கள் சேர் என்று கேட்டால்...

''அது எப்படி சேர்? மனதில் நினைப்பதையெல்லாம் வெளியில் காட்டிக் கொள்ள முடிகிறதா?'' என்றுதானே கேட்கிறோம். அதன்பின் எப்படி மனம் சுத்தமாகிறது?

நம்மில் பலர் மனதைக் கட்டுப்பாட்டில் வைக்கவேண்டும் என்றுதான் நினைக்கிறோம். ஆனால் அதுமுடிவதில்லை. மிகவும் கஷ்டமாக இருக்கிறது. மனம் ஒரு குரங்கு மாதிரி என்று சும்மாவா சொன்னார்கள்? மனதுக்கும் குரங்குக்கும் அப்படி என்ன ஒரு சம்பந்தம்?

இரண்டும் அடிக்கடி தாவிக் கொண்டிருக்கிறது. இது தான் நமக்கு தெரிந்த ஒற்றுமை.

எனக்கு தெரிந்த நண்பர் ஒருத்தர் இதற்கு இன்னொரு விளக்கம் கொடுத்தார்.

''மனம், குரங்கு இவை இரண்டையும் எப்பொழுதும் கட்டுப்படுத்தியே வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் நமக்குத்தான் மிகவும் கஷ்டம்'' என்றார்.

சில சமயம் குரங்கைவிட மோசமான மனதெல்லாம் கூட நம்மில் சிலரிடம் உண்டு.

திருக்குற்றாலத்தில் ஒரு தடவை ஒரு ஆள் கையில் வாழைப்பழத்தை வைத்துக் கொண்டு வேகமாக ஓடிக் கொண்டிருந்தான்.

பின்னால் ஒரு குரங்கு துரத்திக் கொண்டே ஓடி வந்தது. அதற்கு பின்னால் ஒருத்தர் அவர்கள் இருவரையும் துரத்திக் கொண்டு வெறுங்கையுடன் ஓடிக் கொண்டிருந்தார்.

வழியில் ஒருத்தர் இந்த ஆளை நிறுத்திக் கேட்டார்.

அந்த ஆள் தன் கையில் வாழைப்பழம் வைத்திருக்கிறான். அந்த குரங்கை பார்த்துவிட்டு ஓடுகிறான். அது நியாயம். குரங்கு அந்த வாழைப்பழத்தை பார்த்துவிட்டது. அதனால் அவனுக்கு பின்னால் ஓடுகிறது. அது நியாயம். நீ எந்த சம்பந்தமும் இல்லாமல் அவருக்குப் பின் ஓடுகிறாயே? இது என்ன நியாயம்? என்றார்.

" நான் ஓடுவது நியாயம் தான்'' என்றார் இவர்.

"எப்படி'' என்று கேட்டார் அவர்.

"அந்த ஆள் என் கடையில்தான் வாழைப்பழம் வாங்கினான். காசு கொடுக்காமல் ஓடுகிறான் சேர்" என்று சொல்லி விட்டு துரத்த ஆரம்பித்தார் அவர்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஆட்சியாளர்கள் சர்வாதிகாரமாக செயற்பட்டால் சர்வதேசம் தலையீடு செய்யும்- சரத் பொன்சேகா

ஜெனீவா மனிதவுரிமை பேரவையில் முன்வைக்கப்பட்டுள்ள இலங்கை தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டால், அதன் மூலம் நாட்டுக்கோ நாட்டு மக்களுக்கோ எந்த பாதிப்பும் ஏற்படாது என ஜனநாயகக் கட்சியின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

வழக்கு விசாரணை ஒன்றில் ஆஜராக கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு வந்திருந்த போது ஊடகவியலாளர்களிடம் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரி விக்கையில,

மனிதவுரிமைகளை மீறிய ஆட்சியாளர்களுக்கு தண்டனை வழங்குவதே அமெரிக்க தலைமையிலான மேற்குலக நாடுகள்முன்வைக்க உள்ள பிரேரணையின் நோக்கமே அன்றி, நாட்டையோ நாட்டு மக்களையோ பாதிப்புக்கு உள்ளாக்கும் நோக்கம் கிடையாது.

இலங்கை இராணுவம் எந்த குற்றங்களை செய்யவில்லை. இராணுவத்தினர் மீது குற்றங்கள் சுமத்தப்படுமாயின் அதற்கு பதிலளிக்க நான் தயாராக இருக்கின்றேன்.

அவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு என்னால் மட்டுமே பதிலளிக்க முடியும்.

இராணுவத்தினரை மின்சார நாற்காலிக்கு கொண்டு செல்ல முயற்சிக்கப்படுவதாக அரசாங்கம் கூறுவது பொய். ஒரு நாட்டின் ஆட்சியா ளர் சட்டத்தை மீறி சர்வாதிகாரமாக செயற் பட்டால், அவ்வாறான சந்தர்ப் பங்க ளில் சர்வதேச சமூகத்திற்கும் மாத்திரமல்ல ஐக்கிய நாடுகள் அமைப்புக்கும் அந்நாட்டில் தலையீடு களை மேற்கொள்ள முடியும்.

இதுதான் சர்வதேச சட்டம். இலங்கையின் இன்றைய ஆட்சியாளர் அவ்வாறான ஒன்றைஎதிர் நோக்க வேண்டியிருந்தால், அதில் எப்போதும் தப்பிக்க முடியாது என்றார்.(2)

# அரச சிறுவர் ஓவிய விழா

கலாசார மற்றும் கலை அலுவல்கள் அமைச்சின் கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இலங்கை கலைக் கழகத்தின் ஓவிய சிற்பக்குழுவின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இவ்வாண்டிற்கான அரச சிறுவர் ஓவிய விழாவின் ஆரம்பச் சுற்றுக்கான ஓவியங்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு கலாசார அலுவல்கள் திணைக்கள பணிப்பாளர் விஜித் கணுகல அறிவித்துள்ளார். இவ் ஓவிய விழா ஆரம்ப சுற்றுக்களில் பங்கேற்கும் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப் படவுள்ளது.

வெற்றி பெறுகின்ற 150 மாணவர்கள் இரண்டாம் சுற்றில் பங்கு பற்றுவதுடன் ஒக்டோபர் மாதம் முதலாம் திகதி கொழும்பில் அமைந்துள்ள யோன் டி சில்வா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறவுள்ள உலக சிறுவர் தின விழாவில் அம் மாணவர்களுக்கு பெறுமதி மிக்க பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கப்படவுள்ளன.

இப் போட்டிக்கான செயலாளர் ஓவியம் மற்றும் சிற்பக்குழு ஓவியங்களை தேசிய கலாபவனம், நெளும்பொக்குண மாவத்தை, கொழும்பு-7 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு இலங்கை கலை கலாசார அலுவல்கள் பணிப் பாளர்விஜித்கணுகலதெரிவித்துள்ளார். (2-29)

# ஆசிரிய கலாசாலைகள்; இறுதிப் பரீட்சை

ஆசிரிய கலாசாலைகளில் இறுதியாண்டுக் கற்கையை நிறைவு செய்வோருக்கான இறுதிப்பரீட்சை எதிர்வரும் ஜுன் மாதம் 2 ஆம் திகதி தொடக்கம் 8 ஆம் திகதி வரை நாடெங்கிலுமுள்ள ஒன்பது ஆசிரியர் கலாசாலைகளில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருப்பதாகப் பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்கமைய கோப்பாய், அட்டாளைச்சேனை, மட்டக்களப்பு, கொட்டகல, ஒணவட்டுண, பலப்பிட்டிய, கிராகம, மகரகம, பேராதனை ஆகிய ஆசிரியர் கலாசாலைகளில் இப்பரீட்சை இடம் பெறவுள்ளது

பரீட்சைக்கு விண்ணப்பிப்போர் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 5ஆம் திகதிக்கு முன்னர் பரீட்சைத் திணைக்களத்திற்குக் கிடைக்கக் கூடியதாகக் கலாசாலைகள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை கடந்த காலங்களில் பரீட்சைகளில் நூன சித்தி பெற்றோரும் இத் திகதிக்கு முன்னர் தாம் கல்வி கற்ற கலாசாலைகளின் ஊடாக விண்ணப்பிக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது: (2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 30 | 60 |
| உருளைக்கிழங்கு | 80 | 80 | 90 |
| பச்சைமிளகாய் | 80 | 70 | 80 |
| தக்காளி | 40 | 40 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 |
| கோவா | 40 | 35 | 40 |
| கரட் | 90 | 80 | 100 |
| பூசணி | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 35 | 60 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 30-90 | 40-70 | 80 |
| பெரிய வெங்காயம் | 50-70 | 50-65 | 60 |
| பாகற்காய் | 140 | 200 | 100 |
| வெண்டிக்காய் | 70 | 50 | 80 |
| கருணைக் கிழங்கு | 30 | 20 | 40 |
| பயற்றங்காய் | 60 | 65 | 80 |
| லீக்ஸ் | 50 | 60 | 80 |
| பீற்றூட் | 30 | 30 | 60 |
| கறிமிளகாய் | 70 | 60 | 80 |
| முருங்கைக்காய் | 300 | – | 240 |
| போஞ்சி | 70 | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | 20 | 20 | – |
| கீரை - 1 பிடி | 10 | 10 | 40 |
| தேசிக்காய் | 40 | 50 | 40 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 40 | 40-45 |
| இராசவள்ளி | 80 | 70 | 80 |

# இராசி பலன்

*24.03.2014*
*(பங்குனி 10 , திங்கட்கிழமை )*
*சூரிய உதயம் காலை 6.14 மணிக்கு*
*அட்டமி பிற்பகல் 4.06 மணிவரை*
*மூலம் பிற்பகல் 12.07 மணிவரை*
*இராகுகாலம் 7.46-9.16 மணிவரை*
*சுபநேரம் 12.16-1.46 மணிவரை*

**மேடம்** இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, தொழில் ரீதியான போட்டிகளைச் சமாளிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**இடபம்** கடவுளை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், கேட்ட இடத்தில் உதவிகள் கிடைப்பது அரிது, தேவையற்ற பொறுப்புக்களை தவிர்ப்பது நல்லது, போசன நன்மையுண்டு.

**மிதுனம்** உறவினர் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், அனுபவம்மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கலாம், பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், குடும்ப மகிழ்ச்சி கூடும்.

**கடகம்** உடல்நலம் சீராகி உற்சாகத்தோடு பணி புரிவீர்கள், எதிர்ப்பாக இருந்த வர்கள் மனம் மாறுவர், பயணங்களால் பலனுண்டு, செய்தொழில் மேன்மையுண்டு, கௌரவமான நாள்.

**சிங்கம்** கற்பனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்றுவீர்கள், சுப காரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கன்னி** பெற்றோரின் தேவைகளை நிறைவு செய்வதில் கூடிய அக்கறை காட்டுவீர்கள், பேச்சில் கனிவு பிறக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், சுப செலவுகள் அதிகரிக்கலாம்.

**துலாம்** எடுத்த காரியத்தை எளிதில் முடிக்க சகோதரர் வழியில் உதவிகள் கிடைக்கலாம், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், அந்நியர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், தனவரவு திருப்திகரமாக அமையும்.

**விருச்சிகம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மாதர் நட்புண்டு, வாக்கு மேன்மையுண்டு, எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், சொத்துக்கள் தொடர்பில் நன்மையுண்டு.

**தனுசு** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, சிந்தனை மிகுதியான நாள், போசன சுகமுண்டு, தெய்வீக சிந்தனை மேலோங்கும்.

**மகரம்** வீட்டை அழகுபடுத்துவதில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணத்தால் பிரபல மாணவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சுப காரியச் செலவுகள் ஏற்படலாம், மனச்சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கும்பம்** பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றிதரும், வருமானம் திருப்தி தரும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்** வாக்குறுதியைக் காப்பாற்றி மகிழும் நாள், தொழில் ரீதியாக முக்கிய முடிவெடுப்பீர்கள், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவமொன்று இடம்பெறலாம், மனதிற்கினிய தவல்கள் வந்து சேரலாம்.

**வளவன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# 2013இல் பொருளாதார அ/தி 7.3 வீதமாகப் பதிவு

### புள்ளிவிபர திணைக்களம் அறிக்கை

இலங்கையின் பொருளாதார அபிவிருத்தி கடந்த ஆண்டில் 7.3 வீதமாக பதிவாகியிருந்ததாக இலங்கை புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
இது2012-ம்ஆண்டுடன்ஒப்பிடுகையில ஒரு வீத உயர்வு எனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விவசாயத்துறை 10.8 வீத வளர்ச்சியையும், சேவைகள் துறை 56.8 வீத வளர்ச்சியையும் பதிவு செய்திருந்தன. 2006ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் சராசரி பொருளாதார வளர்ச்சியை கருத்தில் கொள்ளும்போது அதன் பெறுமதி 6.7 வீதமாக அமைந்துள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் மொத்த தேசிய உற்பத்தி 2013ஆம் வருடத்தின் நான்காம் காலாண்டில் 8.2 வீத வளர்ச்சியை பதிவு செய்திருந்தது எனவும் இது 2012 ஆம் வருடத்தின் நான்காம் காலாண்டுடன் ஒப்பிடுகையில் 1.9 வீத அதிகரிப்பு எனவும் மேற்படி அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.




# ஐந்து ஆசிய நகரங்களில் சுற்றுலா ஊக்குவிப்பில் மலேசியா



விஸிட் மலேசியா இயர் 2014 கொண்டாட்டங்கள் தொடர்பிலான விழிப்புணர்வினை உலகளாவிய ரீதியில் ஏற்படுத்தும் முகமாக, மார்ச் மாதம் இந்தியாவுக்கும் இலங்கைக்குமான அதன் விற்பனைப் பணிகளை முடுக்கிவிட்டுள்ளது டூரிசம் மலேசியா.

விற்பனைப் பணிகள் மூலம் ஒவ்வோர் நகரிலும் பயணச் சந்தையொன்று டூரிசம் மலேசியாவினால் ஒழுங்கு செய்யப் படும். பயண வர்த்தகத்தில் ஈடுபடுவோர் இங்கு சந்தித்து ஒரு வலையமைப்பினை உருவாக்கிக் கொள்ள இது உதவும். இது மலேசியா வழங்கும் பல்வேறுபட்ட சுற்றுலா வரப் பிரசாதங்களையும் இலங்கை, இந்தியா மற்றும் மலேசியா ஆகிய நாடுகளின் பயணமுகவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்துவதனால் ஏற்படும் நன்மைகளை விளங்க வைப்பதையும் இலக்காகக் கொண்டதாய் அமையும்.

மலேசியத் தூதுக்குழுவில் உள்ளூர் உல்லாசப் பயண தொழிற்றுறையைச் சேர்ந்த 44 அமைப்புகளின் 86 பேர் பங்கேற்பர். இதில் அரச உல்லாசப் பயணத்துறையும் அடங்கும்.

# அமானாவின் வெஸ்டர்ன் யூனியன் பணப் பரிமாற்று சேவை

வட்டியுடன் சம்பந்தப்படாத இலங்கையின் முன்னணி வங்கியாகத் திகழ்ந்துவரும் அமானா வங்கி தற்போது தனது வாடிக்கையாளர்களுக்கு வெஸ்டர்ன் யூனியன் உள்வரவு பணப்பறிமாற்றச் சேவைகளை வழங்கி வருகிறது.

அமானாவங்கி24 கிளைகளையும 600 இற்கும் மேற்பட்ட ATM வலையமைப்பையும் கொண்டுள்ளது.

வரையறுக்கப்பட்ட எய்ட்கன் ஸ்பென்ஸ் தனியார்க் கம்பனிக்கும் வரையறுக்கப்பட்ட மேர்க்கன்டைல மேச்சன்ட் வங்கிக்கும் இடையிலான ஒரு கூட்டு தொழில்முயற்சியாக விளங்கும்வரையறுக்கப்பட்ட MMBL பணப் பரிமாற்று கம்பனியுடன் அமானா வங்கி கூட்டிணைந்துள்ளது.

MMBL பணப்பரிமாற்றுக் கம்பனி என்பது 200 இற்கும் மேற்பட்ட நாடுகளிலும் பிராந்தியங்களிலும் 489,000 இற்கும் மேற்பட்ட வெஸ்டர்ன் யூனியன் முகவர் அமைப்புக்களைக் கொண்ட ஓர் உலக வலையமைப்புடன் தொடர்பை ஏற்படுத்தி இலங்கை மக்களுக்கு வெஸ்டர்ன் யூனியன் பணப்பரிமாற்று சேவைகளை வழங்கி வரும் இலங்கையின முன்னணி சர்வதேச பணப்பரிமாற்று சேவை வழங்குனர்களில் ஒன்றாகும்.

# ரூபாயின் பெறுமதி நிலையானதாயிருக்கும் - கப்ரால்

நடப்பு ஆண்டின் இலங்கை ரூபாவின் பெறுமதி நிலையானதாக அமைந்திருக்கும் என மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்திருந்தார்.

ஏற்றுமதி மூலமான வருமதிகள் அதிகரித்துக் காணப்படும் நிலையில் இந்த எதிர்பார்ப்பு உறுதியாக காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த டிசெம்பர் முதல் ரூபாவின் பெறுமதி உறுதியாக காணப்படுகிறது.

சாதாரணமாக மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களில் ரூபாவின் பெறுமதி சரிவடையும், ஏனெனில் புதுவருட பண்டிகையை முன்னிட்டு இறக்குமதிகள் அதிகரித்துக் காணப்படும். ஆயினும் இந்த ஆண்டு அதிகளவு ஏற்றுமதிகள் காணப் படுவதால்இந்த நிலையை எதிர்கொள்ளவில்லை என அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

# மூலதன சந்தை பற்றிய விழிப்புணர்வு

பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் பட்டப்படிப்பை மேற்கொள்வோர் மத்தியில் மூலதனச் சந்தை தொடர்பான அறிவை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க கொழும்பு பங்குச் சந்தை மற்றும் கல்வி அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

சுமார் 13,000 ஆசிரியர்களுக்கும் மற்றும் 15,000 பட்டப்படிப்பை மேற்கொள்ளும் மாணவர்கள் மத்தியிலும் இந்த செயற்பாட்டை முன்னெடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இலங்கை கல்வி அமைச்சு மற்றும் பல்கலைக்கழகங்கள் மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியுடன் செயலமர்வுகளை நாடு முழுவதும் முன்னெடுக்க கொழும்பு பங்குச்சந்தை திட்டமிட்டுள்ளது.

இந்த செயலமர்வுகளின் போது சேமிப்பு மற்றும் முதலீடுகள், முதலீட்டு வாய்ப்புகள், மூலதனச் சந்தை செயற்பாடுகள் மற்றும் பங்குகளில் முதலீடுகளை மேற்கொள்வதன் அனுகூலங்கள் போன்ற பல விடயங்களை அறிந்து கொள்ளலாம்.




## வணிகநெறியில் சிறந்த நிறுவனங்கள்

எதிஸ்பியர் இன்ஸ்டிடியூட் என்ற அமைப்பு, உலகில் நேர்மையான வணிக நெறிமுறைகளை பின்பற்றும் நிறுவனங்களின் பட்டியலை தயாரித்துள்ளது. இந்த பட்டியலில் மொத்த 144 நிறுவனங்கள் உள்ளன. இதில், இந்தியாவிலுள்ள விப்ரோ, டாடா பவர் ஆகிய இரு நிறுவனங்கள இடம்பெற்றுள்ளன. இந்த இரு நிறுவனங்களும்தொடர்ந்து 3வது ஆண்டாக இந்த பட்டியலில் இடம் பிடித்துள்ளது.

# கடந்த வாரம் பங்குச்சந்தை

ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கு எதிரான தீர்மானம் வெளியாகலாம் எனும் அச்சமான சூழ்நிலையில், கொழும்பு பங்குச் சந்தை பெறுமதிகள் ஏற்றத்தாழ்வுகளுடன் பதிவாகிய வண்ணமுள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை நடவடிக்கைகள் நிறைவடைந்தபோது அனைத்து பங்கு விலைச் சுட்டெண் 5,937.87 ஆகவும் S&P சிறிலங்கா 20 சுட்டி 3246.02 ஆகவும் பதிவாகியிருந்தன.

மார்ச் 17-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 1,755,542,367 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தமாக 16,686 பங்கு கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன. இதில் உள்நாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 15,722 ஆகவும் வெளிநாட்டு கொடுக்கல் வாங்கல்கள் 964 ஆகவும் பதிவாகியிருந்தன.

கடந்த திங்கட்கிழமை நடவடிக்கைகள் நிறைவடையும் பொழுது கொழும்பு பங்குசந்தை நடவடிக்கைகள் கடந்த நான்கரை ஆண்டுகளில் பதிவு செய்திருந்த ஆகவும் குறைந்த புரள்வு பெறுமதியை எய்தியிருந்தது.

ஆனால் மறுநாள் செவ்வாய்க்கிழமை புரள்வு பெறுமதியில் குறிப்பிடத்தக்களவு அதிகரிப்பு பதிவாகியிருந்தது. ஆயினும் சந்தை பரந்தளவில் மறைபெறுமதியில் நிறைவடைந்திருந்தது.

வெளிநாட்டு முதலீட்டாளர்கள் அதிகளவு பங்கு விற்பனையில் ஈடுபட்டனர்.

அடுத்த நாள் புதன்கிழமை பங்குச் சந்தை நேர்பெறுமதிகளை பதிவு செய்திருந்தது. புக்கிட்தாரா பங்குகள் மீது தொகை கொள்வனவு பதிவாகியிருந்தது. இதன்மூலம் சந்தையின் மொத்தப்புரள்வு பெறுமதி 600 மில்லியன் ரூபாவை கடந்திருந்தது. ஆசியா அசெட் ஃபினான்ஸ் பங்குகள் மீது சிறியளவிலான முதலீட்டாளர்களின் ஈடுபாடு காணப்பட்டது. டோக்கியோ சீமெந்து பங்குகள் மற்றும் ஆசிரி [illegible] பங்குகள் மீது கலப்பு ஈடுபாடு காணப்பட்டது.

ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பங்குகள் மொத்தப்புரள்வு பெறுமதியில் 59 வீத பங்களிப்பை செலுத்தியிருந்தன.

வியாழக்கிழமை ப்ளுசிப் பங்குகள் மீது அதிகளவு கேள்வி பதிவாகியிருந்ததன் காரணமாக சந்தை நேர் பெறுமதியை பதிவு செய்து நிறைவடைந்திருந்தது.

வெள்ளிக்கிழமை இரு பிரதான சுட்டிகளும் நேர் பெறுமதிகளை பதிவு செய்து நிறைவடைந்திருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் SMB லீசிங் (சாதாரண), குட் ஹோப், ரேடியன்ட் ஜெம்ஸ், மல்ரி ஃபினான்ஸ் மற்றும் FLC ஹைட்ரோ பவர் போன்றன முதல் 5 சிறந்த இலாபமீட்டிய பட்டியலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

ஹியுஜே. ஜி எஸ் ஃபினான்ஸ், சிலோன் லெதர் (உரிமை), மொரிசன்ஸ் மற்றும் பாரகன் போன்ற நிறுவனங்களின் பங்குகள் அதிகளவு நஷ்டமீட்டியதாக பதிவாகியிருந்தன.



2010ஆம் ஆண்டு யாழில் திறக்கப்பட்ட பான்ஏசியா வங்கி யாழ். கிளையின் 4 ஆண்டுகள் பூர்த்தி விழா கடந்த செவ் வாய்க்கிழமை ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள வங்கி அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்வில் [illegible] யின முகாமையாளர், ஊழியர்கள் உள்ளிட்டவர்கள் கலந்துகொண்டனர்.

## வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.16 | 132.04 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 212.63 | 218.71 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 177.03 | 182.82 |
| சுவிஸ் பிராங் | 145.23 | 150.57 |
| கனேடிய டொலர் | 114.29 | 118.13 |
| அவுஸ்திரேலிய டொலர் | 116.12 | 120.52 |
| சிங்கப்பூர் டொலர் | 100.70 | 104.00 |
| ஜப்பான் யென் | 1.25 | 1.29 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.12 | |
| ஐக்.அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.56 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல்வாதிகள் வெள்ளை ஆடை அணிந்து நாட்டிற்கு தீமை செய்கின்றனர்

## சமந்த வித்யாரத்ன எம்.பி.

(கொழும்பு)

நாடாளுமன்றம் மொத்த விற்பனை நிலையம் எனவும் மேலதிக விபரங்களுக்கு அலரி மாளிகையில் உள்ள நிறைவேற்று அதிகாரம் கொண்ட முதலாளியை தொடர்பு கொள்ளுமாறு ஜே.வி.பியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சமந்த வித்யாரத்ன தெரிவித்துள்ளார்.

அம்பலாந்தோட்டையில் நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மொத்தமாக சகல பொருட்களை ஒரே கூரையின் கீழ் கொள்வனவு செய்ய வேண்டுமாயின் பத்தரமுல்ல, தியவன்னாவ பிரதேசத்தில் எழில்மிக சூழலில் இருக்கும் நாடாளுமன்றத்திற்கு வாருங்கள்.

இங்கு மொத்தமாக ஹெரோயின் போதைப் பொருள், கஞ்சா போதைப் பொருள், எதனோல் மதுசாரம், விபச்சார மடம் என்பவற்றை பெற்றுக்கொள்ள முடியும்.

மகிந்தவின் சகாக்கள் வியாபாரம் செய்கின்றனர். மேலதிக விபரங்கள் தேவையெனில் அலரி மாளிகையுடன் தொடர்பு கொள்ளுங்கள்.

அரசியல்வாதிகள் ஏன் வெள்ளை உடை அணிகின்றனர்?. நாங்கள் கொள்ளையடிப்பதில்லை. நாங்கள் தூய்மையானவர்கள் என்பதற்காகவே அரசியல்வாதிகள் வெள்ளை உடை அணிகின்றனர்.

போதைப் பொருள், எதனோல் மதுசாரத்தில் மாத்திரமல்ல, வெள்ளை ஆடையிலும் மக்களுக்கு போதை ஏற்றலாம் என்பதை அரசியல்வாதிகள் அறிவார்கள்.

வெள்ளை ஆடையை அணிந்து கொண்டு தீமையான காரியங்களை செய்யும் அரசியலே இன்று நாட்டில் உள்ளது. ஒரு மணியத்தியாலத்திற்கு 100 கிலோ மீற்றர் வேகத்தில் செல்ல அதிவேக நெடுஞ்சாலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

ஹெரோயின் போதைப் பொருள் நாட்டில் எத்தனை கிலோ மீற்றர் வேகத்தில் பரவுகிறது என்று நான் கேட்கிறேன். 300 முதல் 400 கிலோ மீற்றர் வேகத்தில் நாட்டில் விபச்சார விடுதிகள் பரவுகின்றன.

நாட்டில் 40 ஆயிரம் விபச்சார விடுதிகள் இருப்பதாக சமூக சேவைகள் அமைச்சு தெரிவிக்கின்றது.

அதிவேக நெடுஞ்சாலைகளின் வேகத்தை விட கொள்ளை, கொலை, பாலியல் வல்லுறவு சம்பவங்கள் அதிகரித்துள்ளன என அவர் தெரிவித்துள்ளார். (2)


## காணி விற்பனைக்கு

கிளி/கனகபுரம் ம.விக்கு அண்மையாக 4 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணி முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: மகேந்திரன் பாலச்சந்திரா இல. 54, கனகபுரம், கிளிநொச்சி (077 41 55113) (5880)


# நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில் தமிழ், சிங்கள, ஆங்கிலமும் மொழி கற்கைநெறி களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ் டச்சு வீதி கல்வியங்காடு எனும் இடத்தில் அமைந்துள்ள மும்மொழி கற்கை நிலையத்தில் நேற்றைய தினம் காலை 9 மணி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சையானது இன்றும் நாளையும் நடைபெற உள் ளது.மேலும் இது தொடர்பான விபர ங்களை www.np.gov.lk என்ற இணையத்தளத்தில் பார்வையிட முடியும். (2)

# ஈழ இராச்சியம் உருவாக புதிய கட்சி உருவாக்கம்

(கொழும்பு)

தனித் தமிழீழம் ஒன்றை அமை க்கும் நோக்கில் புதிய அரசியல் கட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

நசனல் லிபரல் கட்சி என இந்தக் கட்சிக்கு பெயரிடப்பட்டுள்ளது.

பிரிட்டன் வாழ் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டு பிரிட்டன் அரசியலில் அழுத்தங்களை பிரயோகிக்க குறித்த கட்சி திட்டமிட்டுள்ளது.

ஈழ இராச்சியத்தை உருவாக்க பிரிட்டன் அரசாங்கத்தையும், அரசியல் கட்சிகளையும் வலியுறுத் தும் நோக்கில் புதிய கட்சி உருவாக்கப்பட்டுள்ளது. தமிழ் மக்களை அணிதிரட்டி ஈழத்தை அமைக்க போராடவுள்ளதாக கட்சி அறிவித்துள்ளது.

உலகத் தமிழர் பேரவை மற்றும் உலக சமாதான ஆதரவு அமைப்பு ஆகிய புலம் பெயர் அமைப்புக்கள் குறித்த கட்சியை ஆரம்பிக்க ஆதரவளித்துள்ளன. (2)

# ஆங்கில இலக்கிய போட்டியில் முதலாமிடம்

(சித்தன்கேணி)

சர்வதேச நாடளாவிய ரீதியில் அண்மையில் நடைபெற்ற அரச ஆங் கில இலக்கிய திறந்த போட்டியில் ஆங் கில இலக்கிய திறனாய்வு, ஆங்கில நாட் டார் வளர்ச்சி, ஆங்கிலக் கவிதை, ஆங் கில திறனாய்வு ஆகியவற்றில் மாவ ட்ட, பிரதேச ரீதியில் எழுத்தாளர் டாக் டர் வெற்றிவேல் சக்திவேல் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண் டார். (2-17)

# இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த மஹிந்த தவறிவிட்டார்

## டேவிட் கமரூன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கை தொடர்பில் நிறைவேற்றப்பட உள்ள தீர்மானத்திற்கு ஐரோப்பிய ஒன்றியம் ஆதரவளிக்கும் என பிரித் தானிய பிரதமர் டேவிட் கமருன் தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு எதிரான தீர்மானம் இந்த வாரத்தில் மனித உரிமைப் பேரவை மாநாட்டில் முன்வைக்கப்படவுள்ளது.

இந்தத் தீர்மானத்திற்கு முழு அளவில் ஆதரவளிக்கத் தயார் என ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் தெரிவித்துள் ளன.

இலங்கையில் பூரண நல்லிணக் கம் ஏற்படுத்தப்பட வேண்டும்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்து வதற்கு கடந்த கால குற்றச் செயல்க ளுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தவறியுள்ளார்.

எனவே போர்க் குற்றச் செயல் கள் தொடர்பில் சர்வதேச விசா ரணை நடத்தப்பட வேண்டுமென கோருகின்றோம் என பிரித்தானிய பிரதமர் தெரிவித்துள்ளார். (2)

# ஆணைக்குழுவின் இறுதி அறிக்கை அரசினால் அமுல்படுத்தப்பட வேண்டும்

## இதுவே மு.கா நிலைப்பாடு என்கிறார் ஹக்கீம்

(கொழும்பு)

நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் பதவியை துறக்கப் போவதில்லை என அறிவித்துள்ளார்.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந் திரக் கூட்டமைப்பிற்குள் தமக்கு எதிராக பல்வேறு விமர்சனங்கள் வெளியிடப்பட்டு வருகின்ற போதிலும், பதவியை துறக்கும் திட்டம் கிடையாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கி ரஸ் ஆளும் கட்சிக்குள் இருந்து கொண்டு முஸ்லிம் மக்களின் நலன்களுக்காக பாடுபடும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவின் இறுதி அறிக்கைப் பரிந்துரைகளை முழுமையாக அரசாங்கம் அமுல்படுத்த வேண்டும் என்பதே கட்சியின் நிலைப்பாடு என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டில் மெய்யான நல்லிணக்கத்தை ஏற்படுத்த வேண்டுமாயின் உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழுவின் பரிந்துரைகளை முழுமையாக அமுல்படுத்த வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகள் முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருந்தால் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கை அரசாங் கம் இவ்வளவு அழுத்தங்களை எதிர்நோக்க நேரிட்டிருக்காது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆளும் கட்சியின் ஒரு சில தரப்பினர் செய்யும் விமர்சனங்க ளைக் கண்டு அஞ்சப் போவதி ல்லை எனவும் தொடர்ந்தும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு ஆதரவளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (2)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 1<br>கி.பா: 15 செவ் 2 ல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: BSc /ஆசிரியர்<br>தொ.இ: B/974 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 43 செவ் 7 இல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: B.Sc (Nursing)<br>தொ.இ: G/2981 |
| பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி 2<br>கி.பா: 29.25 செவ் 2 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: O/L / மேற்பார்வையாளர்<br>எதிர்பார்ப்பு: மண்மகன் இடது கை பாதிக்கப்பட்டவர்<br>தொ.இ: B/2965 | பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி 1<br>கி.பா: 11.75<br>உயரம்: 153 cm<br>தகைமை/தொழில்: A/L<br>தொ.இ: G/2982 |
| பிறப்பு: 1972 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 3<br>கி.பா: 40.25 உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்: O/L / NGO Work<br>எதிர்பார்ப்பு: விவாகரத்து பெற்றவர்<br>தொ.இ: B/2966 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 4<br>கி.பா: 2 சூரி, செவ் 6 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: CIMA / நிதித்துறை வேலை (டென்மார்க் Work Permit)<br>தொ.இ: G/2987 |
| பிறப்பு: 1974 இந்து<br>நட்சத்திரம்: பூரம் 2<br>கி.பா: 6.25 உயரம்: 5'<br>தகைமை/தொழில்: 6ஆம் வகுப்பு<br>எதிர்பார்ப்பு: ஆட்டோ சாரதி<br>தொ.இ: B/2970 | பிறப்பு: 1983 இந்து<br>நட்சத்திரம்: அச்சுவினி 4<br>கி.பா: 17 •.75 சூரி செவ் 11 ல்<br>உயரம்: 5'2"<br>தகைமை/தொழில்: BSc / தனியார் வேலை<br>தொ.இ: G/2993 |

**கல்யாண மாலை**

(சர்வதேச திருமண சேவை)

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்

பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே

தொடர்பு:- 021 720 1005

E-mail:- kalyanamalai.jaffna@gmail.com

குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.

(ஞாயிறு, செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களுக்கான பிரயாண கொடுப்பனவு வழங்கப்படவில்லை

(மல்லாகம்)
க.பொ.த உயர்தரப்பரீட்சை 2013 விடைத்தாள் மதிப்பீடு தொடர்பான அறிவுறுத்தற் கூட்டத்தில் கலந்து கொண்ட ஆசிரியர்களுக்கான பிரயாணக் கொடுப்பனவுகள் இதுவரை வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.


க.பொ.த.உயர்தர 2013 ஆம் ஆண்டிற்கான விடைத்தாள் மதிப்பீடு தொடர்பான அறிவுறுத்தற் கூட்டம் கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் கொழும்பில் இடம்பெற்றது.

இதில் உயர்தரப்பிரிவில் பல பாடங்களுக்கு விடைத்தாள் மதிப்பீட்டுப்பணியில் ஈடுபட்ட ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

ஆறு மாதங்கள் கடந்த நிலையில் விடைத்தாள் மதிப்பீட்டிற்கான கொடுப்பனவுகள் அவர்களுக்கு அண்மையில் வழங்கப்பட்டன.

ஆயினும் இதுவரை கூட்டத்திற்குரிய பிரயாணக்கொடுப்பனவு வழங்கப்படவில்லை.

பரீட்சைத்திணைக்களம் இதுகுறித்து அக்கறை செலுத்தவில்லை என பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் விசனம் தெரிவித்துள்ளதோடு பிரயாணக் கொடுப்பனவினை மதிப்பீடு முடிவடைந்த பின்னரோ அல்லது மதிப்பீட்டுக் கொடுப்பனவு வழங்கப்படும் போதோ கொடுக்கவேண்டுமென அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (2-9-21)




நன்றி: மிரர்




## கொட்டப்படும் கழிவுகளால் சுகாதார சீர்கேடு

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பாலத்திற்கு அண்மையில் மருதங்கேணி பொதுச் சந்தையில் கழிவுகள் கொட்டப்படுவதனால் துர்நாற்றம் வீசுவதாக பாதசாரிகள் விசனம் தெரிவித்துள்ளனர். மருதங்கேணி பிரதேச பொதுச் சந்தைப் பகுதியில் அண்மையிலேயே இறைச்சிக் கடைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்நிலையில் இறைச்சிக் கடை உரிமையாளர்களினால் இறைச்சிக் கழிவுகள் மருதங்கேணி பாலத்திற்கு அருகில் வீசப்படுகின்றது. இதனால் அப்பகுதியினால் போக்குவரத்துச் செய்ய முடியாதளவிற்கு துர்நாற்றம் வீசுகின்றது.

அத்தோடு பிராணிகள் அக் கழிவுகளை தூக்கிச் சென்று கடைகளிற்கு முன்னாலும் பொது இடங்களிலும் போடுவதனால் அப்பிரதேசத்தில் சுகாதாரச் சீர்கேடுகள் இடம் பெறுவதாக மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

எனவே பிரதேச சபையினரும் சுகாதாரப் பகுதியினரும் இவ் விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் வலியுறுத்தியுள்ளனர். (2-9-64)

## சொற்பொழிவு

(கும்பளை)
பருத்தித்துறை திருநாவலூர் மகமாரி அம்மன் ஆலயத்தில் இன்று திங்கட்கிழமை பங்குனி திங்கள் உற்சவத்தை முன்னிட்டு ஆன்மீகமும் வாழ்வும் எனும் தொனிப்பொருளில் நண்பகல் 12 மணிக்கு சைவப்புலவர் பண்டிதர் பொன்.சுகந்தன் சொற்பொழிவொன்றை ஆற்றவுள்ளார். (2-19)

# இளைஞர், யுவதிகளுக்கு சுயதொழில் அமைத்துக் கொடுக்க டக்ளஸ் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)
வடமாகாணத்தில் வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு அவர்களது கல்வித் தகைமைகளுக்கேற்ப சுயதொழில் வாய்ப்புக்களை தொழில் வழிகாட்டல்கள் மூலம் வழங்குவது தொடர்பிலான கலந்துரையாடலொன்று அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள அமைச்சரின் செயலகத்தில் குறித்த கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இதன்படி யாழ்ப்பாணம், கிளிநொச்சி உள்ளிட்ட வடமாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் வேலைவாய்ப்பு இல்லாதிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு அவர்களது கல்வித் தகைமைகளுக்கேற்ப தனியார் துறைகளில் தகுந்த வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இவ்வாறு வேலைவாய்ப்பில்லாதிருக்கும் இளைஞர், யுவதிகளால் சமூகம் எதிர்நோக்கி வரும் இடர்பாடுகளுக்கு தீர்வு காணப்படும் அதேவேளை சமூகப் பொருளாதாரத்தை மேம்படுத்துவது தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கீழான கைத்தொழில் அபிவிருத்தி சபை, பனை அபிவிருத்தி சபை உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களுக்கூடாக தனியார் தொழிற்றுறைகளை மேம்படுத்துவது மற்றும் கிடைக்கப்பெறுகின்ற உள்ளீடுகள் ஊடாக புதிய புதிய தொழிற்றுறைகளை அறிமுகப்படுத்தி நவீனப்படுத்துவது குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

இதனிடையே குறித்த வேலைத் திட்டங்களை முன்னெடுக்கும் வகையில் மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் விசேட குழுக்களை அமைத்து அவற்றின் ஊடாக செயற்றிட்டங்களை முன்னெடுப்பது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது.

அத்துடன் கைத்தொழில் அபிவிருத்தி சபையின் கீழ் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் கைத்தொழிற்பேட்டைகள் இயங்கி வரும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்தில் கைத்தொழிற் பேட்டையொன்றை நிறுவி அதனூடாக வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

இவ்வாறு வேலையற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வழிகாட்டல்களுக்கு ஊடாக வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கான செயற்றிட்டங்களை முன்னெடுக்கும் வகையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திட்டங்கள் தொடர்பில் துறைசார்ந்தோருடன் விரைவில் கலந்துரையாடி தீர்வு காணப்படுமென அமைச்சர் இதன்போது தெரிவித்தார். (2)

# அகில இலங்கை சைவப்புலவர், இளஞ்சைவப்புலவர் பரீட்சைகள்


(மல்லாகம்)
அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் சைவப்புலவர் பரீட்சைகள் எதிர்வரும் ஏப்ரல் 18, 19,20 ஆம் திகதிகளில் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு, பிரித்தானியா போன்ற இடங்களில் நடைபெறவுள்ளதாக அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தலைவர் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை அறிவித்துள்ளார்.

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தினால் வருடாந்தம் ஏப்ரல் மாதத்தில் நடத்தப்படுகின்ற இளஞ்சைவப்புலவர் மற்றும் சைவப்புலவர் பரீட்சைகள் இவ்வாண்டு யாழ்ப்பாணம் வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்திலும் மட்டக்களப்பு ஆனைப்பந்தி பெண்கள் கல்லூரியிலும் திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரியிலும் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியிலும் மற்றும் பிரித்தானியா ஆகிய இடங்களில் இடம்பெறவுள்ளது.

இப்பரீட்சைக்கு மொத்தம் 165 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளார்கள்.

இதன்படி யாழ்ப்பாணத்தில் இளஞ்சைவப்புலவர் 50, சைவப்புலவர் 11 உம் ஆக மொத்தம் 61 பரீட்சார்த்திகளும், மட்டக்களப்பில் இளஞ்சைவப்புலவர் 50, சைவப்புலவர் 19 மொத்தம் 69 பரீட்சார்த்திகளும் திருகோணமலையில் இளஞ்சைவப்புலவர் 7 , சைவப்புலவர் 7 மொத்தம் 14 பரீட்சார்த்திகளும் கொழும்பில் இளஞ்சைவப்புலவர் 8, சைவப்புலவர் 10 மொத்தம் 18 பரீட்சார்த்திகளும் பிரித்தானியாவில் இளஞ்சைவப்புலவர் 1,சைவப்புலவர் 2 மொத்தம் 3 பரீட்சார்த்திகளும் பரீட்சைக்கு தோற்றவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9-21)



மலேசியா நாட்டின் றோட்டறிக் கழக குழுவினர் நேற்றைய தினம் யாழ்.நூலகத்திற்கு விஜயம் மேற்கொண்டு நூலகத்திற்கான புத்தகங்கள், காசோலைகள், வைத்திய உபகரணங்கள் என்பவற்றை வழங்கினர்.

இதன் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியிடம் மலேசிய நாட்டின் றோட்டறிக் கழகத் தலைவர் குலசிங்கம் சபாரட்ணம் 10 இலட்சம் ரூபா காசோலையை வழங்குவதையும் அருகில் யாழ்.மாநகர சபையின் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா, யாழ்.வைத்தியசாலைப் பணிப்பாளர் திருமதி பவானி பசுபதிராஜா ஆகியோர் அருகில் நிற்பதையும் வருகை தந்த குழுவினர் உட்பட கலந்து கொண்ட பிரமுகர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-என்.குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயிர்ச்செய்கைக்கு இலகு கடன்...

## புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன் திட்டம் "NCRCS"




அறவிடப்படுவது மிகவும் குறைந்த வட்டியே

## வருடத்திற்கு 9%

விவசாயிகள் தமது பயிர்ச்செய்கைக்கு தேவையான நிதியை குறைந்த வட்டியில் பெறுவதற்கான கடன் திட்டம்

**கடன் வழங்கும் வங்கிகள் நாடு பூராகவும்.**

- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- பிரதேசிய சங்வர்தன வங்கி
- ஹற்றன் நஷனல் வங்கி
- கொமர்ஷல் வங்கி
- யூனியன் வங்கி
- செலான் வங்கி
- லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி
- சம்பத் வங்கி
- சனச அபிவிருத்தி வங்கி
- தேசிய அபிவிருத்தி வங்கி
- டீ.எப்.சீ.சீ வங்கி

**அரசாங்கமும், மத்திய வங்கியும் இந்த திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றன.**

இலங்கை அரசாங்கமும் இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களமும் இணைந்து இந்த கடன் திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றன.

**இதோ பாருங்கள், பயிர்ச்செய்கைக்கு செலவிடப்படும் தொகையில் நான்கில் மூன்று பங்கிற்கு கடன் வழங்கப்படுகின்றது.**

பயிர்ச்செய்கைக்கான மொத்தச் செலவில் 75% வரை கடன் வழங்கப்படும். மிகுதி 25% விவசாயிகளின் பங்களிப்பாக இருக்க வேண்டும்.

**பெரும்போகம், சிறுபோகம் ஆகிய இரு போகங்களுக்கும் கடன் பெற முடியும்.**

ஒவ்வொரு வருடத்திலும் பெரும்போகம் மற்றும் சிறுபோகம் ஆகிய இரு பயிர்ச்செய்கை போகங்களுக்கும் அப்போகங்களுக்குப் பொருத்தமான கால அட்டவணையின் படி கடன் வழங்கப்படுகின்றது.

**குறுங்கால பயிர்ச்செய்கைகளுக்கே இக்கடன் வழங்கப்படும்.**

9 மாதங்களுக்குள் (270 நாட்களுக்குள்) அறுவடையைப் பெறக்கூடிய குறுங்கால பயிர்களின் பயிர்ச்செய்கைக்கே இக்கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும்.

- நெல்
- மிளகாய்
- வெங்காயம்
- தானிய வகைகள் (தட்டைப்பயறு, பயறு, உழுந்து, சோயா அவரை, சோளம், குரக்கன்)
- எண்ணெய் விதை (நிலக்கடலை, எள்ளு, சூரிய காந்தி)
- கிழங்கு வகை (உருளைக் கிழங்கு, வத்தாளைக் கிழங்கு, மரவள்ளிக் கிழங்கு, பால் கிழங்கு)
- மரக்கறிகள் (கத்தரிக்காய், தக்காளி, பீட்றூட், அவரை, கோவா, கரட், வெண்டிக்காய், கறிமிளகாய், லீக்ஸ், முள்ளங்கி, நோகோல், லூவா, பாகற்காய், புடலங்காய், பூசணிக்காய்)
- இஞ்சி போன்ற வேறு பயிர்கள்

**நாற்றுமேடைகளுக்காகவும் கடன் வசதிகள் !**

மேலே குறிப்பிடப்பட்ட பயிர்களுடன் சம்பந்தப்பட்ட நாற்றுமேடைகளுக்கும் கடன் வழங்கப்படுகின்றது.

**எனினும்... கடன் பெறுவதெற்கென்றால் கீழே குறிப்பிடப்படும் தகைமைகளை கொண்டிருக்க வேண்டும்.**

- விண்ணப்பதாரி விவசாயியாக இருத்தல் வேண்டும்.
- இக்கடன் திட்டத்தின் கீழ்
  - சொந்த நிலத்தையுடைய
  - குத்தகை நிலத்தையுடைய
  - வாடகை நிலத்தையுடைய
  - அரச உரிமம், அனுமதிப்பத்திரம் என்பவற்றை உடைய
  - நிலச் சொந்தக்காரரிடமிருந்து பயிர் செய்வதற்கான உரிமையைப் பெற்ற விவசாயிகள் கடன் பெறுவதற்கு தகுதியானவர்களாகும்.
- இதற்கு முன்னர் வங்கிக் கடனை செலுத்தத் தவறியவராக இருக்கக் கூடாது
- 65 வயது அல்லது அதற்கு மேற்பட்ட வயதையுடைய ஒருவர் கடனைப் பெறுவதற்கு குடும்ப உறுப்பினர் ஒருவருடன் (மகன் அல்லது மகள்) இணைந்து பயிர்ச்செய்கையில் ஈடுபட வேண்டும்.

**கடனை திருப்பிச் செலுத்துதல்**

குறிப்பிட்ட போகத்தின் அறுவடைக்குப் பின்னர் வட்டியுடன் சேர்த்து கடனை திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

## மேலதிக விபரங்களுக்கு

மேற்கூறப்பட்ட வங்கிகளின் கிளைகளை அல்லது இலங்கை மத்திய வங்கியின் மாகாண அலுவலகங்களை அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களினூடாக இலங்கை மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தி திணைக்களத்தினை தொடர்பு கொள்ளவும்.

பிரதேச அபிவிருத்தி திணைக்களம் - இலங்கை மத்திய வங்கி
இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01.
தொலைபேசி இலக்கம் : 011 2477447, 011 2477451, 011 2398748


ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

(சீ-6790)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# வெள்ளை யானையின் சக்தி



மகத நாட்டை விருபசேனன் ஆண்ட போது போதிசத்வர் ஒரு யானையாகப் பிறந்தார்.

அந்த யானை தேவலோக யானை ஐராவதம் போல வெள்ளையாக இருந்தது.

அதனால் மகத மன்னன் தன் பட்டத்து யானையாக அதனை வைத்துக் கொண்டான்.


ஒருமுறை ஏதோ ஒரு விழா நடக்க மகத நாடே தேவலோகம் போல அலங்கரிக்கப்பட்டது.

தலைநகரில் பிரம்மாண்டமான ஊர் வலம் நடக்க ஏற்பாடாகியது.

அதற்காகப் பட்டத்து யானை நன்கு அல்ங்கரிக்கப்பட்டது.

வீரர்கள் யானையின முன்னும் பின்னுமாக நடக்க, மகத மன்னன் அதன் மீது கம்பீரமாக அமர்ந்து சென்றான்.

வழி நெடுக்க மக்கள் கூடி "ஆகா! அந்த யானை தான் எவ்வளவு அழகாக இருக்கிறது! என்ன நடை! என்ன கம்பீரப் பார்வை!!" என்று அந்தப் பட்டத்து யானையைப் புகழ்ந்தார்கள்.



இப்படி யானையை மக்கள் புகழ்வது மன்னனுக்குப் பிடிக்கவில்லை.

அவன் தன் மனதில் 'நான் அரசன். எனக்கு இவர்கள் மரியாதை அளிக்காமல் இந்த யானைக்கு அளித்து அதனைப் புகழ்கிறார்களே.

இந்த யானையை ஒழித்தால்தான் இவர்கள் என்னைப் புகழ்வார்கள்' என்று தீர்மானித்துக் கொண்டான்.

அவன் யானைப்பாகனை அழைத்து "இந்தப் பட்டத்து யானை நன்கு பழக்கப்பட்டதுதானா?" என்று கேட்டான்.

அவனும் "இதனைப் பழக்கி இதன் மீது அம்பாரியை வைத்தவன் நானே" என்றான்.

மன்னரோ "இந்த யானை கட்டுக்கு அடங்காமல் இருக்கும் போலிருக்கிறது.

இது நன்கு பழக்கப்பட்ட யானை என்பதில் எனக்குச் சந்தேகமே" என்றான்.

யானைப் பாகனும் "அப்படி எல்லாம் இல்லை" என்று கூறவே மன்னனும் "அப்படியானால் இதனைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

உன்னால் இதை அந்த உயரமான மலை மீது ஏறச் செய்ய முடியுமா?" என்று கேட்டான்.

யானைப் பாகனும் "ஓ! முடியும்" என்று கூறி யானையை அம்மலை மீது போகவும் செய்துவிட்டான்.

அரசனும் தன் சில ஆட்களோடு அந்த மலையின் உச்சிக்குப் போனான்.

ஓரிடத்தில் செங்குத்தான பாறையும் மேலே மிகச் சிறிய இடம் சமதளமாகவும் இருந்தது.

மன்னன் யானையை அங்கே நிறுத்தச் சொல்லி யானைப் பாகனிடம் "எங்கே இதனை அந்த இடத்தில் மூன்று காலால் நிற்கச் செய் பார்க்கலாம்" என்றான்.

யானைப் பாகனும் யானையிடம் அவ்வாறு செய்யும்படி கூறவே அதுவும் அவ்வாறே செய்தது.

அரசனுக்கு யானையை எப்படியாவது கொல்ல வேண்டும் என்ற எண்ணம் இருந்ததால் யானைப் பாகனிடம் "சரி, அதனை இப்போது அதன் இரு பின்னங் கால்களால் நிற்கச்சொல்" என்றான்.

யானைப் பாகனும் யானையிடம் அரசனின் கட்டளையைக் கூறவே அதுவும் தன் பின்னங்கால்களால் மட்டும் நின்று காட்டியது.

அடுத்து மன்னன் யானையை முன் கால்கள் இரண்டால் மட்டும் நிற்க வைக்கச் சொல்லவே, யானைப் பாகனும் சற்றுத் திகைத்து அரசனின் கட்டளையைக் கூறினான்.............. (தொடரும்)




- 1882 - காசநோயை உருவாக்கும் நோய்க்கிருமியைத் தாம் கண்டுபிடித்திருப்பதாக ராபர்ட் கோக் அறிவித்தார்.
- 1923 - கிரீஸ் குடியரசாகியது.
- 1944 - இரண்டாம் உலகப் போர்: போலந்தில் சகான் என்ற இடத்தில் ஜேர்மனிய சிறையில் இருந்து 76 போர்க் கைதிகள் தப்பித்தனர்.
- 1947 - மவுண்ட்பேட்டன் பிரபு இந்தியாவின் பிரித்தானிய ஆளுநரானார்.
- 1965 - டட்லி சேனநாயக்க - செல்வநாயகம் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.
- 1965 - நாசாவின் ரேஞ்சர் 9 விண்கலம், சந்திரனில் மோதும் முன்னர் சந்திரனின் புகைப்படங்களை வீடுகளில் உள்ள தொலைக்காட்சிகளில் பார்க்கக்கூடிய படங்களாக மாற்றி பூமிக்கு அனுப்பியது.
- 1972 - ஐக்கிய இராச்சியம் வட அயர்லாந்தில் தனது நேரடி ஆட்சியை ஏற்படுத்தியது.
- 1998 - இந்தியாவில் டண்டான் பகுதியில் இடம்பெற்ற புயலில் 250 பேர் கொல்லப்பட்டு 3000க்கு மேல் காயமடைந்தனர்.
- 1999 - கொசோவோ போர்: நேட்டோ படைகள் யூகொஸ்லாவியாவில் வான் தாக்குதலை நடத்தின.

**பிறப்புக்கள்**

- 1776 - முத்துசுவாமி தீட்சிதர், இசை மும்மூர்த்திகளில் ஒருவர். (இ. 1835)
- 1884 - பீட்டர் டெபாய், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1966)
- 1903 - அடொல்ஃப் பியூட்டினண்ட், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1995)
- **1922 - டி.எம்.சௌந்தரராஜன், பாடகர்**
- 1917 - ஜோன் கெண்ட்ரூ, நோபல் பரிசு பெற்றவர் (இ. 1997)
- 1984 - கிரிஸ் பாஷ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

- 1905 - ஜூல்ஸ் வேர்ன், பிரெஞ்சு எழுத்தாளர் (பி. 1828)
- 1988 - சீர்காழி எஸ். கோவிந்தராஜன், கர்நாடக, திரையிசை பாடகர் (பி. 1933)
- 2002 - சேசார் மில்ஸ்டைன், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1927)

**சிறப்பு நாள்**

- அனைத்துலக காச நோய் தினம்



**ரி.எம்.சௌந்தரராஜன்**

'ரி.எம்.எஸ்' என்று அழைக்கப்படும் ரி.எம். சௌந்தரராஜன் அவர்கள், தமிழ்நாட்டில் மதுரையில், மார்ச் 24 ஆம் திகதி, 1922 ஆம் ஆண்டில், மீனாட்சி ஐயங்கார் என்பவருக்கு இரண்டாவது மகனாக ஒரு சௌராட்டிரப் பிராமணக் குடும்பத்தில் பிறந்தார்.

அவரது மூத்த சகோதரர், வேத நூல்களைக் கற்று அறிஞராகத் திகழ்ந்தவர்.

தன்னுடைய ஏழு வயதில் இருந்தே, தனது குரல்வளத்தின் மீது அக்கறைக் காட்டத் தொடங்கிய அவர், 1946 இல் இருந்து 2007 ஆம் ஆண்டு வரை, தமிழ்த் திரையுலகில் ஆறு தசாப்தங்களுக்கும் மேலாக், தென்னிந்திய திரையுலகின் முன்னணி கதாநாயகர்களுக்குப் பின்னணிக் குரல் கொடுத்தவர்.

பின்னணித் துறையில், 'ரி.எம்.எஸ்' மற்றும் 'பி.சுசீலா' அவர்களது ஜோடி பெரிதும் பேசப்பட்டது. அவர்கள் இருவரும் இணைந்து பல்வேறு திரைப்பாடல்களைப் பாடியுள்ளனர். திரைப் பாடல்கள் மட்டுமின்றி, பல பக்திப் பாடல்களையும் பாடிய டாக்டர் ரி.எம். சௌந்தரராஜன் 1950களிலிருந்து 1980 வரை, தமிழ்த் திரையுலகின் பின்னணித் துறையில், முடிசூடாமன்னனாகத் திகழ்ந்தார்.

10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ்ப் பட பாடல்களையும், 2500 பக்திப் பாடல்களையும் பாடி, பல்வேறு இசையமைப்பாளர்களுடன் இணைந்து பணிபுரிந்து, பல பாடல்களுக்கு இசையமைத்து, சில தமிழ்ப் படங்களில் நடித்த ரி.எம். சௌந்தரராஜன் அவர்கள் பெற்ற விருதுகளும், அங்கீகாரங்களும் எண்ணிலடங்காதவை.

இவர் இதயக் கோளாறு காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்து பின்னர் தனது 91 ஆவது வயதில 2013 ஆம் ஆண்டு மே மாதம் 25 ஆம் திகதி காலமானார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

...நாங்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டோம். இதைப் பற்றி முன்பே சொல்லியிருந்தால் சுந்தர மகாலிங்கத்தைத் தரிசித்த கையோடு ஆனந்த வல்லியம்மையையும் தரிசித்திருப்போமே என்று நினைக்கையில்...

எல்லாம் சரிதான். ஆனால் அப்போது அபிஷேகமோ அலங்காரமோ நடந்திருக்காது. இப்போது விரைந்து போங்கள். உங்களுக்கு கொடுப்பினை இருந்தால் இரண்டையும்கூடப் பார்க்கலாம் என்றார் சிவனடியார்.

எங்களுக்கு ஆச்சரியம்! எப்படி எங்களின் மன ஓட்டத்தைப் புரிந்து கொண்டு அதற்கேற்றாற் போல் பதில் சொல்கிறார் இந்தச் சிவனடியார். பெரிய மனோதத்துவவாதியாய் இருப்பார் போலும் என்று நினைக்கையில்...

அதற்கும் ஓர் ஆச்சரியமான பதில் அளித்தார் அந்த சிவனடியார்.

இதற்கு மனோதத்துவம் எல்லாம் தெரிஞ்சிக்கணும்னு ஒன்னும் தேவையில்லை. மகாலிங்கத்தின் அருள் இருந்தால் போதும். நீங்கள் சீக்கிரம் போங்கள் என்றார்.

நீங்கள் வரவில்லையா?

நான் யாத்திரையை முடித்து விட்டேன். கீழே இறங்க வேண்டும். வரட்டுமா?

கீழே இறங்குகிறீர்களா? இந்த இருட்டிலா? காலையில் போகக் கூடாதா? எங்களுடன் தங்கி ஆனந்த வல்லியம்மனையும் தரிசித்து விடலாமே என்றோம்.

கவலைப்படாதீர்கள். ஆனந்த வல்லியம்மனைத் தரிசித்துவிட்டேன். இந்த இருட்டு ஒன்றும் எனக்குப் புதிதில்லை. எனக்கு வழிகாட்ட மகாலிங்கம் துணைக்கு வருவார் என்று எங்களை நோக்கி



ஆகாய கங்கை அருவி

ஒரு புன்னகை செய்துவிட்டு எங்களது பதிலைக்கூட எதிர்பார்க்காமல் விடுவிடுவென்று நடந்து சென்று ஜனத்திரளில் மறைந்து போய்விட்டார்.

அடடா, அவர் பேரையாவது கேட்டிருக்கலாமே என்று நினைத்தபடி மறுபடியும் சுந்தர மகாலிங்கர் சன்னதியை நோக்கி மேலே ஏறத் தொடங்கினோம். வழியெங்கும் டிபன் கடை என்ற பெயரில் தற்காலிகக் கூடாரங்களில் கூட்டம் வழிந்து கொண்டிருந்தது.

ஆனந்த வல்லியம்மன் சன்னதிக்கு யாரிடம் வழி கேட்பது? என்று யோசனை செய்து கொண்டிருந்தபோது, வாங்க, வாங்க சந்தன மகாலிங்கரை தரிசனம் செய்தீர்களா? என்று வரவேற்றபடி எதிரில் வந்தார் உமா.

அட, இப்படியும் கூட அதிசயம் நடக்குமா என்ன? வழிகாட்ட உமா வந்து விட்டாரே என்ற மகிழ்ச்சி எங்களுக்கு.

“இப்போது ஆனந்த வல்லியம்மனைத் தரிசிக்க வேண்டும். நீங்கள் சீக்கிரமாக மேலே போங்கள். சுந்தர மகாலிங்கருக்குப் பின்பக்கமாக உள்ள மண்டபத்தில்தான் ஆனந்த வல்லியம்மன் இருக்கிறார். தரிசனம் முடிந்த பிறகு அங்கேயே பெட்ஷீட் போட்டு விட்டு வாருங்கள். உங்களுக்கு இரவு அங்கேதான் படுக்கை” என்றார்.

ஆகா, எங்கள் தேவையறிந்து வழி காட்டுகிறாரே. இதுதான் சித்தர்கள் கருணையோ.

“இல்லை, இது சுந்தர மகாலிங்கம் கருணை” யாரோ எதற்கோ சொல்லிச் சென்ற வார்த்தை எங்களுக்குப் பதிலாய் எதிரொலித்தது.

## ஆன்மீகம் 71

சிரமம் பாராமல் படிக்கட்டுக்களைக் கடந்து கொண்டிருந்தோம். சுந்தர மகாலிங்கம் சன்னதிக்குப் பின்னர் உயரமான இடத்தில் உள்ள மண்டபத்தில் ஆனந்த வல்லியம்மன் சன்னதி.

அம்மன் தரிசனத்தைக் காண அருகில் செல்கிறோம். ஆகா, அப்பொழுதுதான் அபிஷேகம் முடிந்து அலங்காரம் தொடங்கியிருந்தது.

மண்டபத்தின் நடுவில் சுயம்புவாக லிங்கத் திருமேனியினராக் ஆனந்த வல்லி அருள் பாலித்துக் கொண்டிருந்தார். விளக்கொளியில் அம்மனின் தரிசனத்தை அருகே இருந்து பார்க்கும் வாய்ப்பு கிட்டியது. இவருக்கும் சுந்தர மகாலிங்கருக்கும் என்ன சம்பந்தம்? யாராவது தகவல் தெரிவிப்பார்களா? என்று ஆனந்த வல்லியம்மன் பூசாரியிடமே கேட்டேன்.

“சற்றுப் பொறுத்திருங்கள். பூசை முடியட்டும். அப்பா வந்து உங்களுக்கு விளக்குவார்” என்றபடியே வரும் பக்தர்களுக்கு விபூதி பிரசாதம் வழங்கிக் கொண்டிருந்தார் பூசாரி.

அப்போது “வணக்கம்” என்றபடியே அருகில் வந்தார் ஒரு துறவி....

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன்,
எம்.ஏ., பி.எச்.டி




# பொன்மனச்செம்மல் எம்.ஜி.ஆர்



83

....திருப்பதி சார் பாத்ரூம் போயிருக்காங்க. ஏன் நான் தடவி விடக்கூடாதா? என்று கேட்டேன்.

“யார் யார் எந்த வேலை செய்யறதுன்னு ஒருமுறை இருக்கு உம்மை இதுக்கு நான் வைக்கலே” என்றார். செம்மலைக் கோபத்துக்கு உள்ளாக்கி விட்டோமே என்ற வருத்தம்.

என் கையை அழுத்திப் பிடித்தார் செம்மல். “இது தமிழ் எழுதுற கை. அது ‘என் கையைத் தொட்டா போதும். காலைத் தொட வேண்டாம்” என்றார்.

### எனக்கொரு மகன் பிறப்பான்

சீதக்காதி வரலாறை ஆறு ஆண்டுகள் ஆராய்ச்சி செய்து எழுதி முதலில் செம்மலிடம்தான் கொடுத்தேன்.

படித்துவிட்டு தனது கதையைப் போலிருப்பதாகவே சொல்லி அதில் உள்ள ஒரு நிகழ்ச்சியை படித்துவிட்டு கண்கலங்கினார்.

சீதக்காதி வீட்டுக்கு ஒரு யாசகர் வருவார். அவருக்கு அவர் மனைவி யாசகம் தரவந்ததும் யாசகர் வாங்காமல் மறுத்துவிட்டு போய்விடுவார்.

சீதக்காதி அவரைத் தேடி மறுத்த காரணம் கேட்க உன் வீட்டில் பிள்ளை இல்லை அதனால் என்பார். எப்படி தெரிந்து கொண்டீர்கள் என்று சீதக்காதி கேட்டபோது உன் வீட்டில் அடுக்கிய பொருள் அடுக்கியே இருந்தது. சுவர்களில் கிறுக்கல் இல்லை. முற்றத்தில் மாதுளைப் பிஞ்சுகள் மரத்திலிருந்து விழுந்து இருந்தது. ஒரு குழவி (குழந்தை) இருந்தால் அதை எடுத்து விளையாடியிருக்கும். அதனால் பிள்ளை இல்லாத வீட்டு தர்மம் எனக்கு வேண்டாம் என்று வந்து விட்டேன் என்றார்.

இது மிகவும் பாதித்தது சீதக்காதியை. அவர் தனது உயிர் நண்பன் படிக்காசுப் புலவரிடம் [illegible] சொல்லி, [illegible] இல்லாததற்கு வருந்தினார்.



எம்.ஜி.ஆர். ஜானகி அம்மாளுடன் சின்னப்ப தேவர்

அப்போது புலவர் சொன்னார்: அப்பனே! எந்த பிள்ளைக்கும் உன்னை அப்பா என்று கூப்பிடும் பாக்கியம் இல்லை. மனிதகுல மகத்துவத்தையும் மேம்பாட்டையும் உன்னோடு முடிக்க இறைவன் நினைத்துவிட்டான் அப்பனே! என்றார்.

செம்மல் திரையில் பாடிய எல்லா பாட்டுக்களும் நிறைவேறின. ஒன்று மட்டும் நிறைவேறவில்லை. “எனக்கொரு [illegible] பான் அவன் என்னைப் [illegible] இருப்பான், தனக்கென வாழாமல் என் தலைவன் வழியிலே நடப்பான்” என்ற பாடல்.

இந்தப் பாடல் வாழ்வில் நிறைவேறவில்லை. திரையிலாவது நிறைவேறட்டும் என்று ஒரு கதையை நான் அமைத்து வைத்திருந்தேன்.



தாதாஜி என நாங்கள் அழைக்கும் ஒரு தயாரிப்பாளர் ஒரு ஆல்பம் கொண்டு வந்தார். சிங்கப்பூரில் ஒரு தையற்கலைஞர். போஸ் என்று பெயர். அவர் செம்மலின் படங்களில் அவர் போட்டிருந்த உடைகளை போலவே அணிந்து மேடைகளில் பாடி நடிப்பாராம்.

அவரது நிகழ்ச்சிக்கு மகாகூட்டம் என்று சொன்னார் தாதாஜி.

அந்த போஸ், அண்ணலின் சிறு வயது தோற்றத்தில் இருந்தார். எம்.ஜி.ஆர் போஸ் என்றுதான் சொல்லுகிறார்கள் என்றும் சொன்னார் தாதாஜி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உதவும் உறவுகள் எனும் நிறுவனத்தின் அனுசரணையுடன் கிளி/சிவநகர் பாடசாலையில் சாதனையாளர்கள் கௌரவிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவியொருவர் கௌரவிக்கப்படுவதையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சிவநகர் செய்தியாளர்)

# மாகாணசபை தேர்தல் முடிபுகள் மூலம் சர்வதேசத்திற்கு பதிலடி கொடுப்போம்

## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு

மாகாணசபைத் தேர்தல் முடிவுகளின் மூலம் சர்வதேச சமூகத்திற்கு பதிலடி கொடுக்க முடியும் என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். களுத்துறையில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற போது அவர் தெரிவித்துள்ளார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

எதிர்வரும் 29ஆம் திகதி மேல் மற்றும் தென் மாகாணசபைகளுக்கான தேர்தல்கள் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைப் பேரவை அமர்வுகளில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்திற்கு நாட்டின் வாக்காளர்கள் பதிலடி கொடுக்க வேண்டுமென அவர் கோரியுள்ளார்.

மாகாணசபைத் தேர்தலில் ஆளும் கட்சியை அமோக வெற்றியடையச் செய்வதன் மூலம், சர்வதேச சமூகத்திற்கு வலுவான ஓர் செய்தியை சொல்ல முடியும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மக்களின் ஆதரவு யாருக்கு காணப்படுகின்றது என்பதனை சர்வதேச சமூகம் உன்னிப்பாக அவதானித்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் தமிழர்களுக்கு எதிரானதல்ல எனவும், பயங்கரவாதிகளுக்கு எதிரானதே எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுத்தத்தின் மூலம் ஈட்ட முடியாத வெற்றியை சர்வதேச சமூகத்தின் ஊடாக ஈட்டிக்கொள்ள சில தரப்பினர் முயற்சிப்பதாக ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (2)

# அமெரிக்கத் தூதரகத்திற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள்

அமெரிக்க தூதரகத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளில் இந்த வாரம் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட வுள்ளது.

எனவே, இந்த வாரத்தில் கொழும்பில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகத்தின் எதிரில் ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் நடத்தப்படக் கூடிய சாத்தியங்கள் அதிகமாக காணப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தூதரகத்திற்கு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளும் போது, இலங்கைப் பொலிஸாரின் ஒத்துழைப்பு வரவேற்கப்பட வேண்டியது என அமெரிக்கத் தூதரக ஊடக அதிகாரி ஜூலியானா ஸ்பவான் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் அமெரிக்கத் தூதரகத்திற்கு அருகாமையில் மூன்று ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# மீனவர்கள் பேச்சுவார்த்தை இடம்பெறுவது சந்தேகம்

## சரத்குமார வீரக்கோன்

(கொழும்பு)

இலங்கை- இந்திய மீனவர்களுக்கு இடையிலான பேச்சுவார்த்தையின் இரண்டாம் சுற்று மீண்டும் இடம்பெறாமல் போகலாம் என மீன்பிடித்துறை பிரதியமைச்சர் சரத்குமாரவீரக்கோன் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரத்தில் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை பேச்சுவார்த்தைக்கு முன்னர் விடு விக்க வேண்டும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா நிபந்தனை விதித்துள்ளார்.

எனினும் இலங்கையின் அமைச்சர் ராஜித சேனாரத்ன அந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளார்.

ஏற்கனவே இரண்டாம் சுற்றுப் பேச்சு கடந்த 18 ஆம் திகதி இடம் பெறவிருந்தபோதும் பின்னர் மார்ச் 25 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந் நிலையில் ஜெயலலிதாவின் நிபந்தனை காரணமாகவே 25ஆம் திகதி பேச்சுவார்த்தை தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக மீன்பிடித் துறை பிரதியமைச்சர் தெரிவித்துள்ளார். (2)

## பொதுக்கூட்டம்


(சித்தங்கேணி)

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரியின் இவ்வாண்டிற்கான அபிவிருத்தி பொதுசபைக் கூட்டம் நாளை மறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அதிபர் சி.தனஞ்செயன் தலைமையில் இடம்பெறும். (2-17)

# வடக்கில் இராணுவத்தை நிலைநிறுத்த அரசு புலி பூச்சாண்டி காட்டுகின்றது

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி.குற்றச்சாட்டு

வடக்கில் நிலை கொண்டுள்ள இராணுவத்தை அங்கிருந்து வெளியேற்ற வேண்டுமென்ற கோரிக்கைகளும் அழுத்தங்களும் வலுவடைந்துள்ள நிலையில் அதனை தகர்த்தெறிந்து வடக்கில் தொடர்ந்தும் இராணுவத்தை நிலை நிறுத்திக் கொள்ளவே அரசாங்கம் புலி பூச் சாண்டி காட்டுகின்றதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் குற்றம் சாட்டியுள்ளார்.



புலிகள் இருக்கும் வரை அவர்களை வைத்து தென்னிலங்கையில் அரசியல் செய்தவர்கள் இன்று புலிகள் அழிந்தும் அவர்களின் நாமத்தை வைத்துக் கொண்டு தென்னிலங்கை மக்களை ஏமாற்றி அரசியல் செய்கின்றார்கள்.

எனவே, அவர்களுக்கு தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க வேண்டுமென்ற எண்ணம் கடுகளவேனும் கிடையாது எனவும தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

புலிகளை முற்றாக அழித்து விட்டதாக அரசாங்கமே நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தது. ஆனால் இன்று வடக்கில் மீண்டும் புலிகள் தலைதூக்கியுள்ளதாக புதியதொரு நாடகத்தை அரங்கேற்றியுள்ளது. எம்மை பொறுத்தவரை வடக்கில் புலிகள் இல்லை என்றே கூறுகின்றோம்.

வடக்கிலுள்ள இராணுவத்தை வெளியேற்றி சிவில் நிர்வாகத்தை உறுதிப்படுத்த வேண்டுமென்ற கோரிக்கைகள் சர்வதேச மட்டத்திலும் குறிப்பாக உள்நாட்டிலும் வலுவடைந்துள்ளன. அத்தோடு ஜெனீவா மனித உரிமை பேரவையிலும் இந்த விடயம் முக்கியத்துவம் பெற்றுள்ளது. எனவே வடக்கில் இராணுவத்தை வெளியேற்ற விரும்பாத இந்த அரசாங்கம் அங்கு மீண்டும் புலிகள் செயற்பட்டு வருவதாகக் காட்ட எத்தனிக்கின்றது. இதற்கு முன்னரும் கிறிஸ்பூதம் போன்ற நாடகத்தை நாட்டின் பல பாகங்களில் அரங்கேற்றியிருந்தமை யாவரும் அறிந்ததே.

சர்வதேசத்தையும் நாட்டு மக்களையும் ஏமாற்றும் இந்த அரசாங்கத்தின் செயற்பாடுகளை இன்று எல்லோரும் நன்றாக அறிந்து வைத்துள்ளனர். ஆகையினால் இவர்களது இவ்வாறான செயற்பாடுகள் பலிக்கப்போவதில்லை. யுத்தம் முடிவடைந்து 5 வருடங்கள் கடந்துள்ள போதும் தமிழ் மக்களுக்கு எவ்வித தீர்வு திட்டங்களையும் இந்த அரசாங்கம் முன்வைக்கவில்லை.

ஆனால் சர்வதேசத்தை ஏமாற்றுவதற்காக அவ்வப்போது பல தற்காலிக வேலைத் திட்டங்களை முன்வைத்து பின்னர அவற்றை குப்பையில் போடுவதையே செய்து வந்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்களும் நல்லிணக்க ஆணைக்குழு என்ற ஒரு விடயத்தை இன்று பலர் மறந்து போயுள்ளார்கள்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடை முறைப்படுத்துமாறு ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை வலியுறுத்தியிருந்த போதும் அரசாங்கம் அதனை செய்யாது தொடர்ந்தும் ஏமாற்றி வருகின்றது.

அதேபோன்று ஜெனீவாவில் இலங்கைக்கு எதிராக வரவிருக்கும் அழுத்தங்களை குறைப்பதற்காக தற்போது ஜனாதிபதி ஆணைக்குழு அமைத்து காணாமற் போனோர் தொடர்பில் சாட்சியங்களை பெற்று வருகின்றது. இதுவும் வெறும் கண்துடைப்பு நாடகமே. (2)

# பொதுமக்களுக்கு இடையூறு விளைவிப்பது எமது நோக்கமல்ல-ருவான் வணிகசூரிய

(கொழும்பு)

வடக்கில் மீண்டும் பயங்கரவாதம் தலைதூக்கும் நிலைமையொன்று தோன்றியுள்ளது. அதற்கு ஒரு போதும் இடமளிக்க முடியாது. எனவே தேசிய பாதுகாப்பைக் கருத்திற் கொண்டு பொலிஸாருடன் இணைந்து விசேட பாதுகாப்பு நடவடிக்கைகளை படையினர் மேற்கொண்டு வருவதாக இராணுவ பேச்சாளர் பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்துள்ளார்.

வடக்கில் விசேட சுற்றி வளைப்பு தேடுதல் மற்றும் சோதனை நடவடிக்கைகள் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளன. இதனால் வட மாகாண மக்கள் மிகுந்த அச்சத்துக் குள்ளாகியுள்ளனர்.

இது தொடர்பில் இராணுவ பேச்சாளர் பிரகேடியர் கூறுகையில்,

நாட்டின் தேசிய பாதுகாப்பு மிகவும் முக்கியமானது. எனவே அது தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும். அதே போல் பொது மககளும் அதற்கான ஒத்துழைப்பினை வழங்க வேண்டும். பொது மக்களுக்கு இடையூறு விளைவிப்பது எமது நோக்கமல்ல.

கடந்த 3 தசாப்த காலங்களாக நாட்டில் காணப்பட்ட பயங்கர வாதம் ஆயிரக்கணக்கான உயிர் தியாகங்கள் செய்து முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. ஆனால் மீண்டும் வடக்கில் பயங்கரவாதம் தலைதூக்கும் நிலையொன்று தோன்றியுள்ளது. எனவேதான் அங்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த 13 ஆம் திகதி கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் வைத்து இருவர் கைது செய்யப்பட்டார்கள். அப்போது புலி சந்தேக நபரொருவர் பொலிஸார் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளார். இதனால் பொலிஸார் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்தையடுத்து வடக்கில் விசேட சுற்றிவளைப்பு தேடுதல மற்றும் சோதனை நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. பயங்கரவாத செயற்பாடுகளை மீண்டும் முன்னெடுப்போர் யார் என்பதை கண்டு பிடித்து அதனை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பு பாது காப்பு பிரிவுக்குள்ளது. எனவேதான பொலிஸாருடனிருந்து நாம் விசேட தேடுதல் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றோம் என்றார். (2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பக்றீரியா கிருமியினால் காசநோய் பரவுகின்றது

உலக காசநோய் தினம் பங்குனி மாதம் 24 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகின்றது.

காசநோய் ஒரு ஆட்கொல்லி நோயாகும். 1815 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 25 சதவீத மரணங்கள் இந்த நோயினாலேயே ஏற்பட்டது. கி.மு. 5000 ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே உலகத்தில் காசநோய் இருந்ததற்கான சான்றுகள் உண்டு. இந்த நோய் பக்றீரியாக் கிருமியினால் ஏற்படுகின்றது என்பது 1882 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 24 ஆம் திகதி விஞ்ஞானி ஶ்ரீ றோபேட் குக்கினால் கண்டு பிடிக்கப்பட்டு மைக்கோ பக்றீரியா எனப் பெயரிடப்பட்டது. இதனாலேயே உலக காச நோய் தினம் இந்நாளில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

மேற்படி நோய்க்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்பட முன்னர் இந்த நோயாளிகள் சூரிய வெளிச்சம் நிறைந்ததும் காற்றோட்டமுள்ளதுமான வீட்டில் நிறைந்த ஓய்வும், போசாக்குள்ள உணவும் கொடுத்து பராமரிக்கப்படுவதே வழக்கமாக இருந்தது.

19 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் இந்த நோய்க்கான BCG தடுப்பு மருந்து கண்டு பிடிக்கப்பட்டு பாவனைக்கு வந்திருப்பினும் இந்த தடுப்பு மருந்து காசநோய்க்கு 100 வீத பாதுகாப்பை கொடுக்கவில்லை. காசநோய்க் கிருமி 1882 இல் கண்டு பிடிக்கப்பட்ட போதும் நோய்க்கான முதல் மருந்து Streptomycin 1944 ஆம் ஆண்டில் தான் கண்டுபிடிக்கப்பட்டது. இருப்பினும் இம் மருந்து பாவிக்கத் தொடங்கி இரண்டு வருடங்களிலேயே காசநோய் கிருமிகள் Streptomycin மருந்தை எதிர்த்து போராடக் கூடிய தன்மை கொண்ட கிருமிகளை உருவாக்கத் தொடங்கி விட்டது.

பின்னர் 1946 ஆம் ஆண்டில் Paraaminosalycilic acid எனப்படும் மருந்தும், மேலும் 1952 ஆம் ஆண்டில் Isoniazid, Rifampicin, Pyrazinamide ஆகிய மருந்துகளும் பின்னர் Ethambutol என்ற புதிய மருந்தும் கண்டுபிடிக்கப்பட்டன.

தனியாக ஒரு மருந்தை பாவிக்கும் போது காசக்கிருமிகள் அம்மருந்தை எதிர்த்து போராடும் கிருமிகளை உருவாக்கியதால் 2-4 மருந்துகளை சேர்த்து நோயிற்கு கொடுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. மேற்படி சேர்க்கை மருந்துகள் பாவனைக்கு வந்த பின் காச நோயாளர்களின் எண்ணிக்கை குறைவடையத் தொடங்கியது. எனினும் 1980 ஆம் ஆண்டின் பின் மீண்டும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கத் தொடங்கியது.

இதற்கு மூல காரணம் கிருமிகள் மருந்துகளை எதிர்த்து போராடக் கூடிய தன்மையை பெற்றதாகும். அத்துடன் HIV எனப்படும் நோய் எதிர்ப்புச் சக்தியை குறைவடையச்செய்யும் Virus கிருமியினால் ஏற்படும் ALDS நோயும் ஒரு காரணியாக அமைந்தது.

**இந்தக் காசநோயால் தற்போதைய உலகம் எதிர் நோக்கியுள்ள பிரச்சினையின் பரிமாணத்தை நோக்குவோமாயின்....**

✠ ஒரு விநாடிக்கு ஒருவர் என்ற கண்க்கில் கிருமித் தொற்று ஏற்படுகிறது.

✠ ஒவ்வொரு 10 விநாடிக்கும் ஒருவர் காசநோயினால் மரணமடைகின்றார்.

✠ தற்போதைய உலக சனத்தொகையில் இரண்டு பில்லியன் பேர் கிருமித் தாக்கத்திற்குள்ளாகியிருக்கின்றனர்.

✠ ஒவ்வொரு வருடமும் 8 மில்லியன் மக்கள் புதிதாக காசநோயிற்கு ஆளாகின்றார்கள்.

✠ ஒவ்வொரு வருடமும் 3மில்லியன் மக்கள் காசநோயால் மரண மடைகின்றார்கள்.

✠ ஒவ்வொரு வருடமும் புதிதாக அரை மில்லியன் மக்கள் சாதாரண மருந்துகளுக்கு கட்டுப்படாத காசநோய் கிருமியினால் ஏற்பட்ட நோய் உள்ளவர்களாக இனம் காணப்படுகின்றார்கள்.

✠ ஒவ்வொரு சுவாச காச நோய் உள்ளவர்களும் 12 தொடக்கம் 15 வரையிலானவர்களுக்கு புதிதாக நோயைப் பரப்புகிறார்கள்.

மேலே குறிப்பிட்ட மோசமான விளைவுகளை உண்டாக்கும் இக் காசநோயை விரட்டியடிப்பதற்கு மக்களாகிய நாம் எல்லோரும் இந்த நோய் பற்றி அறிய வேண்டியது அவசியமாகும்.

➢ காசநோய் காற்றின் மூலம் பரவும் மைக்கோ பக்றீரியம் எனப்படும் ஒரு பக்றீரியா கிருமியின் தாக் கத்தால் ஏற்படுகிறது. சுவாசப் பையில் காசநோய் உள்ள ஒருவர் இருமும் போதும் தும்மும் போதும் வெளிவரும் திரவத் துணிக்கைகள் இந்த பக்றீரியாக்களை கொண்டிருக்கும் மேற்படி துணிக்கைகள் உட்சுவாசிக்கும் காற்றுடன் மற்றவர்களுக்கு தொற்றுகிறது.

➢ காசநோய் உள்ளவர்கள் தும்மும் போதும் இருமும் போதும் வாயையும் மூக்கையும் துணியால் மூடிக்கொள்ளுதல் வேண்டும். காற்றில் இருக்கும் கிருமிகள் நல்ல காற்றோட்டமான இடத்தில் இருக்கும் போது ஐதாக்கப்படும். அதேவேளை நல்ல சூரிய வெளிச்சத்தில் இருபது நிமிடங்களில் அழிந்து போகும். ஆகவே காசநோயாளர்கள் நல்ல காற்றோட்டமானதும் சூரிய வெளிச்சம் படக்கூடியதுமான இடங்களில் பராமரிக்கப்படவேண்டும்.

➢ இந்தக் கிருமி அநேகமாக சுவாசப்பை மூலம் உடலினுள் சென்றடைவதால் சுவாசப்பை நோய்தான் அநேகமாக ஏற் படுகிறது. இருப்பினும் இந்தக்கிருமி இரத்தத்துடன் கலந்து உடலில் எந் தப் பகுதிக்கும் பரவலாம். மேலும் இந்த நோய், நோய் எதிர்ப்புசக்தி குறைவானவர்களின் சலரோகம், போசாக்கின்மை, புற்று நோய் மற்றும் HIV போன்ற நோயுள்ளவர்களும் Steroids புற்று நோய்க்கான மருந்து பாவிப்பவர்களையும் கூடுதலாக தாக்குகின்றது.

➢ காசநோய் ஏற்பட்டவர்களுக்கு காய்ச்சல், இருமல், சளியுடன் இரத்தம், நெஞ்சுநோ, பசியின்மை, உடல் மெலிவடைதல், களைப்பு ஆகிய குணங்குறிகள் ஏற்படலாம். சுவாசப்பை காச நோய் சளிப்பரிசோதனை மூலம் கண்டறியப்படுகின்றது. அதே போல நோயாளி குணமடைகின்றாரா என்பதும் இதன்மூலம் கண்டறியப்படுகின்றது.

➢ இந்த நோய் உள்ள ஒவ்வொருவரும் மருந்துகளை சரியான முறையில் பாவிப்பது மிக முக்கியமாகிறது. மருந்துகளை சரியாகப் பாவிப்பதன் மூலம் இந்த நோயை முற்றாகக் குணப்படுத்த முடியும். இந்த நோயைக் குணப்படுத்த 6 தொடக்கம் 8 மாதங்கள் வரை மருந்து எடுக்கவே ண்டும். எலும்பில் அல்லது மூளையில் மேற்படிநோய் ஏற்பட்டால் 9 தொடக்கம் 12 மாதங்கள் மருந்து எடுத்தல் வேண்டும்.

## உலக காசநோய் தினம் இன்று

➢ இரண்டாம் தடவை காச நோய் வந்தவர்களும் முதல் முறை மருந்து எடுத்து அரைவாசியில் மருந்து எடுக்காமல் விட்டவர்களும் முதல் இரண்டு மாதங்களுக்கு ஊசி மருந்து போடவேண்டும்.

➢ அநேகமாக முதல் 2 தொடக்கம் 3 வாரங்கள் நீங்கள் இது சம்பந்தமாக விடுதியில் தங்கிநின்று மருந்து எடுக்கவேண்டும். இதற்குக் காரணம் நீங்கள் மருந்து உட்கொள்வதை உறுதி செய்வதற்கும் மேலும் மருந்தால் வரும் பக்கவிளைவுகள் அவர்களுக்கு ஏற்படவில்லை என்பதை அறிவதற்குமாகும். இம்மருந்து பாவிக்கத் தொடங்கி இரு வாரங்களின் பின் அவர்களிடமிருந்து மற்றவர்களுக்குத் தொற்றுதல் மிகக் குறைவாகும். இதன் பின்னர் நீங்கள் மருந்தை வேறு ஒருவரின் மேற்பார்வையில் தொடர்ந்து உட்கொள்ளவேண்டும்.

➢ இருமும் போது வெளிவரும் சளியை போத்தல் அல்லது பிளாஸ்ரிக் பாத்திரத்தில் துப்பிமூடவேண்டும். சளியை காலையும் மாலையும் எரித்து விடுதல் நன்று.

➢ காசநோயாளர்கள் காற்றோட்டமானதும் சூரிய வெளிச்சம் உள்ளதுமான இடத்தில் வைத்துப் பராமரிக்கப்படவேண்டும். காசநோய்க்கான மருந்து காலை சாப்பாட்டின் முன் உட்கொள்ளவேண்டும். கர்ப்பவதிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் இம்மருந்து எடுக்கலாம். மருந்து தொடங்கி 2,5,6ஆம் மாதம் மூன்று சளிப் பரிசோதனைகள் செய்வதன் மூலம் உங்கள் நோய் குணமடைகிறதா என்று அறியமுடியும்.

➢ சலம் சிவப்பு நிறமாகவோ அல்லது உமிழ்நீர் றோஸ் நிறமாகவோ மாறலாம். இது மருந்தின் தன்மை. இதற்குப் பயப்படத் தேவையில்லை. ஆனால் குமட்டல், சத்தி, கண் பார்வை மங்கல், செங்கமாரி, தோல் சொறிவு, கால் விறைப்பு போன்ற தன்மைகள் இருப்பின் உடனடியாக வைத்தியரை நாடவும். மேற்படி பக்க விளைவு சிலருக்கு ஏற்படலாம். இப்பிரச்சினைக்கு இலகுவான தீர்வுகள் உண்டு.

➢ மேலும் நோயுள்ள காலத்தில் சத்துள்ள ஆகாரங்கள் சாப்பிடவேண்டும். கிரந்தித் தன்மை கொண்ட மீன், ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி போன்ற உணவுகளை மேற்படி மருந்து எடுக்கும் காலத்தில் தவிர்க்கவும். அத்துடன் மது அருந்துதல், புகை பிடித்தல் போன்றவையும் தவிர்க்கப்பட வேண்டும்.

➢ நோயாளியுடன் பழகுபவர்களில் 30 வீதமானவருக்கே கிருமி தொற்று ஏற்படலாம். கிருமித் தொற்று ஏற்பட்டவர்களில் 10 வீதமானவருக்கே நோய் ஏற்படும். ஆகவே நோயாளியின் வீட்டில் அல்லது விடுதியில் இருப்பவர்கள் சளி மற்றும் X-ray பரிசோதனையை முதல் இரு வாரத்திலும் மேலும் 6,12,18 ஆம் மாதங்களிலும் செய்தல் வேண்டும். 6 வயதுக்குட்பட்டவர்களுக்கு சிறு ஊசிப்பரிசோதனையும் அவசியமாகிறது.

➢ கிருமித் தொற்று ஏற் பட்டவர்களில் 5 வீதமானவர்களில் இந்தக் கிருமி சில மாதங்கள் முதல் பல வருடங்கள் வரை உறங்கு நிலையில் இருந்துவிட்டு ஏதாவது காரணத்தால் நோய் எதிர்ப்புத் தன்மை குறைவடையும் சந்தர்ப்பத்தில் மீண்டும் இந்தக் கிருமி பெருகி நோயை உண்டாக்கலாம்.

➢ காசநோய்க்கு மருந்து எடுக்காவிடின் 50 வீதத்திற்கும் மேலானவர்கள் மரணமடையலாம். மருந்தை ஒழுங்காகப் பாவிக்கத் தவறினால் மீண்டும் இந் நோய் ஏற்படும் வாய்ப்பு மிக அதிகமாகும். அத்துடன் 2ஆம் தடவை இந்தக் கிருமி வழமையான மருந்துகளுக்கு கட்டுப்படாமல் போக லாம்.

➢ மேலும் மருந்தினை நாம் ஒழுங்கீனமாக அல்லது சரியான அளவில் சரியான நேரத்தில் பாவிக்காது விடுவதால் எமது இரத்தத்தில் மருந்தின் அளவு தேவையான அளவுக்கு இல்லாத காரணத்தால் கிருமிகள் இறக்காமல் உடலில் நோயை ஏற்படுத்தும்.

➢ அத்துடன் மட்டுமல்லாமல் இந்த மருந்தின் தன்மையை அறிந்து கொண்டு இந்த மருந்துகளை எதிர்த்து போராடக் கூடிய தன்மையைக்கொண்ட கிருமிகளை உருவாக்கவல்லது. அப்படி உருவாகும் கிருமி தற்போது வழமையாக பாவிக்கும் மருந்திற்கு கட்டுப்படாது போகும். இப்படியான கிருமிகளை கட்டுப்படுத்த பெருமளவிலான மருந்துகளை ஒன்று தொடக்கம் 2 வருடங்களுக்கு மேல் பாவிக்க வேண்டிய தேவையேற்படும்.

➢ உங்களுக்கு அல்லது உங்கள் வீட்டில் யாருக்காவது அல்லது உங்களுடன் படிப்பவர்கள் அல்லது வேலை செய்பவர்கள் யாருக்காவது இரண்டு கிழமைக்கு மேல் காய்ச்சல், இருமல், சளியுடன் இரத்தம், சாப்பாட்டிற்கு மனமின்மை, உடல் மெலிவு, அதிக வியர்வை போன்ற குணங்குறிகள் இருப்பின் உடனடியாக வைத்தியரிடம் அழைத்து வந்து பரிசோதனை செய்யவும்.

➢ மேற்படி செய்வதன் மூலமும் உங்கள் வீட்டில் உள்ள நோயாளிகள் ஒழுங்காக மருந்தை எடுக்கிறார்கள் என்பதை உறுதி செய்வதன்மூலமும் காசநோயை நாம் நமது சமுதாயத்திலிருந்து விரட்ட முடியும்.

➢ சாதாரண கண்ணுக்குப் புலப்படாத நுணுக்குக் காட்டிக்கு மட்டும் புலப்படும் கிருமி இந்தப் பிரபஞ்சத்தில் தன்னை நிலை நிறுத்தப்போராடுகிறது. நாம் எல்லோரும் ஒன்றுகூடி மேற்படி கிருமியை விரட்ட நம்மால் முடிந்த வரையில் போராடுவோம்.

**மார்புநோய் சிகிச்சை நிலையம், பண்ணை வைத்தியசாலை.**

## காசநோய் தின வினா விடைப்போட்டி

1. காசநோய்க்கான பிரதான அறிகுறிகள் எவை?
2. சுவாச காசநோய் உள்ள ஒருவரிடமிருந்து எத்தனை பேருக்கு அந்நோய் தொற்றக் கூடும்?
3. கர்ப்பவதிகள், பாலூட்டும் தாய்மார்கள் காசநோய்க்கான மருந்தை பாவிக்கலாமா?

மேற்படி கேள்விகளுக்கான சரியான விடைகளை எழுதி அனுப்பி வைப்பவர்களில் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் அதிர்ஷ்டசாலிகள் மூவருக்கு முறையே *3000,2000,1000* என்றவாறாக பணப்பரிசில் வழங்கப்படும்.

எதிர்வரும் *31.03.2014* ஆம் திகதிக்கு முன்னர் விடைகளை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் காசநோய் தின போட்டி என்று எழுதி *இல. 3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்* என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பரிசில் பெறுபவர்களின் விபரம் பின்னர் வலம்புரியில் அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அத்தனையும் உண்மை; உண்மை அன்றி வேறொன்றும் இல்லை...!"

ஐ.நா. மனித உரிமைச் சாசனப்படி அனைத்துலகம் ஏற்கத்தக்க உள்ளக விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அது சாத்தியப்படாத பட்சத்தில் அனைத்துலக தளத்தில் விசாரணை முன்னெடுப்பு இடம்பெறும் என்று நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜெனிவாவில் முடிபு என்னவாகும் என்பதை எண்ணி கை விரல்களை மடக்கி எண்ணிக் கொண்டிருக்கும் நாட்கள் இவை. எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா என்ற தமிழரின் கேள்விக்குறிக்கு முன்னால் அவர்களின் தாய் மண்ணில் இடம்பெறும் நிகழ்வுகள் பல கேள்விக்குறிகளை எழுப்பி நிற்கின்றன.

கைதுகள், காணாமற்போதல், தடுத்து வைப்பு, வெள்ளை வான் கடத்தல்கள், இடைக்கிடை குண்டு வெடிப்புகள், ஆயுதங்கள் மீட்பு, இராணுவ சுற்றிவளைப்பு என்று முன்னைய நாட்களை நினைவூட்டும் நாட்கள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

2009 மே மாதத்தில் ஒழிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் மீண்டும் ஒளி காட்டுவதாக எச்சரிக்கைகள் வேறு.

அந்தமான்தீவில் விடுதலைப்புலிகள் மறைந்து வாழ்கின்றனர் என்று இந்திய ஊடகங்கள் வெளியிட்ட செய்திகளை வலுவாக்கி உண்மையாக்குவதற்கான முயற்சியில் இலங்கை தீவிரமாக இறங்கியுள்ளது. தர்மபுரத்தில் ஒரு விதவைத் தாயையும் அவரது 13 வயது மகளையும் கைது செய்து காவலில் வைப்பதற்கு மீண்டும் விடுதலைப்புலிகள் என்பது அரசுக்குத் தேவையாயிற்று.

அதற்காகவே ஒரு காவற்றுறையினரை இனந்தெரியாத ஒருவர் சுட்டுக்காயப்படுத்தினார் என்ற செய்தியைப் படைத்துறை வெளியிட நேர்ந்தது. அந்தக் காயமடைந்தவர் பெயர் என்ன? எந்த ஊரைச் சேர்ந்தவர்? எந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார் என்று எந்தத் தகவல்களையும் வெளியிட அரசாங்கம் தயாரில்லை.

இல்லாத ஒன்றை வைத்து அதனால் நெருக்கடிகளை உண்டாக்க நினைப்பவர்களுக்குப் போதிய தரவுகள் இல்லாதிருக்கலாம். ஆனால், இரண்டு தமிழர்களின் புகைப்படங்களுடனான சுவரொட்டிகளை விநியோகித்து அவர்கள் வெளிநாட்டில் இருந்து நாடு திரும்பிய விடுதலைப்புலி உறுப்பினர் என்றும் மீண்டும் விடுதலைப்புலிகளை ஒன்றிணைக்கவே நாடு திரும்பினர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் மகிந்த சமரசிங்க இந்தத் தகவலை ஜெனிவா மாநாட்டில் வெளியிட்டு உலகை நம்ப வைக்க எடுத்த முயற்சி நம்ப முடியாதது. தர்மபுரம் ஜெயக்குமாரி பூசாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மகள் விபூசிகா சிறுவர் நலன்புரி இல்லம் ஒன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இந்த இடத்துக்குச் சென்ற மனித உரிமை செயற்பாட்டாளர்களான ருக்கி பெர்னாண்டோவும் அருட்தந்தை பிரவீனும் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டனர்.

முதலிரு கைதுகளையும் விடுவிக்குமாறு முன்னெடுக்கப்பட்ட போராட்டம் பின்னைய இரு கைதுகளையும் விடுவிக்கும் போராட்டமாக உடனடியாகத் திரும்பியது.

மனித உரிமை செயற்பாட்டாளர்களின் கைது சூறாவளியாக வேகமெடுத்து ஜெனிவாவிலும் எதிரொலித்தது.

தாமதமின்றி இவர்கள் இருவரும் விடுதலையாயினர். விடுதலைப்புலிகளுக்கு உதவி வழங்கி அவர்களை மீளெழுச்சி கொள்ளச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் ருக்கி பெர்னாண்டோவும் அருட்தந்தை பிரவீனும் விடுதலையாகும்போது குற்றமற்றவர்கள் என அறிவிக்கப்பட்டது.

தாயும் மகளுமான ஜெயக்குமாரி மற்றும் விபூசிகா ஆகியோரின் கைது விடயத்தை மழுங்கடித்து உலகின் கவனத்தைத் திசை திருப்பவே பின்னைய இரு கைதுகளும் இடம்பெற்றன என்பதை ஏனோ பலரும் அறியவில்லை. ஆக இலங்கை அரசாங்கம் தனது திட்டத்தில் முழுமையான வெற்றி கண்டுள்ளது.

ஜெயக்குமாரியும் விபூசிகாவும் எப்போது விடுதலை பெறுவர்? இவ்விடயத்தில் இனி அக்கறை காட்டப் போவது யார்?



ஜெனிவா சென்ற வடமாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் தனது வல்லமைக்குட்பட்ட நான்கு நிகழ்வுகளில் உரையாற்றிவிட்டு நாடு திரும்பியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றதும் இடம்பெறுவதும் இனப்படுகொலை என்பதை வலியுறுத்திய அனந்தி, இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை தேவை என்பதை மூன்று பிள்ளைகளின் தாயின் பக்குவத்திலிருந்து எடுத்துக்கூறியுள்ளார்.

ஜெனிவாவில் முன்வைக்கப்பட்டுள்ள மூன்றாவது தீர்மானம் தரும் ஏமாற்றத்தையும் அவர் எடுத்துக்கூறத் தயங்கவில்லை. இந்தத் தீர்மானத்தில் சுயாதீன சர்வதேச விசாரணைக்கு இடம் இல்லை என்று அடித்துக் கூறியுள்ளார் தமிழ் குடிசார் சமூகத்தின் பிரதிநிதியான சட்ட விரிவுரையாளர் குருபரன்.

ஆனால், இத்தீர்மானத்தின் வரைவில் சுயாதீன சர்வதேச விசாரணைக்கு இடமிருப்பதாக கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் கூறிவருகின்றார்.

யார் என்ன சொன்னாலும் இலங்கை மீது விசாரணை நடத்தும் அதிகாரம் ஜெனிவாவுக்கு கிடையாது என்பது இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவினதும் அவரது அமைச்சரினதும் நிலைப்பாடு.

அனைத்துலக மனித உரிமை விவகாரங்களில் சபையின் ஒப்புதலுக்கு அமைய சர்வதேச விசாரணைக்கான அதிகாரம் தமக்குண்டு என்பதை நவநீதம் பிள்ளை உறுதிப்படுத்தியுள்ளார்.

பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் வில்லியம் ஹேக் தமது அறிக்கையில் போர்க்குற்றங்களுக்கு வழங்கப்படும் தண்டனையே இலங்கையில் சட்ட நீதியான ஆட்சியை வலுப்படுத்தும் என்று தெரிவித்துள்ளார்.

பொறுப்புக் கூறலின்றி நீண்டகால சமாதானத்தை எட்டுவது கடினம். முன்னைய இரண்டு தீர்மானங்களையும் செயற்படுத்த இலங்கை அரசு தவறியுள்ளது. இலங்கை மீதான சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்று அவசியம் என்ற தம்பக்க நியாயங்களையும் வில்லியம் ஹேக் முன்வைத்துள்ளார். ஐ.நா. மனித உரிமை சாசனப்படி அனைத்துலகம் ஏற்கத்தக்க உள்ளக விசாரணைக்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அது சாத்தியப்படாத பட்சத்தில் அனைத்துலக தளத்தில் விசாரணை முன்னெடுப்பு இடம்பெறும் என்று நவநீதம்பிள்ளை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி இலங்கைக்கு மேலும் ஓராண்டு கால அவகாசம் வழங்கப்படுவதாக அர்த்தம் கொள்ள முடியும். அல்லது சர்வதேச விசாரணைக்கு ஜெனிவா தயாராகின்றது என்றும் அர்த்தம் கொள்ளலாம்.

இவ்வேளையில் இலங்கையின் போர்க்குற்றங்களுக்கான முடிக்குரிய சாட்சியாக களமிறங்கியுள்ளார் மருத்துவர் தியாகராஜா வரதராஜா. யுத்த இறுதிக்களத்தில் அரச அராஜகங்களையும் அட்டூழியங்களையும் நேரடியாக சந்தித்த மருத்துவர் வரதராஜா அதனை அக்காலத்தில் பி.பி.சி. உட்பட உலகின் பல்வேறு வானொலிகள் ஊடாகவும் தனது குரல் வடிவில் உலகுக்கு தெரியப்படுத்தியவர்.

போரின் முடிபு நாட்களில் இவரும் மற்றும் நான்கு மருத்துவரும் இராணுவத்தால் கைதாகி பல மாதங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். 2009 ஜூலை 8 ஆம் திகதி கொழும்பில் தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் இவர் ஊடகவியலாளர்களைச் சந்திக்க அரசாங்கம் ஏற்பாடு செய்து கொடுத்தது.

போர்க்காலத்தில் விடுதலைப்புலிகள் அச்சுறுத்தல் காரணமாகவே போர்க்களம் தொடர்பான தகவல்களை அரச படைகளைக் குற்றவாளிகளாகச் சித்தரித்து தாம் கருத்துக் கூறியதாக இச்சந்திப்பில் மருத்துவர் வரதராஜா தெரிவித்தார்.

நேரில் கண்டவைகளையும் அவைகளை உடனுக்குடன் உலகுக்கு எடுத்துச் சொன்னவற்றையும் மறுத்துக் கூறவேண்டிய அச்சுறுத்தல் இவருக்கு இருந்ததை அவ்வேளை பலரும் புரிந்து கொண்டனர்.

தற்போது அமெரிக்காவில் வாழ்ந்துவரும் மருத்துவர் வரதராஜா அரச தரப்பின் அச்சுறுத்தலால் தாம் முன்னர் கூறிய உண்மைகளை தாமே பொய் என எடுத்துக்கூற நேர்ந்ததை ஜெனிவாவில் விபரித்துள்ளார்.

உண்மையைப்பொய் என்றது ஏன் என்றும், பொய்யெனக் கூறப்பட்டவை உண்மை அல்ல என்றும் இப்போது கூறுவது ஏன் என்று இவர் தெரிவித்திருப்பது..

போர்க்காலத்தில் உடனுக்குடன் வெளிப்படுத்தப்பட்ட அத்தனையும் உண்மை. உண்மை அன்றி வேறொன்றும் இல்லை என்றும் மருத்துவரின் சத்திய வாக்கை உலகம் தெரிந்து கொண்டு செயற்படவேண்டியது அவசியம்.

-பனங்காட்டான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனர்த்த முகாமைத்துவம் குறித்து ஊடகங்களுக்கு பொறுப்பு உண்டு

(யாழ்ப்பாணம்)

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் பொறுப்பு ஊடகங்களுக்கு உள்ளது என யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் தெரிவித்துள்ளார்.

அனர்த்த முகாமைத்துவம் தொடர்பான பயிற்சி பட்டறை அண்மையில் யாழ்.மாவட்ட செயலகத்தில் காலை ஆரம்பமாகி இடம்பெற்றது.

இந்த பயிற்சி பட்டறைக்கு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

அனர்த்தம் தொடர்பில் ஊடகவியலாளர்களின் பங்களிப்புக்கள் என்ன என்பது பற்றி அறிந்து செயற்பட வேண்டும்.


மேலும் ஊடகவியலாளர்கள் ஏதாவது தகவல் ஒன்றை வழங்கும் போது அதனை சரிவர ஆராய்ந்த பின்னரே அத் தகவலை வழங்க வேண்டும்.

அதேபோல அனர்த்தம் தொடர்பிலும் ஊடகவியலாளருடைய பங்களிப்பு மிக அவசியம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை.

அந்த பொறுப்பை சரியான விதத்தில் செய்து முடிப்பது அவசியம்.

எனினும் இந்த அனர்த்த முகாமைத்துவம் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டும்பொறுப்பு ஊடகங்களுக்கு உண்டு. ஆகவே, இந்த அனர்த்தம் தொடர்பில் முதலில் ஊடகவியலாளர்களே தகுந்த அறிவை பெற வேண்டும் என்பதற்காகவே இந்த பயிற்சி பட்டறை ஊடகவியலாளருக்கான பயிற்சி பட்டறை எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த பயிற்சி பட்டறையில் வளிமண்டலவியல் முன்னெச்சரிக்கை திணைக்களத்தின் பொறுப்பதிகாரி பிரதீபன், தடுப்பு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலைய இயக்குநர் அனோஜா செனவீரட்ன, அனர்த்த முகாமைத்துவ பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் நிமலதாஸ் மற்றும் அனர்த்த முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (2-6)



வவுனியா, தட்சனாங்குளம் இந்து மயானம் அண்மையில் சிரமதானம் செய்யப்பட்ட போது...
(படம்: குருமன்காடு செய்தியாளர்)

# கச்சதீவு அச்சதீவாக மாறிவிட்டது -பிரசாரக் கூட்டத்தில் விஜயகாந்த்-

கடலில் மீன்வளம் நிறைந்துள்ள கச்சதீவு, மீனவர்களுக்கு அச்சதீவாகவே மாறிப்போய் விட்டது என தே.மு.தி.க. தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

இராமநாதபுரத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தி.மு.கவும் அ.தி.மு.கவும் கச்சதீவை மீட்போம் என்று சொல்கிறார்களே தவிர அதை மீட்கத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

கடிதங்கள் எழுதிக் கொண்டே இருக்கிறார்கள். கச்சதீவு அருகே மீன்பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை துப்பாக்கியால் சுடுவதும், தாக்குவதும் அன்றாட நிகழ்வுகளில் ஒன்றாகிவிட்டது. சுருக்கமாகச் சொல்லப் போனால் கச்சதீவு அச்சதீவாகவே மாறிப் போய் விட்டது.

பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் மீனவர்கள் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வு காணப்படும் என அக்கட்சியின் தலைவர் ராஜ்நாத் சிங் என்னிடம் தெரிவித்துள்ளார் என மேலும் குறிப்பிட்டார். (2)

# தமிழினத்தின் இருப்பை தக்கவைக்க இடைக்கால நிர்வாகம் அவசியம்

## முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜெனீவாவில்

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் இடம்பெற்ற இனபடுகொலை தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று நடத்தப்பட வேண்டும் என்று தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ்.மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஜெனீவாவில் வைத்து தெரிவித்துள்ளார்.

தற்போது தமிழினத்தின் இருப்பை முழுமையாக மாற்றியமைப்பதற்காக கட்டமைக்கப்பட்ட இனவழிப்பொன்று இடம்பெற்று வருகின்றது. இவற்றைத் தடை செய்வதற்கு இடைக்கால நிர்வாகம் ஒன்று ஏற்படுத்துவது அவசியமாகும்.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான நிரந்தர தீர்வாக சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட தீர்வொன்று வழங்கப்படவேண்டும். அத்துடன் இலங்கையில் இடம்பெற்ற இன்வழிப்பு தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று நடத்தப்படுத்துவதற்கு இதுவே பொருத்தமான தருணமாகும். இதற்கான சந்தர்ப்பத்தை நழுவவிடும் பட்சத்தில் தமிழர்களின் அடையாளங்கள் அழிக்கப்பட்டுவிடும் எனவும் தெரிவித்துள்ளார்.

ஜெனீவா ஊடக நிலையத்தில்நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவிலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் போது பாரியளவில் மனிதவுரிமை மீறல்களும் யுத்தக்குற்றங்களும் இடம்பெற்றதற்கான நேரடிச்சாட்சியங்கள் காணப்படுகின்றன.

அதனடிப்படையில் வைத்துப் பார்க்கையில் இறுதியுத்தத்தின் போதும் அதற்கு முன்னரும் பின்னருமான தருணங்களில் தமிழ் மக்கள் மீது நிகழ்ச்சிநிரலிடப்பட்ட ஒரு இனப்படுகொலை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது என்பது தெளிவாகின்றது.

ஆகவேதான் நாம் இனப்படுகொலை என்ற வார்த்தைப் பிரயோகத்தை பயன்படுத்துகின்றோம். மேலும் இறுதியுத்தத்திற்கு முகங்கொடுத்த எத்தனையோ நேரடிச் சாட்சியங்கள் அவ்விடயங்கள் தொடர்பில் மௌனமாக வேண்டியதொரு நிலைமை காணப்படுகின்றது. குறிப்பாக எம் போன்ற மக்களுடன் நெருக்கமானவர்களுக்கு கூட அவர்கள் அச்சத்துடனேயே தமது நெருக்கடியான நிலைமைகளைத் தெரிவிக்கின்றனர்.

யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டதாக அரசாங்கம் அறிவித்து ஐந்து வருடங்களாகின்ற நிலையிலும் அரசாங்கம் இனப்பிரச்சினைக்கான தீர்வு அல்லது குறைந்த பட்சம் தமிழர்கள் சுதந்திரமாக வாழ்வதற்குரிய நடவடிக்கைகளையோ மேற்கொள்ளவில்லை. மாறாக தமிழ் மக்களை அடக்கு முறைக்குள் ஆட்சி செய்வதற்காக திட்டமிட்ட குடியேற்றங்கள், நில ஆக்கிரமிப்பு, பௌத்த மதத்தை பரப்பும் செயற்பாடுகள் இவற்றுக்கெல்லாம் மேலாக இராணுவ ஆக்கிரமிப்பு ஆகிய செயற்பாடுகளை நன்கு திட்டமிட்டு தற்போதைய ஆட்சியாளர்கள் மேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக இங்கு வருகைதந்து தமிழர்களின் நிலைதொடர்பில் கருத்து வெளியிடும் அனைத்து தரப்பினரும் நில ஆக்கிரமிப்பு தொடர்பான கருத்துக்களை முன் வைத்திருக்கின்றனர்.

ஆகவே இவ்வாறான கட்டமைக்கப்பட்டதொரு இனவழிப்பை உடனடியாகத் தடுத்து நிறுத்துவதற்கு இடைக்கால நிர்வாகம் ஒன்று அமைக்கப்படவேண்டியது அவசியமாகும்.

தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் அமெரிக்காவினால் பிரேரணையொன்று சமர்ப்பிக்கப்பட்டு சில திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருப்பினும் இப்பிரேரணை தமிழர்களுக்கு ஏமாற்றமளிக்கும் ஒன்றாகவே காணப்படுகின்றமை துர்ப்பாக்கியமானதொன்றாகும்.

இப்பிரேரணையை கூர்மையாக பார்க்கையில் குறிப்பாக எந்தவொரு இடத்திலும் "சர்வதேச விசாரணை" என்ற சொற்பிரயோகம் காணப்படவில்லை. தற்போது திருத்தப்பட்டுள்ள சரத்தின் பிரகாரம் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை ஆணையாளருக்கு இலங்கையின் விடயங்களை ஆராய்ந்து அடுத்த கூட்டத்தொடரில் வாய்மொழி மூலமான கருத்துக்களை வெளிப்படுத்த முடியும் என்பதோடு அதற்கு அடுத்து நடைபெறவுள்ள கூட்டத் தொடரிலேயே அறிக்கையிடலை முனவைக்க முடியும் எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது

60வருட கால தமிழர் போராட்டத்தின் பரிணாமம் மாற்றப்பட்டு பெரும்பான்மை மதத்தினரால் சிறுபான்மை மதங்களான இஸ்லாம், கிறிஸ்தவம் மற்றும் இந்து மதங்கள் தாக்கப்படுவதாக மட்டும் சித்தரிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் சிறுபான்மை மதங்கள் தாக்கப்படுவதென்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டியது. இருப்பினும் உரிமைகளுக்கான போராட்டங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதே மிக முக்கியமானதாக இருக்கின்றது.

இலங்கையில் காணப்பட்ட இனங்களுக்கிடையிலான பிரச்சினைகளின் வரலாற்றினை அறியாதவொரு நபர் இப் பிரேரணையை தற்போது வாசிக்கும் நிலைமையேற்பட்டால் அவரால் தமிழர்களின் உரிமைப்போராட்டம் தொடர்பில் அறிந்து கொள்வதற்கான எந்த விதமான வார்த்தைப்பிரயோகங்களும் இடம்பெற்றிருக்காதிருக்கின்றது.

இந்தப் பிரேரணையில் எங்குமே "தமிழ்" என்றொரு சொற்பதமே காணப்படவில்லை என்பது வருத்தமளிக்கின்றது. எம்மைப் பொறுத்தவரையில் தற்போதைய ஆட்சியாளர்களை நாம் ஒருபோதும் ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் தொடர்பில் எமக்கு கடுமையான விமர்சனம் இருக்கின்றது.

அதற்காக ஆட்சி மாற்றம் ஏற்பட்டுவிட்டால் தமிழர்களின் பிரச்சினை தீர்ந்துவிடும் என்று கூறிவிடமுடியாது. ஆனால் இப் பிரேரணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் ஆட்சி மாற்றம் ஏற்படும் பட்சத்தில் இனங்களுக்கிடையிலான பிரச்சினைகள் தீர்ந்து விடும் என்ற தொனியை வெளிப்படுத்துகின்றதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது. ஆகவே நாம் இப் பிரேரணையை ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது.

எமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக நாம் கடந்த 60 ஆண்டுகளுக்கு மேலாக போராடிக் கொண்டிருக்கின்றோம். எமது உரிமைகளை பெற்று தலைநிமிர்ந்து சுதந்திரமாக வாழ்வதற்கும் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் கட்டமைப்பு ரீதியான இனவழிப்பிற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கும் இடைக்கால நிர்வாகமொன்று அமைக்கப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்கான நிரந்த தீர்வாக சுயநிர்ணய உரிமைளை அங்கீகரித்த தீர்வொன்று வழங்கப்படவேண்டும். இதனை சர்வதேச சமூகத்தினரும் குறிப்பாக பிரேரணையை முன்வைத்திருக்கும் அமெரிக்க தரப்பினர்கருத்திற்கொண்டு தற்போது ஐக்கிய நாடுகளில் சபையில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பிரேரணையில் இவ்விடயங்களையும் உள்வாங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும் என்பது எமது வேண்டுகோளாகவிருக்கின்றது என அவர் அங்கு மேலும் தெரிவித்தார்.(2-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகை வாங்குவது போன்று பாசாங்கு செய்த பெண் கைது

(பூந்தோட்டம்)

வவுனியாவில் நகைக் கடைகளில் நகை வாங்குவது போன்று நடித்து நகைகளை கொள்ளையிட்ட பெண்ணொருவர் வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இளம்பெண்ணொருவர் வவுனியாவில் பல நாட்களாக நகை கடைகளுக்கு சென்று நகைகளை வாங்குவது போன்று நடித்து அங்குள்ளவர்களை ஏமாற்றி இலாவகமாக நகைகளை கொள்ளையடித்து வந்துள்ளார்.

இந் நிலையில், நகை கடைகளில் உள்ள சி.சி.ரி.வி கமராக்களில் இப் பெண் நகைகளை திருடுவது பதிவாகியுள்ளது.

இதனையடுத்து அனைத்து நகை கடைகளிலும் இப் பெண் தொடர்பான தகவல் வழங்கப்பட்டிருந்தது. நேற்று முன்தினம் வழமை போல் நகர்பகுதியில் உள்ள நகைகடையொன்றுக்கு குறித்த பெண் வந்த போது, நகைக்கடை உரிமையாளர்களினால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு அப்பெண் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர். (2-9-266)

## அங்குரார்ப்பண கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி ஊற்றுப்புலம் வள்ளுவர் பண்ணை கிராம அபிவிருத்திச் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு ஊற்றுப்புலம் பொது நோக்கு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு மாவட்ட கிராம அபிவிருத்தி அலுவலர், ஊற்றுப் புலம்கிராம அலுவலர் எஸ். சிவநேசன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்பகுதியிலுள்ள அனைவரையும் பங்குபற்றி கிராம அபிவிருத்திச் சங்கம் சிறப்புற செயற்பட உதவுமாறு கிராம அபிவிருத்தி அலுவலர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (2-9-254)

# பொலிஸ் உத்தியோகத்தருக்கு விளக்கமறியல் - நீதிமன்றம்

(பூந்தோட்டம்)

சக பொலிஸ் உத்தியோகத்தரின் கைத்தொலைபேசி மற்றும் ஏனைய பொருட்களை அபகரித்தார் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை எதிர்வரும் ஏப்ரல் 5 ஆம் திகத வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பணிமனையில் பயிற்சியை மேற்கொள்வதற்காக முழங்காவில் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் வருகை தந்திருந்தார்.

அவ்வேளை, சக பொலிஸாரின் கைத்தொலைபேசி மற்றும் பொருட்களை திருடியதாக குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை வவுனியா பொலிஸார் கைது செய்தனர்.

இதனையடுத்து, குறித்த பொலிஸ் உத்தியோகத்தரை நேற்று முன்தினம் வவுனியா நீதவான் முன்னிலையில் வவுனியா பொலிஸார் ஆஜர்படுத்தினர்.

குறித்த சந்தேகநபரை விசாரணை செய்த நீதவான் தொடர்ந்து 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (2-9-266)





கிளிநொச்சி கலவெட்டித் திடல் நாகேஸ்வரா வித்தியாலயத்தில் சாரணர் குழுவொன்று புதிதாக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டது. இச்சாரணர் குழுவிற்கு கிளிநொச்சி மாவட்ட முன்னாள் சாரண உதவி ஆணையாளர் பொன். தில்லைநாதன் பயிற்சி அளிப்பதையும் பாடசாலை அதிபர் கே.ஞானசீலன் சாரணர்களுக்கு சின்னம் சூட்டுவதையும் அதிபர், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளருடன் சாரணர் நிற்பதையும் படங்களில் காணலாம். (படங்கள்:-பூநகரி செய்தியாளர்)

# சமுர்த்தி உத்தியோகத்தர்கள் இன்மையால் மக்கள் சேவை பெறுவதில் தாமதம்

(முல்லைத்தீவு)

கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவின் கீழுள்ள 10 கிராம சேவையாளர் பிரிவுகளிலும் நிரந்தர சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கள் இதுவரை நியமிக்கப்படவில்லை.

கடந்த 2013 ஆம் ஆண்டு ஜுலை மாதம் முதலாம் திகதி முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நிரந்தர சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கான நியமனம் வழங்கப்பட்டது.

ஆயினும் கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவிலுள்ள 46 கிராம சேவையாளர் பிரிவுகளில், கொக்குத் தொடுவாய் தெற்கு, செம்மலை கிழக்கு, அளம்பில் தெற்கு, குமுழமுனை மேற்கு, மணற்குடியிருப்பு, வண்ணாங்குளம், முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொக்கணை, தண்ணீருற்று மேற்கு மகவளசிங்கன் குளம் ஆகிய 10 கிராம சேவை யாளர் பிரிவுகளுக்கு மாத்திரமே இவ் உத்தியோகத்தர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை. யுத்தத்தினால் மிக மோசமாக பாதிக்கப்பட்ட இப்பிர தேச மக்கள் கடந்த 2010 ஆம் ஆண்டு மீள்குடியேற்றப்பட்டனர்

இந்நிலையில் இப்பிரதேசத்தில் மாற்றுத் திறனாளிகள், கணவனை இழந்தோர், முன்னாள் போராளிகள் என பலர் சேவையைப் பெற்றுக் கொள்வதற்காகவுள்ளனர்.

ஆனால் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இன்மையால் நிறைவான சேவையைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாக மேற்குறிப்பிட் வர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். குறித்த உத்தியோகத்தர் களின் கடமைகளாக, பயனாளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல், அவர்களின் சேமிப்பை ஊக்குவித்தல், கடன் திடடங்களை வழங்குதல், கிராம மட்டத்தில் வறுமைகோட்டின் கீழ் உள்ளவர்களை இனங்கண்டு சுயதொழிலை ஊக்குவித்தல் என்பனவாகும்.

ஆகவே குறித்த கடமைகளை ஆற்றுவதற் கும் கிராமங்களின் முன்னேற்றத்திற் கும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் பங்களிப்பு முக்கிய மாகவுள்ளதனால் முல்லை மாவட்ட அரசாங்க அதிபரும் கரைதுறைப்பற்று பிரதேச செயலரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர். (2-9-267)

# உணவு நிலையங்களில் பரிமாறும் பணியில் ஈடுபடுபவர்களுக்கு சீருடை அவசியம்

## மாங்குளம் சுகாதார பரிசோதகர் அறிவுறுத்து

மாங்குளம் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட உணவு வகைகளைப் பரிமாறும் நிலையங்களில் பணியில் ஈடுபடுபவர்கள் அதற்கான சீருடையினையும் சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்ட அடையாள அட்டையினையும் மாட்டிக் கொண்டே உணவுகளைப் பரிமாற வேண்டுமென மாங்குளம் பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் விஜய ஐங்கரன் அறிவித்துள்ளார்.

உணவகங்களிலும் ஏனைய உணவு பரிமாறும் நிலையங்களிலும் கடமையாற்றும் பணியாளர்கள், அப்பணியில் ஈடுபடுவதற்கு ஏற்றவர் என சுகாதார பிரிவினரால் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு வழங்கப்பட்ட அடையாள அட்டையினை பெற்றிருக்க வேண்டும்.

அத்தோடு, பணியாளர்கள் சீருடை அணிய வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளினூடாக உணவு பரிமாறும் நிலையங்களில் சுகாதாரத்தினைப் பேண முடியும்.

குறித்த சுகாதாரப் பிரிவுக்குட்பட்ட உணவகங்களில் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு சுகாதார சீர்கேடுகள் இடம்பெறுவதற்கு ஏதுவாகவுள்ள நிலையங்களுக்கு எதிராக சட்டநடவடிக்கைகள் எடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-9-15)

# தொழிற்சங்களின் போராட்டம் இடையூறுகளை ஏற்படுத்தாது நடத்தப்பட வேண்டும்

## வடமாகாண சுகாதார அமைச்சர் தெரிவிப்பு

(பூந்தோட்டம்)

தொழிற்சங்கங்கள் தமது ஊழியர்களின் உரிமைக்காக போராட்டங்களை நடத்துகின்றபோது அந்த போராட்டமானது பொது மக்களுக்கான சேவைகளில் எந்தவித இடையூறுகளையும் ஏற்படாது பார்த்துக் கொள்ள வேண்டும் என வடமாகாண சுகாதார அமைச்சர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

அகில இலங்கை பொதுசுகாதார பரிசோதகர்கள் மற்றும் தொழிற்சங்கப்பிரதிநிதிகளுடனான கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ். மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றமொன்றில் கடமையாற்றும் பொது சுகாதார பரிசோதகரிற்கும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்குமிடையில் அண்மை யில் ஏற்பட்ட வாய்த்தர்க்கத்தினால் முறுகல் நிலை தோன்றியதன் காரணமாக யாழ் மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களில் பணியாற்றும் பொது சுகாதார பரிசோ தகர்களுக்கு சுகாதார அமைச்சில் இட மாற்றம் வழங்கப்பட்டிருந்தது.

இதனை ஆட்சேபித்து பொது சுகாதார பரிசோதகர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடப்போவதாக தெரிவித்திருந்த நிலையிலேயே, வடமாகாண சுகாதார அமைச்சருடன் முக்கிய சந்திப்பு வட மாகாண சுகாதார அமைச்சின் வவுனியா உப அலுவலகத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றிருந்தது.

இதன்போது கருத்து தெரிவித்த அமைச்சர்,

சுகாதாரத்துறையென்பது பொது மக்களுக்கான அத்தியாவசியமான சேவையாகும்.

எனவே நாம் அனைவரும் பொதுமக்களுக்கான சேவையை திறம்பட செய்தல் வேண்டும். அடுத்துவரும் மாதங்கள் மழைக் காலமாகும்.

குறிப்பாக யாழ். மாவட்டத்தில் மழை பெய்யும்போது அதிகளவிலான டெங்கு நுளம்புகள் பரவுவதற்கான சாத்தியங்கள் உள்ளன.

எனவே இந்தநிலையில் பொது சுகாதார பரிசோதகர்களின் பணிப்புறக் கணிப்பென்பது பொதுமக்களுக்கான சுகாதார சேவையை பெரிதும் பாதிக்கும்.

உங்கள் உரிமையை பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது பொதுமக்களின் சுகாதார சேவைகள் பாதிக்கப்படாது பார்த்துக்கொள்ள வேண்டும் என்றார்.

இதன்போது வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், யாழ் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், அகில இலங்கை பொது சுகாதார தொழிற்சங்க தலைவர் மற்றும் யாழ். மாவட்ட பொது சுகாதார பரிசோதகர் சங்க தலைவர் உட்பட பொது சுகாதார பரிசோதகர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

(2-9-266-250)


# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை செல்வராசா

யாழ். கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும் மல்லாகம் ஐயனார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை செல்வராசா 23.03.2014 ஞாயிற்றுக் கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்

மகள் திருமதி. சியாமளா விஜயகிருஷ்ணன்
ஆசிரியை, யா/ இராமநாதன்
கல்லூரி, மருதனார்மடம்
மருமகன்: அ.விஜயகிருஷ்ணன், பிரதி திட்டப்
பணிப்பாளர், பொருளாதார அபிவிருத்தி
அமைச்சு, கிளிநொச்சி.
021 224-0836, 077 2963760
(5881) ஐயனார் கோவிலடி, மல்லாகம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்படும்

## மூனின் பிரதி பேச்சாளர் அறிவிப்பு

குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிப்பது தொடர்பில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொதுச் செயலாளர் பான் கீ மூனின் நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் கிடையாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

பான் கீ மூனின் பிரதிப் பேச்சாளர பர்ஹான் ஹக் இந்த கருத்தை வெளியிட்டுள்ளார்.

நியூயோர்க்கில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமைக் காரியாலயத்தில் நடைபெறும் நாளாந்த ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்ற போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிராக எவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பது குறித்து உறுப்பு நாடுகளே தீர்மானிக்க வேண்டுமென அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

மனித உரிமை சட்டத்தரணி யஸ்மீன் சூகா மற்றும் பிரித்தானிய மனித உரிமைகளுக்கான சட்டப் பேரவை ஆகியவற்றின் அறிக்கை தொடர்பில் எவ்வித நேரடி பதில்களையும் பர்ஹான் வெளியிடவில்லை.

இலங்கை மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் சுயாதீன சர்வதேச விசாரணை நடத்துவதா அல்லது வேறு ஓர் பொறிமுறைமையை உருவாக்குவதா என்பதனை உறுப்பு நாடுகளே நிர்ணயிக்க வேண்டுமென அவர் தெரிவித்துள்ளார். (செ-11)

# ஹஜ் மற்றும் சுற்றுலா விசாவில் வேலைவாய்ப்பு பெற்றுச்செல்லவேண்டாம்

## பொறுப்புக்கூறமுடியாது -அரசு

ஹஜ் மற்றும் சுற்றுலா விசாவில், மத்திய கிழக்கு நாடுகளுக்கு வேலைவாய்ப்பு பெற்றுச் செல்ல வேண்டாம் என இலங்கை பிரஜைகளுக்கு அரசாங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஹஜ் மற்றும் சுற்றுலா விசாவில் சென்று வேலை செய்பவர்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு பொறுப்புக் கூற முடியாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இது சமீபகாலமாக எதிர்நோக்கும் புதிய பிரச்சினை என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மங்கள ரன்தெனிய குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாடுகளில வேலை செய்யும இலங்கையர்களது நலன்கள் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அக்கறை கொண்டுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒரு மில்லியன் வரையான இலங்கை பணியாளர்கள் உள்ளதாகவும் இங்கிலாந்தில் 40 சதவீதமானவர்கள் உள்ளதாகவும் ரன்தெனிய மேலும் தெரிவித்துள்ளார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### திருமதி ஜேசுதாசன் ஜரின்மேரி கிறிஸ்ரா

மன்னார் முருங்கனைப் பிறப்பிடமாகவும் சில்லாலை, பிரான்ஸ் Bobigny ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட ஜேசுதாசன் ஜரின்மேரி கிறிஸ்ரா 7 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று அகால மரணமானார்.

அன்னாரின் திருப்பலி நாளைமறுதினம் புதன்கிழமை காலை 9.15 மணிக்கு Eglise St.Martha, Aubervilliers- Pantin-Quatre Chemins, France என்னும் முகவரியில் ஒப்புக்கொடுக்கப்படும்.



### ஆறுமுகம் செல்வநாதன்

மலேசியாவைப் பிறப்பிடமாகவும் தற்போது பறாளாய் வீதி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் செல்வநாதன் (ஓய்வு பெற்ற மின்சாரசபை உத்தியோகத்தர்) கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சுழிபுரம் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### முருகர் கணபதிப்பிள்ளை

நாயன்மார்கட்டை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகர் கணபதிப்பிள்ளை கடந்த 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் செம்மணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

# இலங்கை கடும் நெருக்கடிகளை சந்திக்க நேரிடும்

## ஆபிரிக்க நாடுகள் சுட்டிக்காட்டு


இலங்கை மீது சர்வதேசம் சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களில் இருந்து விடுபடுவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்புகளை தவிர வேறு மாற்று வழிகள் கிடையாது என சில ஆபிரிக்க நாடுகள் சுட்டிக்காட்டியுள்ளன.

ஜெனீவாவில் நடைபெறும் ஐ.நா. மனித உரிமை பேரவையின் 25 ஆவது கூட்டத் தொடரில் கலந்து கொண்டுள்ள ஆபிரிக்க நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இலங்கையின் விசேட பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது அந்நாடுகளின் பிரதிநிதிகள் இதனை சுட்டிக்காட்டியுள்ளனர்.

மக்களின் ஒத்துழைப்புகளை கட்டியெழுப்பாமல், பல்வேறு அணிகளாக இந்த குற்றச்சாட்டுக்களை எதிர்கொள்ள முடியாது.

அவ்வாறான செயற்பாடுகளுக்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுக்காது போனால், இலங்கை கடும் நெருக்கடிகளை சந்திக்க நேரிடலாம் என ஆபிரிக்க நாடுகளின பிரதிநிதிகள் தெரிவித்துள்ளதாக ஜெனீவா தகவல்கள் தெரிவிக்கின்றன. (2)

# பாக்கு நீரிணையை முதன்முதலில் நீந்தி கடந்த மாமனிதர் நவரத்தினசாமி



1954 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி சாதனை ஒன்றைப்படைக்கும் நோக்குடன் யாழ். தொண்டைமனாறைச் சேர்ந்த தமிழ் மகன் ஒருவர் பாக்குநீரிணையில் குதித்தார். அவர்தான் முருகுப்பிள்ளை நவரத்தினசாமி. வல்வெட்டித்துறை துறைமுகத்தில் இருந்து கோடிக்கரை வரையான 31 1/2 மைல் தூரத்தை இடைவிடாது நீந்திக் கடக்கும் நோக்கத்துடன் இவர் தனது சாதனைப் பயணத்தை அன்று பிற்பகல் 2.30 மணிக்கு வல்வெட்டித் துறை துறைமுகத்தில் இருந்து ஆரம்பித்தார்.

இவரை வழியனுப்ப வந்த பெருமளவான மக்களிடமும் தனது மூன்று பிள்ளைகளிடமும் விடை பெற்று தனது சாதனையை நிலை நாட்டப் புறப்பட்ட அவ்வீரர் கடலில் சிறிது தூரம் சென்றதும் மக்களிடம் கைகாட்டி விடைபெற்றார்.

வைத்திய அதிகாரிகள் மற்றும் சில அதிகாரிகளும் படகுகளிலும் கட்டுமரத்திலும் பின்தொடர வேகமாக நீந்தி கோடிக்கரை நோக்கிச் சென்று கொண்டிருந்தார்.

கோடிக்கரையை அடைய ஏழு மைல்கள் மட்டுமே இருந்த வேளையில் இயற்கையின் சோதனை ஏற்பட்டது. கடும் மழையினால் எழுந்த பேரலை அவருக்கு பெரும்தடையாக அமைந்தது.

கடலில் ஏற்பட்ட கடுமையான நீரோட்டம் பின்நோக்கித் தள்ளியது. அவர் நீந்தி முன்னேறிச் சென்ற தூரத்தைக்கூட தாண்டி பின்னோக்கிவர வேண்டியதாயிற்று. இதனால் அவர் தனது 23 1/2 மணிநேர முயற்சியைக் கைவிட்டு கட்டுமரத்தில் ஏறவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் அவர் நீந்திச் சாதனை செய்ய நினைத்த தூரத்திலும் பார்க்கக்கூடுதலாக 35 மைல் தூரத்தை நீந்திக் கடந்திருந்தார்.

## இவரது சாதனையின் பவளவிழா நாளையாகும்



எனினும் பாக்கு நீரிணையை நீந்திக்கடந்தே தீருவென் அன்றேல் என்பிள்ளைகளில் ஒருவன் நிச்சயம் கடப்பான் என இந்த முயற்சியின் பின் நவரத்தினசாமி உறுதிபடக் கூறினார்.

அவர் கூறியது போலவே ஒரு வாரத்தின் பின்னர் அதாவது 25 ஆம் திகதி பிற்பகல் 4.10 மணிக்கு மீண்டும் தனது சாதனை முயற்சியை ஆரம்பித்தார். மக்களின் வாழ்த்துக்களுடன் தனது இரண்டாவது முயற்சியை ஆரம்பித்த சாதனை வீரர் இடைவிடாது பாக்கு நீரிணையை ஊடறுத்து நீந்தி 26 ஆம் திகதி இரவு ஏழு மணிக்கு கோடிக்கரையில் கொடியேற்றி தனது சாதனையை நிலை நாட்டினார். இந்த வீரர் இச்சாதனையை புரிந்த போது அவரது வயது 45 என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

1909 ஆம் ஆண்டு ஆவணி மாதம் 16 ஆம் திகதி பிறந்த அவருக்கு இவ்வாறு ஒரு சாதனையை புரிய வேண்டுமென்ற எண்ணத்தை உருவாக்கியது ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த ஒரு வெள்ளையரின் சாதனையாகும்.

தனது கல்வியின் பின் விவசாய திணைக்களத்தில் சேர்ந்து கடமையாற்றிய அவர் அங்கும் தனது நுண்மதியினால் விதைதூவும் இயந்திரம் போன்றவற்றை வடிவமைத்து அதற்கான அங்கீகாரம் பெற்றார்.

தனது சாதனையை நிலைநாட்டுவதற்காக 18 வருடகாலம் அவர் பயிற்சிகளை மேற்கொண்டார். தனது வீட்டிலிருந்து கிளிநொச்சி வரையான எண்பது மைல்கள் தூரத்தை ஈருருளி மூலம் கடந்து சென்றும் மணற் குவியல்கள் உள்ள இடங்களில் 10 மைல் தூரத்தை நடந்தும் தனது உடலை உறுதிபடுத்திக் கொண்டார்.

இவரது சாதனை குறித்த செய்தி கிடைத்ததும் தமிழ் மக்கள் பெரும் மகிழ்ச்சியடைந்தது மட்டுமல்லாது இதனை பெருவிழாவாகவே அவர்கள் நடத்தினர்.

அவருக்கு வரவேற்பளிக்கவென வல்வெட்டித்துறை துறைமுகத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டு நின்றனர்.

அரசாங்கமும் அவருக்கு பல பாராட்டுக்களையும் பரிசில்களையும் வழங்கியதுடன் பிரிட்டிஸ் மகாராணிக்கும் கோமனுக்கும் இவரை அறிமுகம் செய்து வைத்துக் கௌரவித்தது.

எல்லாவற்றுக்கும் மேலாக அவர் 60 ஆண்டுகளுக்கு முன் புரிந்த சாதனையை அவர் மறைந்து 45 வருடங்களுக்கும் மேலான போதும் கூட அவருக்கு பொருத்தமான உலகளாவிய ரீதியிலான பெருவிழாவை எடுக்காதிருப்பது கவலைதரும் விடயமாகும்.


இவர் மரணிக்கும் போதும் வீர சாகசம் செய்து கொண்டே இறந்துள்ளார்.

1969 ஆம் ஆண்டு தனது பவள விழாக் காணும் பிறந்த நாளாகிய ஆவணி 16 ஆம் திகதி கட்டுமரத்திலே இலங்கையை சுற்றிவர (760 மைல்கள்) வேண்டும் என அவாக் கொண்டு அதற்கான பயிற்சிகளை மங்கிய மாலை நேரத்திலும் கடலிலே செய்து கொண்டிருந்த தினமாகிய 01.07.1969 இல் காலன் அவரது உயிரை பறித்துக் கொண்டான். அதுவும் பாக்கு தொடுவாயிலேயே சங்கமமாகி அதனையும் சாதனையாக்கியுள்ளார்.

வல்வை ஜெயம்
(ந.சிவரத்தினம்)
ஓய்வுநிலை உதவிப்
பொது முகாமையாளர்
இலங்கை வங்கி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய பாதுகாப்பு அவசியம்



தேசிய பாதுகாப்புக்காக சிவில் பாதுகாப்புக் குழுக் களை பலப்படுத்த வேண்டி யுள்ளது. தேசத்தைப்பாது காக்கும் பொறுப்பு அனை வருக்கும் உண்டு என்று நேற்று யாழ்ப்பாணம், நெல் லியடி மகாவித்தியாலயத் தில் இடம்பெற்ற வடக்கு மாகாண சிவில் பாதுகாப்பு அமைப்பு நடவடிக்கை குறி த்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் பொலிஸார் வலியுறுத்தியிருந்தனர்.

பொலிஸாரின் ஏற்பாட் டில் வடக்கிலுள்ள 7 பொலிஸ் பிரிவுகளிலும் தனித்தனி யாக நடத்தப்பட்டு வரும் சிவில் பாதுகாப்புக் குழுக் களின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் தொடர் ச்சியாக காங்கேசன் துறை பொலிஸ் பிரிவிற்குட்ப ட்ட சிவில் பாதுகாப்புக் குழுக்களின் ஒருங்கிணைப் புக் குழுக்கூட்டம் நேற்றுக் காலை நெல்லியடி மகா வித்தியாலயத்தில் இடம் பெற்றது. இதன்போது பிர தம விருந்தினராக கலந்து கொண்ட வடக்குமாகாண சிரேஷ்ட பிரதிப் பொலி ஸ்மா அதிபர் பூஜித ஜய சுந்தர மேற்கண்டவாறு தெரிவித்திருந்தார். அதே வேளை பொலிஸாரினால் வெளியிடப்பட்ட துண் டுப்பிரசுரத்திலும் தேசியப் பாதுகாப்பு குறித்து வலியு றுத்தப்பட்டிருந்தது.

### பிரதிப்பொலிஸ்மா அதிபர்

தேசிய பாதுகாப்புக்காக சிவில் பாதுகாப்புக்குழுக் களை பலப்படுத்த வேண்டி யுள்ளது. தேசத்தைப்பாது காக்கும் பொறுப்பு அனை வருக்கும் உண்டு , தேசியப் பாதுகாப்பு இல்லையென் றால் பாரிய பிரச்சினைகள் ஏற்படும். கடந்த கால கச ப்பான அனுபவங்களை நாம மறந்துவிடவேண்டும். மக் களை பாதுகாக்கும் நட வடிக்கையில் பொலிஸார் தொடர்ந்து ஈடுபட்டு வரு கின்றனர். மக்களிடையே யுள்ள சந்தேகங்களைப் போக்கி அர்ப்பணிப்புடன் சிவில் பாதுகாப்புக் குழுவினர் சேவை செய்யவேண்டும்.

பொலிஸார் மற்றும் இராணு வத்தினருக்கு ஒத் துழைப் பாக சிவில் பாதுகாப்புக் குழுவினர்செயற்படவேண்டும். எதிர்காலத்தில் மக்களை அச்ச மின்றி வாழ வைப்பதே இந்த சிவில் பாதுகாப்புக்குழுக்களின உருவாக்கத்தின் நோக்கம்

### சிவில் பாதுகாப்பு குழு

சிவில் பாதுகாப்பு பற்றி யும் அதன் முக்கியத்துவம் பற்றி யும் இந்த கூட்டத்தின் போது வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப்பொலிஸ்மா அதிபர் காரியாலயத்தினால் விசேட துணடுப்பிரசுரம் ஒன்று வெளி யிடப்பட்டது. இதனை பிர திப்பொலிஸ்மா அதிபர் வெளி யிட்டு வைத்தார். அதில் உங்களுடைய கிராமத்திலு ள்ள அரச சார்பாகவுள்ள மிக வும் சக்தி வாய்ந்த குழு சிவில் பாதுகாப்பு குழு என்பது உங்க ளுக்கு தெரியுமா? என்ற கேள்வியுடன் பலவிடயங் கள் வலியுறுத்தப்பட்டிருந் தன. ஜனாதிபதியின் தேசிய வேலைத்திட்டத்தில் இது பற்றி குறிப்பிடப்பட்டுள் ளது, பாதுகாப்பு செயலாளரி னால் ஆரம்பித்து வழிநட த்தப்பட்டுவருகின்றது. (ஒருங கிணைப்பு), பொலிஸ்தலைமை யகத்தின் ஒருங்கிணைப்பும் (இலங்கையைப் பாதுகாப் போம்), அரச நிர்வாகத்து டன் உள்ளஉண்மைதொடர்பை வளர்த்தல், ஒரு கட்டமைப்பு அனைத்து குழுக்களும் இணை வானதாக அமையும், அங்கத்த

தினருக்கு கிடைப்பவையாக தேசிய பாதுகாப்பினை உறுதி செய்யமுடியும், குற்றச் செயல் களை தடுத்தல் மற்றும் விசா ரணை செய்தல், ஊழல் ஒழி ப்பிற்கான நடவடிக்கை மேற் கொள்ளல், பொது வேலை கள் செய்யமுடியும். மேற் குறிப்பிடப்பட்ட குழுவின் உறுபபினர் ஒருவராக இருந்து சமூகத்தினருக்கு நல்ல சேவை யினை செய்வதற்காக வாருங கள்,பயமின்றியும் சந்தேக மின்றியும் மற்றும் குற்றச்



செயல்களை குறைப்பதற்கு சமூகத்திற்காக பொலிஸாரு டன் ஒருங்கிணைவோம் என்று அந்த துண்டுப்பிரசுரத்தில் வலியுறுத்தப்பட்டிருந்தது.

### வடக்கில் 22875 பேர்

வடக்கு மாகாணத்திலு ள்ள ஏழு பொலிஸ் பிரிவிற்குட பட்ட பகுதியில் 175 சிவில்

வில் 6 ஆயிரத்து 825 பேர் அங்கத்துவம் பெறுகின்ற னர்.

காங்கேசன்துறைப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 156 கிராம சேவையாளர் பிரிவில் 25 சிவில் பாதுகாப்புக் குழுக்க ளில் 3 ஆயிரத்து 900 பேர் அங்கம் வகிக்கின்றனர். கிளி நொச்சி பொலிஸ் பிரிவிற் குட்பட்ட 95 கிராம சேவை யாளர் பிரிவிற்குட்பட்ட 25 சிவில் பாதுகாப்புக்குழுவில் 2 ஆயிரத்து 375 பேர் அங்கம் வகிக்கின்றனர். முல்லைத் தீவு பொலிஸ் பிரிவிற்குட் பட்ட 93 கிராமசேவையா ளர் பிரிவிற்குட்பட்ட 25 சிவில் பாதுகாப்புக்குழுவில் 2 ஆயிரத்து 375 பேர் அங்கம் வகிக்கின்றனர். மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 75 கிராமசேவையாளர் பிரிவிற்

விற்குட்பட்ட 25 சிவில் பாது காப்புக்குழுவில் 3 ஆயிரத்து 825 பேர் அங்கம் வகிக்கின்ற னர்.

மொத்தமாக வடக்கில் 915 கிராமசேவையாளர் பிரி வுகள் உள்ளன என்பது குறிப பிடத்தக்கது.

### கிராம சேவகர் மீது குற்றச்சாட்டு

காங்கேசன் துறைப் பொலிஸ் பரிவிற்குட்பட்ட சிவில் பாதுகாப்புகுழுவின் ஒருங்கிணைப்புக்குழுவிற்கு 56 கிராம சேவையாளர் களே வருகை தந்திருந்தனர்.

குறித்த பொலிஸ பிரி விற்குட்பட்ட பகுதியில் 143 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ள நிலையில் 56 கிராம சேவையாளர் களே சமுக மளித்திருந்த னர்.

ஏனைய கிராம சேவை யாளர்கள் குறித்த கூட்டத் திற்கு வருகை தராமை மிகு ந்த மன வேதனையை ஏற் படுத்து வதாக குறிப்பிட்ட வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் கடு மை யாக அவர்களை சாடி யுமிருந்தார். மக்களின் பாது காப்பிற்காக பொலிஸார் பாடுபடுவதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண் டியவர்கள் கிராம சேவை யாளர்கள். ஆனால் இங்கு குறைந்த பட்ஷமான கிராம சேவையாளர்களே சமுகம ளித்திருக்கின்றனர். பிரதேச செயலாளர்கள் சமுகமளித்



வர்களுக்கு முன்னேற்றம் அடை வதற்கான தேவையான ஒற்று மைகள், முன்னர் இருந்த குழுக்கள் அல்லது சிவில் பாது காப்பு குழுக்கள் தொடர்ச் சியாக செயற்படவேண்டும் போன்ற விடயங்கள் வலி யுறுத்தப்பட்டிருப்பதோடு சிவில் பாதுகாப்பு குழுசிறந்த முறையில் நடைபெற்றுவந் தால் நீங்கள் உட்பட சமூகத்

பாதுகாப்பு குழுக்கள் இயங்கி வருவதாகவும் இதில் 22 ஆயி ரத்து 875 அங்கம் வகிப்ப தாகவும் பல்லூடகத்தின் மூலம் இந்தக்கூட்டத்தில் காட்சிப்படுத்திய தரவுக ளில் தெரிவிக்கப்பட்டிருந்தது. இதில யாழ்ப்பாணம் பொலிஸ பிரிவிற்குட்பட்ட 273 கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள 25 சிவில் பாதுகாப்புக்குழு

குட்படட 25 சிவில் பாதுகாப் புக் குழுவில் ஆயிரத்து 875 பேர் அங்கம் வகிக்கின்றனர். வவுனியா பொலிஸ்பிரிவிற்குட் பட்ட 70 கிராமசேவையா ளர் பிரிவிற்குட்பட்ட 25 சிவில் பாதுகாப்புக்குழுவில் ஆயிரத்து 750 பேர் அங்கம் வகிக்கின்றனர். மன்னார் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட 153 கிராமசேவையாளர் பிரி

துள்ள நிலையில் கிராம சேவையாளர்கள் வருகை தராமை கண்டனத்திற் குரி யது எனவும் குறிப்பிட் டார்.

இவ்வாறு நேற்று இடம் பெற்ற சிவில் பாதுகாப்புக் குழுக்கூட்டத்தில் பல் வேறு விடயங்கள் வலியு றுத்தப்பட்டிருந்தன.

எஸ்.ஆர் கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேகாத வெயிலில் விறகொடிக்கப் போற பெண்ணே
கால் உனக்கு பொசுங்கலிலையோ
கல்லுலுத்தி வந்திடாதோ — நாட்டார் பாடல்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## பங்குனியில் பகலவன் சுட்டெரிக்கிறான்; தாகசாந்தி செய்திட வாரீர்

'பங்குனிப் பொழுதில் பகலிடைப் போவோரை பார்ப்பதும் பாவம்' என்றொரு பழமொழி நம் தமிழில் உண்டு. வெயில் கொடுமையின் தாளாத் தன்மையை எடுத்தியம்பக் கூறப்பட்டதே இப் பழமொழி.

இப்போது வெயிலின் சுட்டெரிப்பில் வட புலத்து மக்கள் தாங்கொணாத் துன்பத்தை அனுபவிக்கின்றனர்.

2013-ம் ஆண்டின் மாரி மழை முற்றாக நின்று போக; கிணறுகள், குளங்கள் என நீர் நிலைகள் அனைத்தும் வரண்டு சுருண்டு போயிற்று.

நெல் விளைச்சல் முற்றாகப் பாதிப்படைய, வட புலத்து மக்கள் வெயில் கொடுமையையும் பஞ்சத்தின் வதையையும் அனுபவிக்க வேண்டிய துன்பத்தில் உள்ளனர்.

மழைக் கோலம் இடையிடையே வெளிப்பட்டாலும் எங்கள் மீது வருணனுக்குக் கடும் கோபம் போலும். அதன் காரணமாக மழை தருவதில்லை என்று அடம் பிடிக்கின்றான்.

என்ன செய்வது? இயற்கை நம்மோடு பகைத்து விட்டால் அதற்கான நிவாரணம் எதுவுமாக இருக்கமுடியாது.

மழை தாருங்கள் என்று நாம் மன்றாடக் கூடிய இறைவனை அனைவரும் ஏற்றி வழிபாடு செய்வதே ஒரேவழி.

மக்கள் அனைவரும் கூட்டாகப் பிரார்த்தனை செய்யும் போது நிச்சயம் இறைவன் நம் மீது கருணை கொள்வான். அவன் நம் மீது கருணை காட்டினால் மழை பொழியும்; மண் குளிரும். மக்கள், ஜீவராசிகள் ஓர் அறிவு கொண்ட மரங்கள் அனைத்தும் மகிழ்வுறும்.

அதேநேரம் வரட்சியால் வாடும் ஜீவராசிகள் நீர் அருந்த ஏற்பாடு செய்வதும் எங்கள் கடமைகளில் ஒன்று என்பதால், அந்தக் கடமையை செவ்வனே செய்து முடிப்பது மிகவும் அவசியம்.

ஒரு காலத்தில் எங்கள் மண்ணில் இருந்த இந்துக் குடும்பங்களின் வீடுகளுக்கு வெளியில் தண்ணீர்த் தொட்டி. வீட்டில் உள்ள கிணற்று நீரை துலா கொண்டு ஏற்றி அதனை தொட்டியில் ஊற்றி வீதியில் போகின்ற பசுக்கள் நீர் அருந்தி இளைப்பாற வழி செய்த எங்கள் இந்து தர்ம வாழ்வு இப்போது எழுதிப் படிக்கவேண்டிய விடயமாயிற்று.

இன்று மாட்டிறைச்சி விற்பனைக்கு உண்டு என்று விளம்பரப்படுத்தி மாடுகளை அடித்துக் கொன்று அதன் ஊனைத் தூக்கிக் கட்டி இதோ! சிவபூமி என்ற ஈழத்தில் பசுத் தாய் இறைச்சியாகக் தொங்குகின்றாள். இங்குள்ள அமைப்புகள் அதற்கு அங்கீகாரம் கொடுத்து முத்திரை குத்தியுள்ளன என்றால் மழை வருமா என்ன?

பாவங்கள் மலிகின்ற போது, அதனை செம்மைப்படுத்த இயற்கை எடுக்கின்ற நடவடிக்கைகளில் ஒன்று வரட்சியும் வெயில் கொடுமையுமாகும்.

ஆகவே இயற்கையின் சீற்றம் தணிய இந்த மண்ணில் தர்ம காரியங்கள் ஓங்கட்டும். அதில் முக்கியமானதாக கடும் வரட்சியால் தண்ணீர்த் தாகம் கொண்டு வேகாத வெயிலில் அலைந்து திரியும் மாடுகளின் தாகம் போக்க; பிரதேச சபைகள் உள்ளிட்ட உள்ளூராட்சி அமைப்புகள் தண்ணீர்த் தொட்டிகள் அமைத்து, அதில் தண்ணீர் இறைத்து மாடுகளின் தாகம் தீர்க்க வேண்டும்.

அதிலும் குறிப்பாக தீவகப் பகுதியில் மாடுகள் தண்ணீர் குடிப்பதற்கு உடன் நடவடிக்கை எடுப்பது அவசியமானதாகும்.

# புலி இல்லை என்று கூறும் நீங்கள் ஏன் சோதனை செய்கிறீர்கள்-விஜயகலா

யாழ். மாவட்டத்தில் உள்ள மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே இராணுவத்தினர் செயற்பட்டு வருகின்றனர் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா குற்றம் சாட்டியுள்ளார்.

யாழ்ப்பாணம் காக்கைதீவுச் சந்திப் பகுதியில் நேற்று பகல் இராணுவமும் பொலிஸாரும் இணைந்து வீதிச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். இதனால் மக்கள் பல அசௌகரியங்களை சந்தித்திருந்தனர்.

எனினும் அந்தப் பகுதியால் விஜயம் மேற்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருக்கும் இராணுவத்தினருக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதுடன் இராணுவத்தினரும் சோதனைகளை நிறுத்தி அவ்விடத்தையும் விட்டு சென்றுள்ளனர்.

குறித்த வீதிச்சோதனை நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது காக்கைதீவுச் சந்திப் பகு தியால் நான் வந்து கொண்டிருந்தேன்.

அப்போது குறித்த பகுதியில் 15 மேற்பட்ட முச்சக்கர வண்டிகள் 20 மோட்டார் சைக்கிள்கள் வீதியில் நிறுத்தப்பட்டிருந்ததுடன் இராணுவமும் பொலிஸாரும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்ததைக் கண்டேன்.

உடனடியாக இறங்கி அவ்விடத்திற்கு சென்று சம்பவம் தொடர்பில் கேட்டு அறிந்து கொண்டதுடன் இராணுவத்தினருடன் தர்க்கத்திலும் ஈடுபட்டேன்.

அத்துடன் தற்போது சமாதான சூழல் புலியை அழித்து விட்டோம் என்று கூறிவரும் நீங்கள் இவ்வாறான நடவடிக்கைகளை ஏன் மேற்கொள்கிறீர்கள்? இதனால் மக்கள் சுதந்திரமாக தமது வேலைகளைச் செய்யமுடியாது அசௌகரியங்களுக்கு உள்ளாகின்றனர் என்றும் அவர்களுக்கு நான் தெரிவித்தேன். இருப்பினும் தாம் பொலிஸாருக்கு உதவுவதாகவும் வாகன அனுமதிப் பத்திரம், வாகன காப்புறுதி என்பனவே சோதனையிடப்படுகின்றது என்றனர்.

எனினும் அவற்றைப் பார்ப்பதற்கு பொலிஸார் உள்ளனர். இதற்கு இராணுவம் சம்பந்தப்பட வேண்டிய அவசியம் இல்லை என அவர்களுக்கு தெரிவித்தேன்.

அத்துடன் இவ்வாறான செயற்பாட்டினால் மருத்துவ மனைக்கு வந்தவர்கள் கூட ஒரு சுற்றி வளைப்பில் மாட்டிக் கொண்டது போல காத்து நிற்கின்றனர் என்றும் சுட்டிக்காட்டியிருந்தேன்.

அதனையடுத்து அவர்கள் குறித்த இடத்தை விட்டு அகன்று சென்றனர். மேலும் இராணுவத்தின் இவ்வாறானசெயற்பாடானது யாழ். மாவட்ட மக்கள் மத்தியில ஒரு பதற்ற நிலையினை ஏற்படுத்து வதாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.(செ-6)

## பால் கொள்வனவு விலையினை உயர்த்தக் கோரி போராட்டம்

தங்களுக்கு கிடைக்கவேண்டிய பாலின் நியாயமான விலையினை முழுமையாகத் தரும்படியும் யாழ்கோ நிர்வாகச் சீரின்மையினையும் கண்டித்து யாழ்கோ நிறுவனத்திற்கு பால் வழங்கும் பால் பண்ணையாளர்கள் நேற்று அவ் நிறுவனத்திற்கு முன்னால் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வட மாகாண கால்நடை விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் பால் கொள்வனவு செய்யும் விலையினை 48 ரூபாயிலிருந்து 58 ஆக அதிகரிக்கும் படி உத்தரவிட்டிருந்தார்.

ஆனால் 14 நாட்களுக்குள் வெளியிடப்படவேண்டிய பால் விலை அதிகரிப் பிற்கான சுற்றறிக்கையினை யாழ்கோ நிறுவனம் வெளியிடாமலும் தங்களுக்கு அதிகரித்த விலையில் 7 ரூபாவினை மட்டும் தருவதாகவும் கூறி பால் பண்ணையாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்.கோ நிறுவனத்தின் தற்போதைய நிர்வாகம் 3 பேருடன் நடைபெற்று வருகின்றதாகவும் ஒரு நிர்வாகத்தில் 9 பேர் கொண்ட உறுப்பினர்கள் இருக்க வேண்டுமென்றும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

இதன்போது தீவன விலை, வைக்கோல் விலைகள் ஏறியுள்ள நிலையில் பாலிற்கு உரிய விலை கிடைக்காமையினால் தங்கள் ஜீவனோபாயம் கஷ்டமாக இருப்பதாக போராட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

வட மாகாண கால்நடை மற்றும் விவசாய அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் ஊடாக வட மாகாண முதலமைச்சருக்கு மகஜர் ஒன்றினை கையளிக்கவுள்ளதாகவும் அதற்கான பதில் கிடைக்காவிடின் வட மாகாண சபைக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றினையும் மேற்கொள்ள தீர்மானத்துள்ள தாகவும் பால் பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

யாழ்.மாவட்டத்தில் 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பால்பண்ணையாளர்கள் இருப்பதுடன் அவர்களில் 800 பேர் வரையில் யாழ்கோ நிறுவனத்திற்கு பாலினை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கிழக்கு ஸ்ரீ சாயி துர்க்கா தேவி ஆலயத்தின் நூதன திரிதள இராஜ கோபுர கும்பாபிஷேகம் நாளை மறு தினம் புதன்கிழமை நடைபெறும்.

இதன்படி, நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 5 மணிக்கு வாஸ்து சாந்தியும் மறுநாள் புதன்கிழமை காலை 7 மணிக்கு பூசைகள் ஆரம்பமாகி கும்பங்கள் வெளி வீதி சுற்றிவரவுள்ளது.

அதனைத் தொடர்ந்து காலை 9.11 மணிக்கு இராஜகோபுர கும்பாபிஷேகம் நடைபெவுள்ளது.

நெய்தீபாராதனையில் பங்கு கொள்ள விரும்பும் பெண் அடியார்கள் 200 ரூபாவை ஆலய அலுவலகத்தில் செலுத்தி தமது பெயர்களைப் பதிவு செய்ய முடியுமெனவும் ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (2-9)

## சர்வதேச மகளிர் தினம்

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள சர்வதேச மகளிர் தினவிழா நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பிரதேச செயலர் ந.திரிலிங்கநாதன் தலைமையில் தாழையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி ரூபினி வரதலிங்கம் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் திருமதி நளாயினி இன்பராஜா, யாழ்.மாவட்ட செயலக கிராம அபிவிருத்தி திணைக்கள அதிகாரி திரு மதி ந.ஜெயராஜா கலந்து கொள்ளவுள்ளனர். இதன்போது கலை நிகழ்வுகள் இடம்பெறும். (2-19)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### பகைவனுக்கருள்வாய்



நமக்குத் தீங்கு செய்பவர்களிடம் சினம் கொள்ளாமல் இருக்கமுடியுமா? என்ற கேள்வி எழுந்தது. ஒருவர் நமக்குத் தீங்கு செய்தால் உண்மையிலே அவர் மீது இரக்கம் கொண்டு அவரை நாம் வாழ்த்தவேண்டும்.

அவருக்கு எந்த முறையில் நலம் செய்ய வேண்டுமோ அந்த வகையிலே நலம் செய்யத்தான் வேண்டும். ஏனென்றால் ஒவ்வொரு மனிதனிடத்தும் செயல் பதிவுகள் உள்ளடங்கியுள்ளன. என்றோ ஒரு காரியம் தவறாகச் செய்தாலும் அந்தத் தவறு பாவப்பதிவாகப் பதிந்து காலத்தால் அதற்குரிய துன்பத்தை ஒவ்வொருவரும் அடையத்தான் வேண்டும். இது இயற்கை நியதி.

அவ்வாறு காலம் வரும்போது ஒரு சிறு துன்பமோ, பெரும் துன்பமோ விளைந்தே அந்தப் பதிவு வெளியேறி விட வேண்டும். அதற்கு இயற்கை வேறொருவரையும் நம்மையும் இணைத்து நமக்கு அவர் மூலமாக வருத்தத்தைத் தருவதற்கு ஏற்ற செயல் விளையலாம்.

எனக்கு அந்த வருத்தம் வந்தது என்றால் அது அவருடைய தவறன்று. ஏற்கனவே என்னிடம் உள்ள பாவப்பதிவு வெளியாகும் சந்தர்ப்பம், வெளியாகவேண்டிய காலம் வந்தது; அந்தக்காலத்திற்கு அவரை இயற்கை கருவியாகக் கொண்டது.

அது மாத்திரமின்றி, ஒன்றுமேயறியாத அவரை எனக்கு வருத்தம் ஏற்படச் செய்து நான் வருந்த அவர் பழியை ஏற்றுக் கொள்ளலாமா? இவ்வாறு இயற்கை ஒரு அப்பாவியை அதற்கு உபயோகிக்க முடியுமா என்றால் இயற்கையிலே எந்தத் தவறும் இருக்கமுடியாது.

ஏற்கனவே அவர் ஒரு தவறு செய்ய எண்ணியிருப்பார். அதைச் செயலிலே கொண்டுவரமுடியவில்லை. அது அப்படியே பதிவாகியிருக்கிறது. காலத்தால் எண்ணிய எண்ணம் எப்படியும் செயற்படவேண்டும்.

அவ்வாறு அவர் ஒருவருக்குத் தீங்கு செய்யவேண்டும் என்று எண்ணிவிட்டால் அதற்குரிய காலத்தில் அந்தத் தீமை செய்தே ஆகவேண்டும். எண்ணத்தை அழிக்கவில்லையென்றால், அவரது எண்ணம் செயலாகவேண்டும்.

இங்கே நம்மிடத்தே செயல் பதிவு நீங்கவும் வேண்டும். இரண்டையும் இணைத்து இயற்கை ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி அவர் மூலம் நமக்கு ஒரு வருத்தத்தைத் தந்தது. இதை உணரும் போது நாம் அவரை வாழ்த்தவே வேண்டும். நாம் மகிழ்ச்சியடையவும் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அச்சுவேலி கதிரொளி வி.கழகத்தின் கிரிக்கெட் இறுதிப் போட்டி

## இணுவில் கலைஒளி வி.க.சம்பியன்



அச்சுவேலி கதிரொளி ரொக் கெட் விளையாட்டுக்கழகத்தின்



கிரிக்கெட் இறுதிப்போட்டி அண் மையில் அச்சுவேலி ஜூனியன் மைதானத்தில் மிகவும் கோலா கலமாக இடம்பெற்றது .

இதில் இறுதிப்போட்டியில் இணு வில் கலை ஒளி விளையாட்டு க்கழகமும் குப்பிளான் குறிஞ்சிக்கு மரன் விளையாட்டுக் கழகமும் மோதியது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற குப்பிளான் குறிஞ்சிக்குமரன் வி.க.முதலில் களத்தடுப்பில் ஈடுபட



தீர்மானித்து களம் புகுந்தது ,

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்



இதன்படி முதலில் துடுப்பெடுத் தாடிய இணுவில் கலை ஒளி விளையாட்டுக்கழகம் நிர்ணயிக் கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களில் 7 விக்கெட்கள் வீழ்த்தப்பட்டு 81 ஓட்டத்தினை பெற்றன.

இதில் அதிக பட்சமாக கார்த்திக் 22 ஓட்டங்களையும் தர்சன் 20 ஓட்டங்களையும் கோபிதான் 14 ஓட்டங்களையும் எடுத்தனர் .

பந்து வீச்சில் குப்பிளான் அணி சார்பாக தாஸ் -4,சாந்தன் -2, நிருபன் -1 விக்கெட்களை வீழ்த் தினர்.



பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய குறிஞ்சி அணியினர் நிர்ணயிக் கப்பட்ட பந்துப்பரிமாற்றங்களில் 7 விக்கெட்டுக்களை இழந்து 78 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். இதன் மூலம் கலை ஒளி வி .க.4 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற் றிவாகை சூடியது ,போட்டியின் ஆட்ட நாயகனாக கார்த்திக் தெரிவு செய்யப்பட்டார். (க-23)

# வேலணை பிரதேச பெண்களுக்கான கரப்பந்து; துறையூர் இ. க. வெற்றி





வேலணை பிரதேச சம்மேளனத்தினால் நடத்தப்பட்ட இளைஞர் கழ கங்களுக்கிடையில்வருடாந்த குழு விளையாட்டுப் போட்டியில் பெண் களுக்கான வலைப்பந்தாட்ட போட்டி அண்மையில் இடம்பெற்றது,

இவ்வலைப்பந்தாட்டத்தில் வேலணை துறையூர் இளைஞர் கழகத்தை எதிர்த்து புங்குடுதீவு சண்ராஸ் இளைஞர் கழகம் விளையாடியது.

15:20 புள்ளியடிப்படையில் வேலணை துறையூர் இளைஞர் கழகம் வெற்றி பெற்று வெற்றிக்கிண்ணத்தை தமதாக்கியது. (க-23)

# தெல்லிப்பழை பிரதேச இ.கழக பெண்களுக்கான எல்லே போட்டி

## வசந்தபுரம் இளஞ்சுடர் சம்பியன்



வசந்தபுரம் இளஞ்சுடர் இளைஞர் கழக அணி



தெல்லிப்பழைகிழக்குகலைச்செல்வி இளைஞர் கழக அணி

தெல்லிப்பழை பிரதேச இளை ஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்க ளிற்கிடையிலான விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெறு வருகின் றன.

இதில் பெண்களுக்கான எல் லேப் போட்டிகள் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் இடம் பெற்றது.

இப் போட்டியில் வசந்தபுரம் இளஞ்சுடர் இளைஞர் கழக அணி யும் தெல்லிப்பழை கிழக்கு கலைச் செல்வி இளைஞர் கழக அணியும் மோதியது.

இதில் முதலில் ஆடிய வசந்தபு ரம் இளஞ்சுடர் இளைஞர் கழக அணி வழங்கப்பட்ட 30 பந்துகளில் 4 ஓட்டங்களைப் பெற்றுக் கொணடது.

பதிலளித்து ஆடிய தெல்லிப் பழை கிழக்கு கலைச்செல்வி இளை ஞர் கழக அணியால் 30 பந்துக ளில் 2 ஓட்டங்களை மாத்திரமே பெற முடிந்தது.

இதனால் இப் போட்டியில் வச ந்தபுரம் இளஞ்சுடர் இளைஞர் கழக அணி வெற்றி பெற்று தெல் லிப்பழை பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களிற்கிடையி லான 2014ஆம் ஆண்டின் பெண்க ளுக்கான எல்லேச் சம்பியனாகி யது. (க-23)

# கப்டிச் சுற்றுப்போட்டி; சிவநகர் அ.த.க. முதலிடம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட பாடசாலை களுக்கிடையிலான கபடிப்போட்டி கிளி. மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த 19 ஆம் திகதி புதன்கிழமை நடைபெற்றது.

இக்கபடிப்போட்டியில் கிளி. சிவநகர் அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த 19 வயது ஆண், பெண், 15 வயது ஆண், பெண் ஆகிய நான்கு பிரிவுகளும் முதலிடத்தைப் பெற்றுள்ளன.

கடந்த 2013 ஆம் ஆண்டு இடம் பெற்ற கபடிப் போட்டியில் கிளி. சிவ நகர் அ.த.க.பாடசாலையைச் சேர் ந்த 15 வயதுப் பெண்கள் பிரிவு தேசிய மட்டத்தில் மூன்றாமிடத்தைப் பெற் றமை குறிப்பிடத்தக்கது. (க-9-254)





நெடுந்தீவு பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்தில் பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கி டை யிலான விளையாட்டு நிகழ்வுகளின் இறுதி நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. கலந்து கொண்ட விருந் தினர்கள் அமர்ந்திருப்பதையும் வெற்றிக்கிண்ணம் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம். (க-23)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## ரசிகர்களுக்கு விருந்து படைத்த மிர்பூர் இருபது ஓவர் போட்டியில்

# பாகிஸ்தான் அணிக்கு தீர்மானமிக்க வெற்றி




பாகிஸ்தானின் இளம் அதிரடி ஆட்டக்காரர் உமர் அக்மலின் அதிரடியும், ஆஸியின் மக்ஸ்வெல், பின்ஞ் ஆகியோரின் மின்னல் வேக ஆட்டமும் கிரிக்கெட் ரசிகர்களுக்கு விருந்து படைக்க பரபரப்பான மிர்பூர் உலக இருபது - 20 போட்டியில் பாகிஸ்தான் அணி 16 ஓட்டங்களால் தீர்மானம் மிக்க வெற்றியைப் பெற்றது.

## உமர் அக்மல், மக்ஸ்வெல், பின்ஞ் அபாரம்

5-வது இருபது-20 உலகக் கிண்ணத் தொடர் பங்களாதேஷில் நடைபெற்று வருகிறது.

இதன் குழு 2க்கான சுப்பர் 10 போட்டியில் அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகள் மிர்பூரில் நேற்று மோதின.

போட்டியின் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி அணி முதலில் களத் தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. அணி 7 ஓட்டங்களை மட்டுமே எடுத்திருந்தபோது ஆரம்ப வீரர் செஷாட் 5 ஓட்டங்கள் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து துடுப்பாட வந்த ஹபீஸும் (13) விரைவாக வெளியேற பாகிஸ்தான் அணி 4.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 25 ஓட்டங்களை எடுத்திருந்தது.

அதன்பின் துடுப்பாட வந்த இளம் அதிரடி வீரர் உமர் அக்மல், களத்தில் நின்ற தனது சகோதர வீரரான கம்ரான் அக்மலுடன் இணைந்து அணியின் நிலைமையை மாற்றியமைத்தார்.

இவர்களின் அதிரடியான துடுப்பாட்டத்தினால் பாகிஸ்தான் அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக உயர்ந்தது.

3-வது விக்கெட்டுக்காக இவ்ஜோடி தமக்கிடையில் 96 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்தபோது கம்ரான் அக்மல் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

எனினும் உமர் அக்மல் தொடர்ந்தும் தனது அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைச்சதத்தை கடந்து சிறப்பாக துடுப்பெடுத்தாடிக் கொண்டிருந்தார். இவருக்கு மறுமுனையில் சஹீட் அப்ரிடி ஒத்துழைப்பு வழங்கினார்.

இவ்வாறு சிறப்பாக ஆடிய அவர் சதத்தை நெருங்கிக் கொண்டிருந்த வேளை இறுதி ஓவரின் முதல் பந்தில் (ஸ்ரார்க்) ஆறு ஓட்டங்களை பெற எத்தனித்த போது எல்லைக்கோட் டின் அருகே மக்ஸ்வெல்லிடம் பிடிகொடுத்து 54 பந்துகளில் 9 பவுண்டரிகள், 4 சிக்ஸர்கள் அடங்கலாக 94 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 20 ஓவர்களின் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்களை எடுத்தது.

சஹீட் அப்ரிடி ஆட்டமிழக்காமல் 11 பந்துகளில் 20 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் ஆஸி அணி சார்பில் குல்ரர் நைல் 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

192 ஓட்டங்கள் என்ற கடினமான வெற்றியிலக்கை நோக்கி தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த ஆஸி அணிக்கு அவ்இலக்கு என்பது அவர்களின் துடுப்பாட்ட வீரர்களுக்கு சவாலான விடயமாக இருக்கப்போவதில்லை என்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும்,

அவர்களின் இரு அதிரடி வீரர்களான வோர்னர் (4), வோட்சனை (4) அணி முதல்ஓவரிலேயே இழந்து பெரும் நெருக்கடியைச் சந்தித்தது.

எனினும் 3-வது விக்கெட்டுக்காக இணைந்த பின்ஞ் - மக்ஸ்வெல் இணை வேகமாக துடுப்பெடுத்தாடி போட்டியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர்.

இவ்ஜோடியில் பின்ஞ் நிதானமாக ஆட மக்ஸ்வெல் மின்னல் வேகத்தில் ஓட்டங்களை குவித்துக் கொண்டிருந்தார். இவர் தான் எதிர் கொள்ளும் பந்துகளை சிக்ஸர்கள், பவுண்டரிகளாக விளாசிக் கொண்டிருந்தார்.

இதில் பிலவால் பற்றியின் ஒரு ஓவரில் இவர் 2 பவுண்டரிகள், 2 சிக்ஸர்களை அடித்தார்.

இவ்வாறு மின்னல் வேகத்தில் ஆடிக் கொண்டிருந்த இவர் 19 பந்துகளில் அரைச்சதத்தை பூர்த்தி செய்து இருபது-20 போட்டிகளில் 4-வது வேகமான அரைச்சதத்தை பதிவு செய்தார்.

இவர்கள் இருவரும் தமக்கிடையில் 3-வது விக்கெட்டுக்காக 116 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது அதிரடி ஆடி பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களுக்கு தலைவலியைக் கொடுத்த மக்ஸ்வெல் 74 ஓட்டங்களுடன் (33 பந்துகளில் 7 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள்) ஆட்ட மிழந்தார்.

இவரின் ஆட்டமிழப்பின் பின் ஆஸி அணியின் விக்கெட்டுக்கள் சீரான இடைவெளிகளில் வீழ்ந்தன.

அணித்தலைவர் பெய்லி 4, ஹொட்ஜ் 2, சிறப்பாக ஆடிக் கொண்டிருந்த ஆரம்ப வீரர் பின்ஞ் 65, ஹடின் 8 என ஆஸி அணியின் துடுப்பாட்ட வரிசை சரிந்தது.

இறுதியில் ஆஸி அணி இருபது ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 175 ஓட்டங்களை எடுத்து 16 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சில் பாவர், அப்ரிடி, குல், பற்றி ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் நாயகனாக உமர் அக்மல் தெரிவானார். இவ்வெற்றி மூலம் பாகிஸ்தான் அணி 2 புள்ளிகளைக் கைப்பற்றியது.

# மோசமான நடவடிக்கைகள்...

பிரிட்டனில் தஞ்சக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதால் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தவர்கள் சிலர், ஐக்கிய ராஜ்ஜியத்துக்கு திரும்பி வந்த பின்னர் அளித்திருந்த வாக்குமூலங்களின் அடிப்படையில் ஃபவுண்டேஷன் ஃபார் ஹியுமன் ரைட்ஸ் அமைப்பு இந்த அறிக்கையை உருவாக்கியுள்ளது.

ஐக்கிய ராஜ்ஜியத்தில் மனித உரிமைகளுக்காக குரல்கொடுக்கும் சட்டத்தரணிகள் அமைப்பின் அனுசரணையில் வாக்குமூலங்கள் பெறப்பட்டதாக இந்த அறிக்கையை உருவாக்கிய விசாரணைக் குழுவின் தலைவரும், இலங்கை மனித உரிமை நிலைவரம் தொடர்பில் ஐநா. தலைமைச் செயலரால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழுவின் உறுப்பினராக இருந்தவருமான, மனித உரிமைகள் ஆர்வலர் யாஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

9 சட்டத்தரணிகள் சேர்ந்து பாதிக்கப்பட்டவர்கள் 40 பேரிடம் இருந்து வாக்குமூலங்களைப் பெற்று இந்த அறிக்கையை உருவாக்கியதாக அவர் கூறினார்.

சட்டவிரோதமாக கொண்டு செல்லப்படுதல், தடுத்துவைக்கப்படுதல், கொடூரமான சித்திரவதைகள் மற்றும் பாலியல் தாக்குதல்களுக்கு உட்படுத்தப்படுதல் போன்றவற்றுக்கு தாம் ஆளான நேர்ந்ததாக இந்த விசாரணை குழுவிடம் வாக்குமூலம் அளித்தவர்கள் தெரிவித்திருந்தனர்.

இலங்கை அரசாங்கத்தின் தடுப்புக் காவலில் இருந்து வெளியேறி ஐக்கிய ராஜ்ஜியத்துக்குள் மீண்டும் திரும்பிவந்தவர்களையே தாங்கள் விசாரித்திருந்ததாக யாஸ்மின் சூக்கா தெரிவித்தார்.

வாக்குமூலங்களில் தெரிவிக்கப்பட்ட விஷயங்களை நம்பத்தகுந்த குற்றச்சாட்டுகள் என்றே தாங்கள் குறிப்பிடுவதாகவும், ஏனென்றால் இந்தக் குற்றச்சாட்டுகள் இதுவரை உறுதி செய்யப்படவில்லை என்றும், இலங்கை அரசாங்கமும் இது தொடர்பான விசாரணைகளை இதுவரை நடத்தியிருக்கவில்லை என்றும் யாஸ்மின் சூக்கா குறிப்பிட்டார்.

பிரிட்டிஷ் மனித உரிமை ஆணையத்தின் ஊடாக தமது அறிக்கையினை இலங்கை அரசாங்கத்திற்கு அனுப்பிவைத்துள்ளதாகவும், இலங்கை அரசாங்கத்தின் பதில் இதுவரை கிடைக்கப் பெறவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இலங்கையில் இப்படியான கொடுமைகள் எல்லாம் முடிவுக்கு வந்தால்தான், அந்நாட்டில் சமாதானம் மலருமென்று தாம் நம்புவதாக இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் ஐ.நா தலைமைச் செயலரால் நியமிக்கப்பட்டிருந்த நிபுணர் குழுவில் அங்கம் வகித்தவரும், தற்போது ஃபவுண்டேஷன் ஃபார் ஹியுமன் ரைட்ஸ் அறக்கட்டளைக்காக இலங்கை சம்பந்தமாக ஆய்வு செய்த குழுவுக்கு தலைமை ஏற்றிருந்தவருப்பவருமான யாஸ்மின் சூக்கா கூறினார்.

**இராணுவம் மறுப்பு**

மனித உரிமைகள் ஆர்வலர் யாஸமின் சூக்கா தெரிவித்த இந்த குற்றச்சாட்டுக்கள் எல்லாமே அடிப்படையற்ற குற்றச்சாட்டுக்கள் என்று இலங்கை ராணுவத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரியான பிரிகேடியர் ருவான் வணிகசூரிய மறுத்துள்ளார்.

"இலங்கை தொடர்பான யாஸ்மின் சூக்காவின் அறிக்கைகள் எல்லாமே இலங்கை அரசுக்கு எதிரானவை, பக்கச்சார்பானவை. நாட்டுக்கு வெளியே செயற்படும் பிரிவினைவாதிகள் வெளிநாடுகளில் வாழும் தமிழர்களிடம் நிதி திரட்டி அதன் துணையோடு, அவர்கள் கூறும் தனி ஈழம் என்கிற இலக்கை அடைவதற்கு பக்கசார்பான யாஸ்மின் சூக்கா போன்ற நபர்கள் செயற்பட்டுக்கொண்டு தான் இருக்கிறார்கள். இவர்கள் சொல்லும் குற்றச்சாட்டுக்கள் எதற்குமே உரிய நியாயமான ஏற்கத்தக்க ஆதாரங்கள் எவையுமே இல்லை." என இலங்கை ராணுவத்தின் சார்பில் பேசவல்ல அதிகாரியான பிரிகேடியர் ருவான் வணிகசூரிய தெரிவித்தார். (செ-6)

# இந்தியா வெற்றி




பந்துவீச்சாளர்களின் சிறப்பான பந்துவீச்சினால் உலக இருபது தொடரின் குழு 2க்கான போட்டியில் இந்திய அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

5-வது இருபது-20 உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் பங்களா தேஷில் நடைபெற்று வருகிறது.

மிர்பூரில் நேற்று நடந்த லீக் போட்டியில் "பிரிவு-2" ல் இடம்பெற்ற இந்திய அணி, நடப்பு சம்பியனான மேற்கிந்தியத் தீவுகளை எதிர் கொண்டது. நாணயச்சுழற்சியில் வென்ற இந்திய அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு டரன் ஸ்மித், ஹெய்ல் ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. 11 ரன்களை மட்டுமே எடுத்த ஸ்மித் அதிக நேரம் நிலைக்கவில்லை. தொடர்ந்து ஹெய்ல 34 ரன்களில் வெளியேறினார். பின்னர் மிஸ்ராவின் சுழலில் சாமுவேல்ஸ் (18), பிராவோ (0) அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். ஜடேஜாவின் பந்துவீச்சில் கப்டன் சமி (11) ரசல் (7) வெளியேற சிம்மன்ஸ் 27 ரன்களில் ஆட்டமிழந்தார்.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவரில், 7 விக்கெட் இழப்பிற்கு 129 ரன்கள் எடுத்தது. 130 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக ஷிகார் தவானும், ரோகித் ஷர்மாவும் களமிறங்கினர்.

திடீரென்று சாமுவேல் பத்ரியின் பந்துவீச்சில் ஷிகார் தவான் டக்-அவுட்டாகி அதிர்ச்சி தந்தார். அடுத்து களமிறங்கிய விராட் கோலி ரோகித ஷர்மாவுடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைசதம் அடித்தனர். கோலி 62 ரன்களில் அவுட்டானார். அடுத்து களமிறங்கிய யுவராஜ் சிங் 10 ரன்களை மட்டுமே எடுத்து வெளியேறினார்.

இறுதியாக சுரேஷ் ரெய்னாவும், ரோகித் ஷர்மாவும் களத்தில் ஆட்டமிழக்காமல் இருந்தனர். இதையடுத்து, 19.4 ஓவரில் 3 விக்கெட்டை மட்டுமே இழந்து இந்திய அணி வெற்றி பெற்றது.

## மஹோற்சவ ஒளிபரப்பு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு மடத்துவெளி ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி ஆலய மஹோற்சவ ஒளிபரப்பு இன்று சிவன் தொலைக்காட்சியில் காண்பிக்கப்படவுள்ளது.

இதனை www.sivantv.com என்ற இணையத் தள முகவரியில் பார்க்கமுடியும். (எ)

# விரிவடைகிறது...

குறித்த பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களுக்கு சென்ற விசேட அதிரடிப்படையினர் வர்த்தக நிலையத்தின உரிமையாளரின் பெயர், அடையாள அட்டை இலக்கம், வியாபார நிலையத்தில் வேலை செய்யும் பணியாட்களின் பெயர், அடையாள அட்டை இலக்கம் போன்றவற்றை பதிவு செய்து வருகின்றனர்.

அதுமட்டுமன்றி கடந்த இரு மாதங்களுக்கு முன்னரும் சிவில் உடையில் தங்களை புலனாய்வு துறையினர் என அடையாளப்படுத்தி பதிவுகளை மேற்கொண்டு சென்றுள்ளதாக வியாபார நிலைய உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இராணுவத்தினர் தொடர்ந்தும் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருவதோடு யாழ்.காக்கை தீவுப் பகுதியிலும் நேற்று நண்பகல் திடீர் சுற்றிவளைப்பிலும் வாகனச் சோதனை நடவடிக்கையிலும் ஈடுபட்டிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் 25-வது அமர்வு ஜெனிவாவில் தற்போது இடம் பெற்று வரும் நிலையில் வடக்கில் இராணுவத்தினரின் கெடுபிடிகளும் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகிந்த அர...

மேற்கொள்ளும் என ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

முதல் கட்டம் எதிர்வரும் தேர்தலை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படுவதுடன் மேல் மற்றும் தென் மாகாணங்களின் ஆட்சியை கைப்பற்ற ஐக்கிய தேசியக் கட்சி எதிர்பாரத்துள்ளது.

இரண்டாவது கட்டமாக பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துமாறு வலியுறுத்தி எதிர்வரும் மார்ச் மாதம் பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படும். பொதுத் தேர்தலில் வெற்றிப்பெறுவது மூன்றாவது கட்டமாகும்.

மக்களில் `சிலர், மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் இந்த தேர்தல் அரசாங்கத்தை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்கான ஆரம்ப புள்ளியாக ஐக்கிய தேசியக் கட்சி கருதுகிறது.

இறந்து போன மரம் போல் இருக்கும் இந்த அரசாங்கத்தின் வேர்களை தளர்த்த வேண்டும். அப்போதுதான் மரத்தை சாய்க்க முடியும் எனவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார். (செ-6)

## வடக்கில் மீண்டும் விடுதலைப்...

டாட்டாளர்களையும், முன்னாள் போராளிகளையும், விடுதலைப் புலிகள் அமைப்புடன் கடந்த காலங்களில் தொடர்பை பேணியவர்கள் என்ற குற்றச்சாட்டின்பேரில்கைது நடவடிக்கையிலும்ஈடுபட்டுவருகினறனர்.

இலங்கையில் வட பகுதியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதற்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை ஐ.நா. அமர்விலும், ஈழத்திலும், இந்தியாவிலும் வலுப்பெற்றுவரும் நிலையில் இராணுவத்தினரின் அடக்கு முறைகள் அதிகரித்தவண்ணமேயுள்ளன.

இலங்கையில் யுத்தம் முடிவடைந்து ஐந்து ஆண்டுகளாகின்ற நிலையில், இறுதி யுத்தத்தில் தோற்கடிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் மீண்டும் அணிசேர முயற்சிக்கின்றார்கள் எனக் கூறி, யுத்தம் நடைபெற்ற வடபகுதியில் கிராமங்களை இராணுவத்தினர் சுற்றிவளைத்துத் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் அண்மைய தினங்களில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளின் தொடர்ச்சியாக யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை, சங்கரத்தை பகுதிகள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இராணுவத்தினரால் சுற்றிவளைக்கப்பட்டு சனிக்கிழமை காலை வரை தேடுதல் நடத்தப்பட்டுள்ளது.

கிளிநொச்சி - தர்மபுரம் பகுதியில் தேடப்பட்டு வந்த குற்றவாளி ஒருவர் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரை துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார், அவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக இத்தகைய சுற்றிவளைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவித்திருக்கின்றனர்.

**அரசு நாடகமாடுகிறது**

வெள்ளிக்கிழமை இரவு பத்து மணியளவில் ஊருக்குள் புகுந்த இராணுவத்தினரும் பொலிஸாரும், ஊரைச் சுற்றிவளைத்திருந்ததாகவும், சனிக்கிழமை அதிகாலை ஊரில் உள்ள இளைஞர்களைப் பொது இடம் ஒன்றிற்கு அழைத்துச் சென்று, அங்கு சுமார் 25 இளைஞர்களைத் தடுத்து வைத்திருந்ததாகவும் ஊர்வாசிகள் தம்மிடம் முறையிட்டிருந்ததாக வடமாகாண விவசாயத்துறை அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்தார்.

ஊருக்குப் புதியவர்களாகிய இவர்கள் அந்தப் பிரதேசத்திற்குப் பொறுப்பான கிராம சேவை அதிகாரியின் உதவியுடன் அடையாளம் காணப்பட்டு பின்னர் விடுதலை செய்யப்பட்டதாக பொலிஸ் அதிகாரி மற்றும் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவ அதிகாரி தெரிவித்த தகவல் மூலம் அறிந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை காரணமாகப் பதற்றமடைந்துள்ள அரசு, விடுதலைப்புலிகள் மீண்டும் தலையெடுத்திருக்கின்றார்கள் என்பதை சர்வதேசத்திற்குக் காட்டுவதற்காக நாடகமாடி, தமிழ் மக்களை அச்சுறுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

இதேவேளை, தேசிய பாதுகாப்பு கருதி இந்தத் தேடுதல் நடவடிக்கைகளில் இராணுவத்தினர ஈடுபட்டுள்ளதாக இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

தர்மபுரத்தில் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பில் கோபி என்ற விடுதலைப் புலி சந்தேகநபரைத் தேடி பொலிஸாருடன் இணைந்து இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ருவன் வணிக சூரிய தமிழோசையிடம் கூறினார்.

மீண்டும் விடுதலைப் புலிகள் அமைப்பு தலைதூக்காமல் இருப்பதை உறுதி செய்வதே தமது நோக்கம் என்றும் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த இரண்டு வாரத்திற்குள் வடக்கில் சுமார் 20 பேர்வரை பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரணைகளுக்குட் படுத்தப்பட்டுள்ளனா என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## இரும்பு வியா...

விக்கப்படுகின்றது.


நேற்றுமுன்தினம் வட்டுக்கோட்டை பிரதேசத்தில் இராணுவத்தினர் சுற்றிவளைப்பு தேடுதல் ஒன்றினை மேற்கொண்டிருந்த தன் பின்னணியிலேயே இக் கைது நடவடிக்கை இடம்பெற்றிருக்கலாம் என கூறப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் கைது செய்யப்பட்ட நபருடன் யாழ்ப்பாணத்தில் மட்டும் மூன்று பேர் ரி.ஐ.டியினால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-

## மரண அறிவித்தல்

### அமரர் பொன்னுத்துரை இரவீந்திரநாதன்

(ஓய்வுநிலை பரிசாரகர், வல்வெட்டித்துறை வைத்தியசாலை)



யாழ்ப்பாணம் அரியாலை கன்கரத்தினம் வீதியை பிறப்பிடமாகவும் வயல், அல்வாய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை இரவீந்திரநாதன் 23.03.2014 ஞாயிறு காலை 7.00மணியளவில் காலமாகிவிட்டார்.

அன்னார் அல்வாய் தெற்கு காலஞ்சென்ற பொன்னுத்துரை இராசம்மா தம்பதியினரின் அன்பு மகனும், செல்வமாணிக்கம் இராசம்மா தம்பதியினரின் மருமகனும், செல்வனேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி தயாளன் சுகன்யா, சஞ்சீவ் (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், மருதங்கேணி) றஜீவ், பிரணவன் (ஆசிரியர், அல்-அஸார் முஸ்லிம் ம.வி.மன்னார்) ஆகியோரின் அன்புத் தந்தையும் திருமதி சண்முகவேல் ரவீந்திராதேவி, ஜெயநாதன், விஜயநாதன் (சுவிஸ்), வரதன் நிர்மலா (லண்டன்) காலஞ்சென்ற ரகு ஆகியோரின் பாசமிகு சகோதரனும், செல்வலிங்கம், தெய்வம் (டென்மார்க்), மகாதேவன், குமரகுரு (சுவிஸ்), எதிர்வீரசிங்கம் (சுவிஸ்), சுபாகு அமுதா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 24.03.2014 திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பங்குவேம்படி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதனை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"இராஜ செல்வம்"
வயல், அல்வாய் வடக்கு, அல்வாய்.

தகவல்:குடும்பத்தினர். (சி-6824)

## 'எனது அம்...

இன்னும் உறுதிப்படுத்த முடியவில்லை. அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நான் பா.விபூஷிகா. தாழ்மையுடன் வேண்டுகோள் விடுப்பது யாதெனில் எனது அம்மாவையும் விடுதலை செய்து தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

என்னையும் எனது அம்மாவையும் கடந்த 13.03.2014 அன்று பிற்பகல் 4.00 மணியளவில் பொய்க்குற்றம் சுமத்தி அதிக இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்புடன் எம்மைப் பாரிய குற்றச் செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகளைப் போல எம்மை நடத்தி, எம்மைப் பயமுறுத்தி எனது அம்மாவைக் கால்களால் அடித்தும் தலைமயிரைப் பிடித்து இழுத்தும் கன்னங்களில் அறைந்தும் எம்மை பொய்யான தகவல்கள் எழுதப்பட்ட கடிதத்தில் என்னிடம் இருந்தும் எனது அம்மாவிடம் இருந்தும் கையொபபம் பெறப்பட்டன.

ஆனால் நானோ எனது அம்மாவோ எந்தவிதமான குற்றச்செயல்களிலும் ஈடுபடவில்லை.

எனது அம்மா ஒரு அப்பாவி. எனது 3 ஆண் சகோதரர்களும், ஏற்கெனவே பிரிந்த நிலையில் தற்பொழுது எனது பூப்புனித நீராட்டு விழாக் காலப்பகுதியில் எனது அம்மாவையும் கைது செய்துள்ளபடியால், நான் எந்த உதவியுமின்றி எனது அம்மா இருந்தும் அநாதையாகவே இருக்கின்றேன்.

ஆகவே எந்த வழியிலாவது எனது அம்மாவின் மீது சுமத்தப்பட்டுள்ள பொய்க்குற்றச் சாட்டை மீளப்பெற்று, எனது அமமாவை என்னுடன் மிக விரைவில் சேர்ந்து வாழ உதவுமாறு மகவும் மன்றாட்டமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக்கு உண்மையுள்ள,
பா.விபூஷிகா

என அக்கடிதத்தில தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)

## முக்கிய தமிழ்த் தலை...

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கிய தலைவர்கள் ஜெனிவாவுக்குப் படையெடுத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா லண்டனில் இருந்து ஜெனிவா செல்கிறார். மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று முன்தினம் ஜெனிவாவுக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

நான்கு நாட்களுக்கு முன்னரே, ஜெனிவாவில் இருந்து கொழும்பு திரும்பியிருந்த, நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும், சுரேஸ் பிரேமச்சந்திரனும் நேற்று கொழும்பில் இருந்து மீண்டும் ஜெனிவா புறப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான சி.சிறிதரன் ஏற்கெனவே ஜெனிவாவில் தங்கியுள்ளார். தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தலைவர் இரா.சம்பந்தனும் இறுதி நேரத்தில் ஜெனிவா செல்லவே திட்டமிட்டிருந்தார்.

அவரது பயணத்துக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்ட நிலையில், தற்போதைய சூழலில் அவரது பயணம் அவசியமில்லை என்று உணரப்பட்டதால், அந்தப் பயணத் திட்டம் கைவிடப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.கே.சிவாஜிலங்கம், அனந்தி சசிதரன் ஆகியோர் ஜெனிவாவிலேயே தங்கியுள்ளனர்.

மேலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராசா கஜேந்திரன், தேசிய அமைப்பாளரும் சட்டதரணியுமான விஸ்வலிங்கம் மணிவண்ணன் ஆகியோர் முன்னரே ஜெனிவா சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

Digital இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ்
பொதி விநியோக சேவை
விஷேட கட்டண சலுகைகள்

- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவனம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER
மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி
(சம்பத்வங்கி முன்பாக)
யாழ்ப்பாணம்
தொடர்புகளுக்கு - 021 793 8330, 0777 151 101
(C-6822)

## ஜெனிவாவில் ஏற்பட்...

பில் பல நாடுகள் அமெரிக்காவின் அழுத்தங்களுக்கு அடிப்பணிந்துள்ளன.

இதனால் ஜெனிவா வாக்கெடுப்பின் போது இந்த நாடுகள் நடுநிலையான அணுகுமுறையை கடைப்பிடிகும் என எதிர்பார்க்க முடியாது.

பல நாடுகள்தமது அரசியல்இலக்குகளை அடையும் நோக்கத்தை கொண்டுள்ளன. இது இலங்கை தொடர்பான வாக்கெடுப்பை தீர்மானிப்பதில் பெரிய பங்கை வகிக்கின்றது எனவும் மகிந்த சமரசிங்க குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு எதிரான பிரேரணை ஜெனிவா மனித உரிமை பேரவையில் இந்த வாரம் விவாதத்திற்கு எடுத்து கொள்ளப்படவுள்ளதுடன், பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா முன்வைத்துள்ள இந்த பிரேரணையில் இலங்கையில் நடைபெற்ற போரின் போதும் போருக்கு பின்னரும் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பாக ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பெரும்பான்மையான வாக்குகளினால் நிறைவேற்றப்பட்டாலும் அந்த பிரேரணையை ஏற்றுக் கொள்ள போவதிலலை என ஏற்கெனவே தெரிவித்துள்ள இலங்கை அரசாங்கம், மனித உரிமை பிரச்சினை தொடர்பில் உள்நாட்டு பொறிமுறையிலான விசாரணைகள்தொடரும்என கூறிவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-6)

நிரந்தர தொழில் வாய்ப்பு
வருமானம் பிரச்சினையா??? தீர்க்க நிரந்தர தொழில் வாய்ப்பு. 18-50 வயது இருபாலாருக்கும் கொழும்பை அண்மித்த பிரதான தொழிற்சாலைகளில் (ஜேம் /கோடியல் / டின்மீன் / காமெண்ட் / சொக்லெட் / பெயின்ட் / காட்போட் / பிளாஸ்டிக் / கிளவுஸ் மற்றும் பல...) * உற்பத்தி * லேபல் * பொதியிடல் *தரம்பிரித்தல் பிரிவுக்கு ஆட்கள் உடனடியாக தேவை. உணவு + தங்குமிடம் சகாய விலைகளில் (நண்பர்கள் + குழுக்களாகவும் சேரலாம்) சம்பளம் 19,000/-, 26000/-, 35000/- தொடர்புகளுக்கு முந்துங்கள் : 077 - 5561883
(C-6823)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.03.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org